மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியங்கள் உண்டு

# உதயன்

24

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 339 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 14, வெள்ளி 31.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

## மீட்புப் பணிகள் மந்தம்: அந்தரிக்கின்றனர் மக்கள்



கொழும்பு, ஒக்.31
பதுளை, கொஸ்லாந்தை – மீரியபெத்த பகுதி யில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் மண் சரிவில் பலர் புதையுண்ட நிலையில், அங்கு மீட்புப் பணிகள் ஆமைவேகத் தில் நடைபெற் றுக் கொண்டிருக்கின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குமுறுகின்றனர். மீட்புப் பணிக்கென கொண்டுவரப்பட்டுள்ள இராணுவத்தினரின் செயற்பாடுகள் திருப்தியாக இல்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

- 63 வீடுகளுக்குச் சேதம்
- 148 பேர் வரையில் மண்ணில் புதையுண்டிருக்கக் கூடும் என அச்சம்.
- 6 வயதுச் சிறுமி உட்பட நேற்று மூன்று சடலங்கள் மீட்பு
- இதுவரை மொத்தம் 19 சடலங்கள் மீட்பு
- பாதிக்கப்பட்ட சுமார் 808 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# கை கொடுக்க வடக்கு தயார்

## மலையக மக்களுக்கான உதவிகள் குறித்து கூடி ஆராய்கின்றது வடக்கு அரசு

யாழ்ப்பாணம், ஒக். 31
மலைகத்தில் ஏற்பட்ட நிலச் சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக் கைகளில் வடக்கு மாகாண சபை மும்முரமாக ஈடுபட்டுள் ளது. அந்த மக்களுக்கு நிவா ரணம் வழங்குவதற்காக, வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் சகல உறுப்பினர்களுக்கும் இன்று விசேட கூட்டம் இடம்பெறவுள் ளது.
வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தால் நேற்று இரவு விடுக்கப்பட்ட விசேட செய்திக் குறிப்பில்,
"மலையகத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பில் வடக்கு மாகாண சபை உத விகளைச் செய்யவுள்ளது.
எவ்வாறான உதவிகளை வழங்குவது, எப்படி வழங்கு வது, எப்போது அவற்றை வழங்குவது மற்றும் உதவி களை எவ்வாறு பெற்றுக் கொள்வது உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாணசபையின் சகல உறுப்பினர்களுக்கும் பேர

19 ஆம் பக்கம் பார்க்க

## மலையக மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

### பல்வேறு தரப்பினரிடமிருந்தும் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31
மலையகத்தில் ஏற்பட்ட இடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். அவலத் திலுள்ள மக்களுக்கு அவசர அவசரமாக உதவிகள் செய்யப்பட வேண்டியுள்ள தால், மனித நேயம் மிக்கவர் களை இந்தப் பணியில் பங்கெடுக்குமாறு கோரியுள் ளனர்.
வடக்கு மாகாண முதல மைச்சர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவார ணங்கள் வழங்க கடமைப் பட்டுள்ளோம். இது தொடர் பில் நாம் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கவுள் ளோம் என்று தெரிவித்துள் ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பிரதித் தலைவரும், தமிழரசுக் கட்சியின் தலை வருமான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதி

19 ஆம் பக்கம் பார்க்க

## மண்சரிவில் இறந்தோருக்கு வடமாகாண சபை இரங்கல்

### பலரும் அனுதாபம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
மலையகத்தில் ஏற்பட்ட இடரில் உயிரிழந்த மக்க ளுக்கு வடக்கு மாகாண மக் களின் சார்பிலும், வடக்கு மாகாண சபையின் சார்பி லும் ஆழ்ந்த அனுதாபத்தை யும், இரங்கலையும் தெரி விக்கின்றோம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார். அத்துடன் வடக் கின் பல்வேறு அமைப்புக்க ளும் தமது இரங்கல்களைத் தெரிவித்துள்ளன.
வடக்கு மாகாண முதலமைச் சரால் விடுக்கப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில், "ஏற்கனவே பல இன்னல் களுக்கு மத்தியில் வாழ் கின்ற மலையக மக்களுக்கு இந்த இயற்கை இடரில் பேரழிவை ஏற்படுத்தியுள் ளமை அனைவரின் உள் ளங்களையும் வேதனைக் குள்ளாக்கியுள்ளது.
இந்த இடரில் உயிரிழந்த எமது சகோதர, சகோதரியர், குழந்தைகளை நினைவு றுத்தி வடக்கு மாகாண சபையின் சார்பிலும், வட புலத்திலுள்ள அனைத்து மக்கள் சார்பாகவும், எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் அவர் தம் உறவுகளுக்குத் தெரிவித்

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் குறைகளை கேட்கவேண்டும் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.31
வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ் வரன், அதிகாரி, நீதியரசர் என்பதற்கு அப்பால் அவர் ஒரு அடையாளம். அவர் நெடுந்தீவு தொடக்கம் கொக் குத்தொடுவாய் வரை மக்க ளிடம் சென்று மக்கள் குறை

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு நீதிமன்றத்தில் நேற்று இந்திய மீனவர்களுக்குத் தூக்கு

### கொந்தளிக்கின்றது தமிழகம்

கொழும்பு, ஒக்.31
போதைப் பொருள் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படை யால் 2011ஆம் ஆண்டு கைது செய் யப்பட்ட 5 இந்திய மீனவர்களுக்கு நேற்று சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கப்பட்டது.

விரிவான தகவல்கள் 3 ஆம் பக்கத்தில்






## குட்டு வெளிப்பட்டுவிடும் என்பதால் பதுங்குகின்றது கொழும்பு அரசு

### சாடுகின்றார் வடக்கு சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.31
போர் காரணமாக ஏற்பட்ட உளநலப் பிரச்சினை உட் படப் பலவகைகளில் மோச மாக பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு, உதவுவதற்கு நட வடிக்கைகள் எடுத்தால் உண் மைகள் வெளிவந்துவிடும் என்று அரசு பயப்படுகின் றது. அதனால்தான் தானும் அவற்றைச்செய்யாது, ஏனைய நிறுவனங்கள் உதவுவதை யும் தடுத்து வைத்துள்ளது. – இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்

19 ஆம் பக்கம் பார்க்க

## போரால் தொலைந்த மனம் மீளவும் திரும்பி வரவில்லை

### வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.31
வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் சுமார் 30 ஆண்டுகாலம் சித்த அழகைத் தொலைத்துவிடக்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில்; தடுக்க உதவவுள்ளது ஜப்பான்

யாழ்ப்பாணம், ஒக். 31
சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ள நிலையில் அதனைத் பரவாது தடுப்பது தொடர்பிலான தொழில் நுட்ப ஆய்வுக்கு ஜப்பான் உத வுள்ளதாகத் தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடான சந்திப்பின் போதே, இலங்கைக் கான ஜப்பானியத் தூதுவரால் இந்த உறுதிமொழி வழங்கப்பட் டுள்ளது.
யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொகிபுட்டே, வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற, சந் திப்புத் தொடர்பில் முதலமைச்சர்

21 ஆம் பக்கம் பார்க்க

புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்.
- தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்.)

# கண்மூடித் திறப்பதற்குள் கிராமமே புதையுண்டது

## கடலலைபோல் திரண்டு வந்தது மண்மலை; மண் சரிவில் இருந்து தப்பியோரின் திகில் அனுபவம்

கொழும்பு, ஒக்.31
" சுமார் 300 அடி உயரம் இருக்கும் அந்த மலை. அங்கிருந்து திடீரென மண்மேடுகள் சரிந்துவந்தன. சாதாரணமாக வரவில்லை. கடல் அலை போல் திரண்டுவந்தன. கண்மூடித் திறப்பதற்குள் மண்மேகம்எம்மைசூழ்ந்துக்கொண்டது. 30 நொடிக்குள் அனைத்து பகுதிகளும் புதையுண்டன.
மாமுனீஸ்வரார் கோவிலுக்கு அருகில்இருந்தஆலமரமொன்று மண்ணில் சிக்கி அரை கிலோமீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆலமரத்துக்கே இந்த நிலை என்றால், மண்ணுக்குள் சிக்குண்ட மக்களுக்கு என்ன நடத்திருக்கும்? ஐயோ! நினைத்து பார்க்கவே முடியவில்லை.
எங்களுக்கு இப்படி நடக்கும் என நாங்கள் கனவில்கூட நினைத்து பார்க்கவில்லை. நாங்கள் என்ன பாவம் செய்தோமோ தெரியவில்லை. இனி நாங்கள் என்னசெய்ய போகின்றோம் என்றும் புரியவில்லை. ஐயோ....கடவுளே.... ஏன் ஐயா எங்களுக்கு மட்டும் இப்படி நடக்குது"
இவ்வாறு மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டதை நேரில் பார்த்தவர்களும், மண்சரிந்து வரும்போது சத்தத்தைக் கேட்டு தப்பியோடியவர்களும் அந்த சம்பம் குறித்து திகிலுடன் விவரித்தனர்.
" காலை 7 மணி தாண்டிருக்கும். அப்போது பெரும் சத்தமொன்று கேட்டது. நான் திடீரென வெளியில் வந்து பார்த்தேன். ஒரே புகை மண்டலமாக இருந்தது. சற்றுநேரத்தின் பின்னர் கீழே இருந்த லயன்கள் யாவும் மண்ணுக்குள் புதையுண்டதை கண்டேன். செய்வதறியாது கத்தினேன். நாங்களும் எங்கள் பகுதியிலிருந்து மேட்டு லயத்தை நோக்கி ஓடினோம்" என்று சம்பவம் இடம்பெற்ற தோட்டத்துக்கு சற்று அருகில் வாழும் முதியவர் ஒருவர் தெரிவித்தார்.
" எமது தோட்டத்திலுள்ள மாமுனீஸ்வரர் கோவில் 100 வருடங்கள் பழமைவாய்ந்தது. அவருக்கு 20 அடியில் சிலை வைக்கப்பட்டிருந்தது. அந்த சிலையும் மண்ணுக்குள் புதையுண்டுள்ளது. அத்துடன், ஆலயத்தில் இருந்த ஆலமரம் ஒன்று சுமார் அரைக் கிலோமீற்றருக்கு அப்பாலே கிடந்தது." என்று அச்சத்துடன் கூறினார் மண் சரிவில் இருந்து தப்பிய பிரதேச வாசியொருவர். (ற-சி)



மேலும் தகவல்கள் 9ஆம் பக்கத்தில்

# “தம்பியைக் கூட்டிக்கொண்டு ஓடு” என்ற அம்மாவும் அப்பாவும் செத்திட்டாங்களே..!

## இனி நாம் என்ன செய்வோம் என கதறியழும் சிறுமி

கொழும்பு, ஒக்.11
"சின்னபுள்ள....நீ தம்பிய கூட்டிக்கிட்டு ஓடு...நானும், அப்பாவும் பைல்கள எடுத்துக்கிட்டு வாரோம்" எனக்கூறி எங்கள அனுப்பிவிட்டு. அவங்க ரெண்டுபேரும் வீட்டுக்கு போனாங்க. கொஞ்சத்தூரம் போயிட்டு, நான் திரும்பி பார்த்தேன். அப்போ, அம்மா, அப்பா ரெண்டு பேரையும் மண் மூடிருச்சி..."- இவ்வாறு கண்ணீருடன் தெரிவித்தாள் 14 வயதுடைய கஜினி எனும் சிறுமி.
" சின்னபுள்ள....நீ தம்பிய கூட்டிக்கிட்டு ஓடு...நானும், அப்பாவும் பைல்கள எடுத்துக்கிட்டுவாரோம்" எனக்கூறி எங்கள அனுப்பிவிட்டு, அவங்க ரெண்டுபேரும் வீட்டுக்கு போனாங்க. கொஞ்சதூரம்போயிட்டு, நா திரும்பி பார்த்தேன். அப்போ, அம்மா, அப்பா ரெண்டு பேரையும் மண் மூடிருச்சி..."
"அப்பாரவிச்சந்திரன் (வயது33), அம்மா ராஜகுமாரி (வயது33), தம்பி சுரேஷ்குமார் (வயது12). நான்தான் (கஜினி - வயது14) மூத்தவள். அன்று புதன்கிழமை காலை ஏதோ பெரிய சத்தம் கேட்டது. அப்போ ஏதோ மண்மேடு சரிந்து வர்ரதா சொன்னாங்க, இதனால என்னை எனது தம்பியை அழைத்துகொண்டு செல்லும் படி கூறிவிட்டு அம்மாவும் அப்பாவும் பைல்களை எடுத்திட்டுவர்தா சொல்லிட்டுகொஞ்ச தூரம் போனாங்க. அவங்க அப்படி போரப்போ நான் கொஞ்ச தூரம் சென்று திரும்பி பார்த்தேன்.. அப்போ அம்மாவையும் அப்பாவையும் மண் மூடி என் கண்முன்னே காணம போய்ட்டாங்க... அவங்கதிரும்பி வரமாட்டாங்க... நாங்க இப்போ தாத்தா பாட்டியோட தான் இருக்கோம்.." என கண்ணீருடன் மேலும் கூறினாள் அந்தச் சிறுமி. (ற-சி)



# பத்து தகரங்களுடன் என்ன செய்வது? எங்கே போவது?

## அவலப்படும் மக்கள் கேள்வி

பதுளை, கொஸ்லந்தை - மீறியபெத்த தோட்டத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டதையடுத்து. அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழும் மக்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள னர்.
எனினும், அந்த பாதுகாப்பான இடம் எங்குள்ளது என அதிகாரிகள் கூறவில்லை என்றும், தோட்டங்களில் இருந்து வெளியேறினால் 10 தகரங்கள் மாத்திரமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் குறித்த பகுதிகளில் வாழும் மக்கள் தெரிவிக்கினறனர்.
" திடீரென எம்மை வெளியேறுமாறு சொன்னால் நாம் எங்கு செல்வது? இது மாத கடைசி எமது கையில் காசும் இல்லை. 10 தகரங்களை வைத்து என்ன செய்வது" என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகள் உரிய வகையில் வழங்கப்படுவதில்லை. பார்வையிட வரும் அரசியல் பிரமுகர்களும் அரசியல் பரப்புரையிலேயே ஈடுபடுகின்றனர்.

# இரு அபிவிருத்தி வங்கிகள் ஒருங்கிணைக்கப்படும்

நிதித்துறையினை ஸ்திரப்படுத்துவதற்காக, அடுத்த ஆண்டு இரண்டு அபிவிருத்தி வங்கிகள் ஒருங்கிணைக்கப்படவுள்ளதுஎன்று வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.
அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், வங்கித் தொழில் மற்றும் நிதித்துறைக்கான பல்வேறு முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன.
மத்திய வங்கிக்கான் மூலதனப்படுத்தல் 50 பில்லியனாக காணப்படுகின்றது. இந்த நாட்டில் நிதி முறைமையினை உறுதிப்படுத்துவதற்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டு வருகின்றது.
நிதித்துறையினை ஸ்திரப்படுத்துவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, அடுத்த ஆண்டு இரண்டு அபிவிருத்தி வங்கிகள் ஒருங்கிணைக்கப்படவுள்ளன.
இலங்கை வங்கியை வலுப்படுத்துவதற்கு 10 பில்லியன் மூலதனமாக வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. வங்கிகளில் வைப்பிலிட்டோருக்கான பாதுகாப்பை வழங்கும் வகையில் வைப்புக் காப்புறுதியை 50 சதவீதமாக அதிகரிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. (ற-5)




# கரும்பு பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு நிதி

கரும்புப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக, கரும்புக்கான பண்ணைக் கொள்வனவு விலையை மெற்றிக் தொன்னுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்க வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.
அரசுக்குச் சொந்தமான குருநாகல் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட கம்பனிகள் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளன. அவை திறைசேரிக்கான பங்கு இலாபங்களையும் செலுத்தியுள்ளன.
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்ட கம்பனிகளுக்கான அனைத்து காணிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு, 100 மில்லியன் ரூபா மூலதனப் பங்களிப்புடன், தனியான அரச உடைமை பெருந்தோட்ட கம்பனியை உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது.
அரச நிர்மான கம்பனிகளைஸ்திரப்படுத்தும்வகையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச பொறியியல் உசாவுகைப் பணியகம் மற்றும் அரச அபிவிருத்தி நிர்மாணக் கம்பனி என்பவற்றிற்கு மூலதனப் பங்களிப்பாக 3 ஆயிரம் மில்லியன் ரூபா வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.
2012 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட ஹிங்குறானை மற்றும் பெலவத்தை சீனி பெருந்தோட்ட கைத்தொழில் அரசால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. சீனி உற்பத்தியினை அதிகரிப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஊவா - கிழக்கு மாகாணங்களிலுள்ள 25 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும்.
2015 - 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கை சீனிக் கம்பனியின் கீழ், கந்தளாய், ஹிங்குறான மற்றும் பெலவத்தை ஆகிய இடங்களில் நவீன சீனி தயாரிப்பு தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ற-5)

## விபத்துகள்

### பஸ்-லொறி விபத்தில் மூவர் காயம்

பளைப் பகுதியில் - ஏ9 வீதியில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்தனர். பளை வைத்தியசாலைக்கு அருகில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் லொறியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது. அதில் லொறிச் சாரதியும் அதில் பயணம் செய்த இருவரும் காயமடைந்தனர். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர்களான இரத்தினசிங்கம் கருணாகரன் (வயது 40), கதிரவேலு அபிசன் (வயது 28) ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மற்றும் ஒருவர் சிறுகாயங்களுடன் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் உயிரிழந்துள்ளார். குறித்தலொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் வத்தளை நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளார். (ற)

### விபத்தில் சிசு உட்பட இருவர் சாவு

இங்கிரியவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில், 7 மாத சிசு உட்பட 2 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக் குறித்த மேலதிக தகவல்களைப் பெறமுடியவில்லை. (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 14 வெள்ளி (31.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 339

# இந்திய மீனவர்களுக்குத் தூக்கு

# முழுத் தமிழகமும் கொந்தளிப்பு

## ரயில் தண்டவாளம் உடைப்பு; ராமேஸ்வரம் மீனவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்ரோபர் 31

**போதைப்பொருள் கடத்தியதாக இலங்கைக் கடற்படையால் கடந்த 2011 ஆம் ஆண்டு கைதான 5 இந்திய மீனவர்களுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுச் சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.**

தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்களுக்குக் கொழும்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தகவல் வெளியானதும், கொந்தளிப்படைந்த ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு பஸ் ஒன்று எரிக்கப்பட்டுள்ளது. ரயில் தண்டவாளம் உடைப்பு காரணமாக ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு ராமேஸ்வரம் அருகே உள்ள தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். அப் போது ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் 5 மீனவர்களையும் படகில் போதைப் பொருள் வைத்திருந்தனர் எனக் கூறி அவர்களைக் கைது செய்தனர். பிரசாத், அகஸ்டஸ், வில்சன், எமர்சன், லாங்லட் என்ற 5 இந்திய மீனவர்களும் கைதாகி வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு கொழும்பு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வருமானத்தை நோக்காக கொண்டு உணவு நிலையங்களுக்கு அனுமதி

### உள்ளூராட்சிச் சபைகள் மீது வணிகர் கழகம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.ஒக்.31

உள்ளூராட்சி சபைகள் தங்களது வருமானத்தை நோக்காகக் கொண்டு உணவு உற்பத்தி நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளன. ஆனால் சுகாதார சேவைகள் திணைக்களம் நோய்களின் தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் உற்பத்தியாளர்கள் ஒத்துழைப்பு வழங்கிச் சுகாதாரமான உற்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக தலைவர்கள் கொதிப்பு

### தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவரை விடுவிக்கவும் கோரிக்கை

சென்னை, ஒக். 31

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் ஐந்து பேரையும் விடுவிக்க இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனத் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தி.மு.கவை சேர்ந்த கே.எஸ். ராதாகிருஷ்ணன், தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பு வேதனையை தருகிறது என்றும், சாவுத் தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மத்திய அரசு பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்வதையே தீர்ப்பு காட்டுகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ள அ.தி.மு.க பேச்சாளர் ஆவடி குமார், மீனவர்களுக்கு தீர்வு கிடைக்க தமிழக அரசு எந்த நடவடிக்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் விடயத்தில் டில்லி கொழும்பு அரசுக்கு பதிலடி

### படகுகளை விடுவிக்காமல் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கை அரசுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் இந்திய மத்திய அரசும் களமிறங்கியுள்ளது. எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்காமல் மீனவர்களை மாத்திரம் இலங்கை விடுதலை செய்வது போன்று இந்திய அரசும் தற்போது மீனவர்களை மாத்திரம் விடுதலை செய்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து பிடிக்கப்பட்ட 15 இலங்கை மீனவர்கள் நேற்றுக் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களின் படகுகள் விடுவிக்கப் படவில்லை.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து, தமிழக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இதன்போது இலங் கைக் கடற்படையினர், இந்திய மீனவர்களை அவர்களது படகுகளுடன் கைது செய்கின்றனர். மீனவர்கள் நீதிமன்ற நடவடிக்கையினூடாக விடுதலை செய்யப்படுகின்றனர். ஆனாலும் அவர்களது படகுகள் விடுவிக்கப்படுவதில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு பண்பாட்டுப் பெருவிழா நாளை

யாழ்ப்பாணம், ஒக்.31

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நிலைமை குறித்து ஐ.நா அதிகாரி ஆராய்வு

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனை ஐ.நா அதிகாரியான பிலிப் டிவேட் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி அரச செயலகத்தில் இந்தச் சந்திப்பு 20 நிமிடங்கள் வரை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மினி பஸ் மோதியதால் நாவாந்துறை வாசி சாவு

### ஒட்டுமடத்தில் நேற்றுச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக். 31

மாதகலில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் மினி பஸ் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். நாவாந்துறையைச் சேர்ந்த கந்தையா நிக்சன் (வயது-41)

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 24 ஆண்டுகள்

### நினைவு நிகழ்வு நேற்று மன்னாரில்



மன்னார், ஒக் 31

வடக்கில் இருந்து 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 24 வருடங்கள் நிறைவு நிகழ்வு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லிணக்கமாக வாழ்வோம் பலமாய் எழுவோம்' எனும் கருப்பொருளில் இந்த நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் நஜா முஹம்மத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விசேட சொற் பொழிவாளராக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைவர் பொறியியலாளர் எம்.எம்.எம்.அப்துர் ரஹ்மான், விசேட

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நீரினாலும் உணவினாலும் யாழில் 3, 810 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.31

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் நீரினாலும் உணவினாலும் 3 ஆயிரத்து 810 பேர் பாதிப்படைந்துள்ளனர். இந்தத் தகவல் அரச வைத்தியசாலைகளில் பெறப்பட்டவை. ஆனால் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்கள் இதனைவிட அதிகமாக இருக்கலாம் என்று வடமாகண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 59 ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்கள் மற்றும் யூஸ் உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்றபோது

(22 ஆம் பக்கம் பார்க்க)

## உரிய விதியைப் பின்பற்றாத ஐஸ்கிறீம் உற்பத்திக்கு தடை

### சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.31

எதிர்காலத்தில் ஏற்படும் தொற்றுநோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய விதிமுறைகளைப் பின்பற்றாத எந்த ஐஸ்கிறீம் உற்பத்திகளுக்கும் இனி அனுமதி வழங்கப்படமாட்டாது. உரிய விதிமுறைகளை விரைவாக மேற்கொள்ளும் பட்சத்தில் 24 மணிநேரத்தில் உற்பத்தி நிலை

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாசிப்பு மாத நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் பொது நூலகத்தால் நூலக மண் டபத்தில் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஸ்ரிக்கர் வெளியீடும், இன்று மாணவர்களின் வாசிப்பு திறன் குறை வதற்கு காரணம் குடும்ப சுழலா? சமூ கச் சுழலா? என்ற தலைப்பிலான பட்டி மன்றமும் நடைபெறும். (வ-ரி)

## கைப்பணித் துறைசார் கலைஞர்கள் ஒன்றிணையும் மாபெரும் மாநாடு

யாழ்ப்பாணம்.ஒக்.31

நாடளாவியரீதியில் உள்ள சிறுகைத்தொழில் கைவினை கைப்பணித் துறைசார்ந்த கலைஞர்களை ஒன்றிணைக்கும் மாபெரும் மாநாடு நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளதாக பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சின் செயலாளர் என்.சிவஞானசோதி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்த மாநாட்டுக்காக 3 ஆயி ரத்துக்கு மேற்பட்ட கலைஞர்கள் வரவழைக்கப்படவுள்ளனர். விசேடமாக வடக்கிலிருந்து 600 கலைஞர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றவுள்ளனர். குறைந்தது 4 வருட கருத்திட்டத்தில். சிறு கைத்தொழிலுடன் தொடர்புடைய கைப்பணி உற்பத்திகளை உற்பத்தி செய்யும் கலைஞர்கள் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் மற்றும் அவர்களது தேவைப் பாடுகள் தொடர்பான கருத்துக்களைப் பெறும் முகமாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைவினை கைப்பணியை அபிவிருத்தி செய்வதற்கு ஜப்பான் அரசு 5 ஆயிரம் மில்லியன் நிதியை வழங்குவதற்கு முன் வந்துள்ளது. இந்த நிதியைக் கொண்டு கைப்பணியாளர் களுக்கு எத்தகைய திட்டங்ளை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பில் மாநாட்டில் முடிவெடுக்கப்படும்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப் படும் கைவினை உற்பத் திகளை ஏற்றுமதி செய்வதை நோக்காகவும், உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் உற்பத்திகளை தயாரித்தல் தொடர்பில் உரிய ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

குறித்த துறை 4 வருடங்களுக்கான நீண்டகால கருத் திட்டத்தை கொண்டிருப்பதால் தற்போதைய தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அவர்களுக்கான பயிற்சிகள் தேவைப்பட்டால் பயிற்சிகள் வழங்குவ தற்கான ஏற்பாடுகளையும், இதனைவிட அவர்களுக் கான சந்தை வசதி மற்றும் தொழில் முயற்சிகான கடன் வசதி என்பவற்றை தேவைக்கு ஏற்ப வழங்குவதற்கான ஏற்பாடு களும் மேற்கொள் ளப்படும்.

இந்தமாநாட்டில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருந்து சிறந்த கைப்பணி உற்பத்திக் கலைஞர்கள் வரவழைக்கப்படவுள்ளனர். ஏற்கனவே தமது தொழிற்துறையில் முன்னேறி வருபவர் களுக்குச் சாத கமாக அவர்களுக்கான முக்கிய தேவைகள் கோரிக்கைகளாகப் பெறப்பட்டு அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக உரிய கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். இதனைவிட புதிய தொழில் முயற்சிகளும் தெரிவு செய்யப்படும். அடுத்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு துறைசார்ந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும். நவம்பர் மாதம் நடுப் பகுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் கலந்து கொள்வர் என்றும் தெரிவித்துள்ளார். (வ-14)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பிரியங்கா நிஷாந்தன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி றெஜிவதனி ஜெயசிங்கம்
அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவர்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி: 17274)(5.6)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை சமூகம்.

### மரண அறிவித்தல்

#### திருமதி மகேஸ்வரி செல்லத்துரை



யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நாவற்குழி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்லத்துரை 24.10.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் - மரியமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவியும், நடராசா (கனடா), யோகராசா (கனடா), துரைராசா (இலங்கை, அசோக் பந்தல் சேவை), பஞ்சாச்சரம் (இலங்கை), திருச்செல்வம் (பிரான்ஸ்), குணசேகரம் (லண்டன்), குணசீலன் (கனடா), மோகன் (லண்டன்), அருந்தவராசாத்தி (கனடா), அன்ரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், நாகேஸ்வரி, மல்லிகா, கமலாம்பிகை, மேரிறஞ்சினி, விஜயராணி, நன்சி, கலா, சுகந்தினி, அனுசியா, சுதாகரன், பாமினி, கோகுலராணி ஆகியோரின் அன்பு மாமியும், வினோத், விமல், விஜிதா, வினோஜா, நிஷாந்தன், மயூரன், வசந்தன், அசோக், தஜீவன், வசிகரன், வசிதரன், அஜித்தா, மதுஜா, வித்தியா, கீர்த்திகா, கார்த்திகா, அனி, அலன், ஆரன், கெவின், லெவின், அரூஷா, கதீஸ், கனிஷ், சைமன், சரன், பிரதீப், சுபிஸ்சா, அஜந், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.10.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் நாவற்குழி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி கிழக்கு,
அம்மன்கோயில் வீதி.

(53694)
(12.6)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்லி



தோற்றம்
18.09.1959

மறைவு
10.11.2013

அமரர் ஆழ்வான் இராசதுரை
(யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ஊழியர்)
திதி: அட்டமி (31.10.2014)

நித்தம் வந்தாய் என் முத்தம்
என் நினைவில் அடங்காத
உன் சத்தம் நம் கனவில்
வருவதனால் தானே - நீங்கள்
இன்னும் மௌனமாய்-இருக்கிறீர்கள்

குடும்பத்தினர்.

### ஆன்மிகச் சொற்பொழிவு

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார் 'கோவில்) ஆலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை இரவு 7மணிக்கு கவிஞர் த.நாகேஸ்வர னின் 'மனிதம்' என்னும் தலைப்பி லான ஆள்மிகச் சொற்பொழிவு இடம் பெறும் என்று ஆலய தர்ம கர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

### 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

#### திருமதி பாக்கியலட்சுமி குலவீரசிங்கம்




திதி: அட்டமி

ஆண்டுகள் ஏழு சென்றன உம் பார்வைகள்
எம் மனதைவிட்டு அகலவில்லை
உம் பிள்ளைகள், கணவர்,சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் அனைவரும் ஒன்று கூடி
உம் நினைவுகள் பேசி
உம் ஆத்மா சாந்தியடைய இந்நாளில்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில் குடும்பத்தினர்.
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(53699)(5.6.3)

### மரண அறிவித்தல்



#### இராஜபாக்கியம் சச்சிதானந்தன்

(ஒளி ஒலி அமைப்பாளர் உதயன் சவுண்ட்)

யாழ். வண்ணார்பண்ணை பத்திரகாளி கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜபாக்கியம் சச்சிதானந்தன் 29.10.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜபாக்கியம் - பவானிதேவி தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் நாகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும், சாரங்கன், சாருஜன் (பெரியபுலம் பாடசாலை), ரூபிகா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜசிலோசனா (சாந்தி -லண்டன்), இராஜமோகனா (நெதர்லாந்து),காலஞ்சென்றவர்களான பவானந்தன், பிரபானந்தன் மற்றும் கிருபானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துக்குமாரசாமி, ஆனந்தி, சிவராணி, சிவநேசகுமார், கெங்காதேவி ஐங்கரமூர்த்தி, சாந்தினி, தேவி, பத்மாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளிகோயிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(53695) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 3236

### கண்ணீர் அஞ்சலி



ஒளி, ஒலி அமைப்பாளரும் உதயன் சவுண்ட் உரிமையாளரும் எனது நண்பனுமாகிய

**இராஜபாக்கியம் சச்சிதானந்தன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரர்த்திக்கின்றோம்.

கோபுரம் சவுண்ட்,
38, மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(53698)(6.4.3)

## ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் மீசாலை விக் னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது. ஐக்கிய நாடுகள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவை யாழ்.மாவட்ட இடர்முகாமைத்துவ திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி நிகழ்த்தினார். கழகத் தலைவர் லயன் க.தர்ஜன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் மருத்துவர் வீ.பி. தியாகராசா கலந்து கொண்டார். நிகழ்வுக்கு வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (வ-9)

## நிர்வாகிகள் தெரிவு


மாசேரி விவசாய சம்மேளன பொதுக் கூட்டமும் புதிய நிர் வாக சபைத் தெரிவும் அண் மையில் மாசேரி கிராம முன் னேற்றச் சங்க மண் டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தி யோகத்தர் எஸ்.சத்தியேந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சி.சுப்பிரமணியம், செயலாளர் சி.அருணாசலம், பொருளாளர் சி.நவரட்னம், உபதலைவர் வ.யோக நாதன், உப செயலாளர் க.வீர கத்திப் பிள்ளை, மற்றும் நிர் வாக உத்தியோகத் தர்களாக நீ.கணேசன், தி.சிவகுமாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (வ-122)

## மணி விழா

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் 25 ஆண்டுகள் கல்விப்பணியாற்றி ஓய்வு பெறும் உப அதிபர் சொ.ஜெயவீரசிங்கத்துக்கு மணிவிழாவும் அவரைக் கௌரவிக்கும் வகையிலான 'ஜெயம் நூல்' வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கல்வி, விளையாட்டுத்துறைகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்வார். (வ-ரி)



கொட்டடி மீன் சந்தை அருகே உள்ள கழிவுகள் கொட்டப்படும் கொள்கலன் திறந்த நிலையில் உள்ளதால் கழிவுகள் நாலா பக்கமும் சிதறிக் காணப்படுவதோடு அவற்றை கால்நடைகள் தமது உணவுக்குக் பயன்படுத்துகின்றன. அத்துடன் கழிவுகளை பறவைகள் இழுத்தும் செல்கின்றன. கழிவுகளை ஒழுங்காக அகற்றாததால் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடுகள் நிலவுகின்றன. (வ-17)

# ஆசிரியர்கள் விசனம்

கரணவாய், ஒக்.31

ஆசிரியர் தரம் 2இற்கு விண்ணப்பித்து இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும் உரிய பதவி உயர்வு வழங்கப்படாமை தொடர்பாக பதவி உயர்வுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சேவையில் உள்ள போது பட்டம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் I இல் உள்ள ஆசிரியர்களை வகுப்பு 2தரம் II இற்கு நியமிப்பதற்கான பட்டம் பெற்ற ஆசிரியர்களால் அந்தந்த வலயங்களிடம் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அவை மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஊடாக வட மாகாணக் கல்வி அமைச்சுக்கு கடந்த வருட முற்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டு, அதன் பிரதிகள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. ஆனால் குறித்த ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் ஆசிரிய ஆலோசகர் உட்பட பல்வேறு பதவி உயர்வுகளுக்கு விண்ணப்பங்கள் கோரும்போது விண்ணப்பிக்க முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்படுவதோடு விண்ணப்பங்கள் உயர் அதிகாரிகளால் நிராகரிக்கப்படுகின்றன. எனவே பதவி உயர்வுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களின் நலன்கருதி அவர்களுக்கான பதவியுயர்வுகளை வழங்க வடமாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-108)

## விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்த விவசாயிகள்

கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக குளங்கள் நீர் நிலைகள், கிணறுகள் என்பனவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அதை யடுத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

விளை நிலங்களில் பசளையிடுதல், கிருமிநாசினி தெளித்தலிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

களை பிடுங்குதல், நாற்று நடுகைகளும் சில இடங்களில் இடபெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக அளவெட்டி, கந்தரோடை, மல்லாகம், சண்டிலிப்பாய், சங்குவேலி, மாதகல் ,அராலி, வட்டுக்கோட்டை பகுதிகளில் பெரும்போக நெற்செய்கையில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கான உரமானியங்களையும் குறித்த நேரத்தில் அந்தந்தப் பிரதேச கமநலசேவை நிலையங்களில் பெறக் கூடியதாகவும் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (வ-36)

## கிராம அலுவலர்களின் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.31

நாட்டிலுள்ள 14 ஆயிரம் கிராம உத்தி யோகத்தர்கள் பிரிவிலு முள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களது சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கான அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்துக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் அவர்களது மாதாந்த பயணப்படிக் கொடுப்பனவாக அவர்களது பிரிவுக்குள் 350 ரூபாவும் அதற்கு வெளியே 750 ரூபாவும் மாதாந்த அலுவலர் கொடுப்பனவாக நகரசபை எல்லைக்குள் 100 ரூபா எழுத்து வேலைகள் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் காகிதாதிகள் போன்றவற்றுக்கான கொடுப்பனவாக 1,500 ரூபாவும், உத்தியோக பூர்வ சீருடைகளுக்கான கொடுப்பனவாக நான்காயிரம் ரூபாவும், உரிமை கோரப்படாத சடலங்களைப் புதைப்பதற்கான கொடுப்பனவாக 7,500 ரூபாவும், தொலைபேசிகள் கொடுப்பனவு, நிர்வாக உத்தியோகத்தர்கள் தொடர்பாக இரண்டாயிரம் ரூபா என்றவாறும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (வ-22)

## பரிசளிப்பு விழா

கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை பரிசில் நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக பண்டாரவளை கல்வி வலய தமிழ்ப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், பாடசாலை பழைய மாணவன் க.சுதாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-9)

★ ★ ★

வடமராட்சி.ஒக்.31

பருத்தித்துறை, கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்புவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பொ.அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், கௌரவ விருந்தினராக இளைப்பாறிய அதிபர் ஆ.வடிவேலும், விசேட விருந்தினராக புதிய யாழ். வைத்தியசாலை இயக்குநர் எஸ்.குலேந்திரராஜாவும் கலந்துகொள்வார்கள்.

கல்விப் பணிப்பாளரின் பாரியார் திருமதி ஜமுனாநந்தகுமார் பரிசில்களை வழங்குவார். (வ-173)

★ ★ ★

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் நாளும், பரிசளிப்புவிழாவும்இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திறந்த வெளி யரங்கில் அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினராக சிரேஷ்ட இரு தய சத்திர சிகிச்சை நிபுணர் ஞா.காந்திஜி கலந்து கொள்வார். (வ-ரி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/மிருசுவில் றோ.க.த.க.
பாடசாலை ஆசிரியர்
கிட்டிணன் தங்கேஸ்வரன்
அவர்கள் 06.10.2014 திங்கட்கிழமை
நல்லாசிரியர்களுக்கான பிரதீபா பிரபா
ஜனாதிபதி விருதினைப் பெற்றதையிட்டு
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.




2014ஆம் ஆண்டு தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில்
182 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த மாணவி
அனற் ஜென்சிகா
அவர்களையும் 70இற்கு மேல்
புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை

(53680)(7.6.3)

சேவைநலன் பாராட்டு விழா

Best wishes

A.I.தயானந்தராஜா

B.Com (Hons) PGDE, PGDEM,M.Ed

Best wishes

மன்/சித்திவிநாயகர்
இந்துக்கல்லூரியில்
கடந்த முப்பது
வருடங்களாக அதிபராக
சேவையாற்றி தனது
ஆளுமைமிக்க
செயற்பாட்டினால்
இக்கல்லூரியினைத்
தேசிய பாடசாலையாகத்
தரம் உயர்த்தி தற்போது
யாழ்/இந்துக்கல்லூரி
யில் அதிபராக கடமை
யாற்றிக் கொண்டிருக்கும்
மதிப்பிற்குரிய




A.I.தயானந்தராஜா அவர்களின் சேவையினைப்
பாராட்டுவதில் இன்று எமது கல்லூரிச் சமூகம்
பெருமை கொள்கிறது.

கல்லூரிச் சமூகம்,
மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி.

(53690)(12.6)



வேலணை வடக்கு
சோளாவத்தை
அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய
அஷ்ட வைரவ நூதன பிரதிஷ்டா
கும்பாபிஷேகம்

சித்தி விநாயகர் துணை

அடியார்களே!

கோயில்களின் கிராமமென வர்ணிக்கப்படும் வேலணை வடக்கிலே மகா சுவர்ண கால வைரவர் ஞான வைரவராக எழுந்தருளி, அருள்பாலிக்கும் ஆலயத்தில் இலங்கையில் முதல் முறையாக அஷ்ட திக்குகளை பரிபாலனம் செய்யும் வைரவர்களான, அசிதாங்க வைரவர், குரு வைரவர், சண்ட வைரவர், குரோதன வைரவர், உன்மத்த வைரவர், கபால வைரவர், பீஷான வைரவர், சம்ஹார வைரவர் மூர்த்திகளுக்கு தனித்தனி ஆலயங்கள் அமைத்து நிகழும் ஜய வருஷம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள் 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.04 மணி தொடக்கம் 10.04 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நூதன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடத்த ஞான வைரவர் அருள்பாலித்துள்ளார். அடியார்கள் யாவரும் கும்பாபிஷேகத்தில் கலந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை
எண்ணெய்க் காப்பு

அதிகாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து
போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு : 077 310 5474

ஆலய அறங்காவலர் சபை

(53652)(7.6.3)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் நேற்று ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, ஒக் 31
கிழக்குப் பல்கலைக்கழக சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீட மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

பணத்துக்காக அப்பாவி மக்களின் வாழ்க்கையை மாலபேக்குப் பரிசளிக்கவிருக்கும் வைத்திய சங்கத்தினுடைய செயலைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பிற்பகல் ஒரு மணியளவில் பல்கலைக்கழக முன் வீதியில் கூடிய மாணவர்கள் ஜனாதிபதியும் கல்வியமைச்சரும் இதில் தலையிட்டு எங்களது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமெனத் தெரிவித்தனர். வைத்திய சங்கமே மாலபேக்கு அனுமதி வழங்காதே, மாலபே சட்டவிரோதப் பட்டக்கல்வியை நிறுத்து, கல்வியை விற்பதை நிறுத்து எனப் பல்வேறு பதாதைகளை தாங்கிய வண்ணம் மாணவர்கள் கோஷம் எழுப்பியபடி ஊர்வலமாகச் சென்று தங்கள் எதிர்ப்பைக் காட்டியபடி கலைந்துசென்றனர். (த-10)

## ஒன்பது குடும்பங்களுக்கு சுயதொழில் கொடுப்பனவு

அச்சுவேலி, ஒக்.31
வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் தனிப் பெற்றோரைக் கொண்ட ஒன்பது குடும்பங்களுக்குச் சமூக சேவைகள் அமைச்சு சுயதொழில் முயற்சிக்கான கொடுப்பனவை வழங்கியுள்ளது. எட்டுக் குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் விகிதமும் ஒரு குடும்பத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பெயர் அறிவிக்கப்பட்டவர்கள் தமக்குரிய கொடுப்பனவை 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். குடும்பங்களின் பெயர் விவரம் வருமாறு:-

ஜெ.கோமலீலி (கதிரிப்பாய் அச்சுவேலி - கோழிவளர்ப்பு), ந.இரத்தினேஸ்வரி (தோப்பு அச்சுவேலி-கால்நடைவளர்ப்பு), க.விஜயகுமாரி (மானிப்பாய் வீதி, உரும் பிராய் - கோழி வளர்ப்பு), தா.உதயமலர் (செல் வபுரம் உரும்பிராய் - கோழி வளர்ப்பு), சு.தர்சினி (புதிய செம்மணி வீதி - கால் நடை வளர்ப்பு), க.கேமலா (பத்தமேனி அச்சுவேலி - கோழிவளர்ப்பு),
சு.பிரவினா (மாவடி வீதி அச்சுவேலி - கால்நடை வளர்ப்பு), சு.செவ்வந்தி (விக்கினேஸ்வரா வீதி புத்தூர் - கால்நடை வளர்ப்பு), எஸ்.மேரி அன்ரனிற்றலா (கோப்பாய் மத்தி - கோழிவளர்ப்பு). (த-11)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது

மருதங்கேணி பற்றைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை பளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மருதங்கேணியில் உள்ள பளைப் பொலிஸ்நிலையத்துக்குபொது மக்கள் வழங் கிய இரகசியத் தகவலை அடுத்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார் கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்த வேளையில் அவர்களைக்கைதுசெய்ததுடன் உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றினர்.

பளைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு பொலிஸ்பிணையில் விடுவிக்கப்பட்ட இருவரையும் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-9)

### குற்றங்களும் கைதுகளும்

## போதைப் பொருள் வைத்திருந்தவருக்கு ஆறு மாதம் சிறை

தென்மராட்சி, ஒக்.31
கஞ்சா அல்லாத போதைப் பொருள் வைத்திருந்த சரசாலை வாசிக்கு ஆறு மாத சிறைத் தண்டனையும் 45 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை செலுத்தத் தவறின் மேலும் ஒரு வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, வர்த்தக நிலையத்தில் அனுமதிப் பத்திரமின்றி பியர் விற்பனைக்கு வைத்திருந்த நபருக்கும் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [த—9]

## தாக்குதலில் ஈடுபட்ட 6 பேருக்கு மறியல்

தென்மராட்சி, ஒக்.31
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு இடங்களில் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட அறுவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

மிருசுவில் பகுதியில் ஓட்டோவை அடித்துச் சேதப்படுத்திய மூவருக்கும், மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் வீதியில் சென்ற ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்திய மூவருக்கும் எதிராகக் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்தனர். வழக்குகளை விசாரித்த நீதிவான் இந்த ஆறு பேரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டனர்.[த—9]

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக்.31
மதுபோதையில் ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் சாரதிய அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றொரு சாரதிக்கு 11 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை, மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய இருவரை சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் 6 மாத காலத்தில் 80 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயச் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாரிடம் உத்தரவிடப்பட்டது. [த—9]

## நடமாடும் நூலக சேவை

பளை, ஒக்.31
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முன்பள்ளிப்பற்று (இயக்கச்சி) பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்றுவெள்ளிக்கிழமை புத்தகக் கண்காட்சியையும் நடமாடும் நூலக சேவையையும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க பொது நோக்கு மண்டபத்தில் நடத்தவுள்ளதாக நூலகர் அறிவித் துள்ளார். (வ-9)

**கூறுவிலை திறத்தல்**
**பழைய இரும்பு, அலுமினியம் விற்பனை**

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பழைய இரும்பு, அலுமினியம் விற்பனைக்கு 08.10.2014ஆம் திகதி உதயன் பத்திரிகை விளம்பரம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் 03.11.2014ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு தலைமைக் காரியாலயத்தில் திறக்கப்படும். அத்தருணம் கூறுவிலை சமர்ப்பித்தவர்கள் சமுகமாய் இருத்தல் வேண்டும்.

(சி/17278) (7.6.3) பொதுமுகாமையாளர்.

**ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனம் ஊடாக அறிவித்தல்**

நெற் பரப்பில் மேய்ந்து கொண்டிருந்த இரண்டு கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஏழு தினங்களாக எவரும் உரிமை கோராததனால் 01.11.2014 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆனைக்கோட்டை மகா சனசமூக நிலையத் திற்கு முன்பாக ஏல விற்பனைக்காக விடப்பட உள்ளது. உரிமையாளர்கள் சனிக்கிழமை 12.00 மணிக்கு முன்பாக உரிமை கோரவும்.

மாட்டின் அடையாள இலக்கம் - 4136
இரண்டினதும் நிறம் - கறுப்பு
அடையாளக் குறியீடு - SPJK

(53502) (7.6.3)

ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனம்

## லொறி- பஸ் மோதி விபத்து; 3 பேர் காயம்

பளை,ஒக்.31
வேகமாகச் சென்ற லொறி முன்னால் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் லொறியில் பயணித்த மூவர் காயமடைந்தனர். லொறியின் முன்பகுதியும் பஸ்ஸின் பின் பகுதியும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் நேற்று பளை மருத்துவமனைக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த லொறியில் பயணித்த புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த குணசிங்கம் கருணாகரன் (வயது-40), புன்னாலைக்கட்டுவன் கிழக்கைச் சேர்ந்த கதிரவேல் அகிலன் (வயது-28) ஆகியோர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டனர். மற்றவர் சிறு காயத்துக்கு இலக்கான நிலையில் பளை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார்.

வீதியின் தாழ்வான பகுதியில் சென்று கொண்டிருந்த லொறி வீதியோரத்தில் பயணிகளை இறக் கிக் கொண்டிருந்த பஸ்ஸுடன் மோதியுள்ளதாக பளைப் பொலி ஸார் தெரிவித்தனர். (த-9)

**வேலைவாய்ப்பு**

இயந்திரம் மூலம் கல் அரியும் வேலைக்கு ஆள்கள் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.
ரெடி பில்ட் லிங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கரந்தன் வீதி, ஊரெழு. (சி/17276) (7.6.3)
021 742 9695/077 220 9558

**தொழிலாளர் தேவை**

- மேசன் 5 வருட முன் அனுபவம்.
- தச்சுத் தொழிலாளி
- மேசன் உதவியாளர்
- டீசல் மெக்கானிக் 10 வருட முன் அனுபவம்
- மோட்டர்கிறேடர் இயக்குநர்
- JCB இயக்குநர்

தகுதி வாய்ந்தவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் 10.11.2014 இற்கு முன் நேரில் வரவும். (சி/17277) (7.6.3)
முகாமையாளர்
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.




**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**




அமரர் மகேஸ்வரி குகநாகராஜா (சொக்கம்மா)
திதி: 31.10.2014

திரியாய் ஒளி தந்து
தலைவியாய் வழிகாட்டி
பூவாய் நாம் வாழ
மடலாய் எமைக் காத்து
தன்னை உருக்கி
தரணியில் எமை நிலை நிறுத்தி
குருவாய் நின்று
அன்பு பண்பு அறிவு போதித்து
சீராய் நெறிப்படுத்தி
சிறப்பாய் எமை வாழவைத்து
எமை விட்டுப் பிரிந்த
அன்புத் தெய்வத்தின்
திருவடித் தாமரைக்கு
சொக்கநாதம் சமர்ப்பிக்கின்றோம்.

சூராவத்தை, சுன்னாகம். குடும்பத்தினர்.

# கடந்த ஒரு வருட காலத்தில் 'குருந்தம்' நிறைவான சேவை

*புகைத்தலில் தத்தளிப்போரை மீட்பதற்கும் மற்றொரு விடுதி*

தென்மராட்சி, ஒக். 31
சாவகச்சேரி மருத்துவமனையில் மதுபோதையிலிருந்து மீளமுடியாமல்தத்தளிப்போரை மீட்பதற்காக அமைக்கப்பட்ட 'குருந்தம்' விடுதி கடந்த ஓராண்டு காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தாண்டி மன நிறைவான சேவைகளை வழங்கிவெற்றியடைந்துள்ளது.
இதனையடுத்து விரைவில் புகைத்தலிலிருந்து மீள முடியாமல் தத்தளிப்போரை மீட்பதற்கான மற்றொரு விடுதி மருத்துவமனையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
மதுபோதைக்கு அடிமையாகி மீள முடியாமல் தத்தளித்த பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 115 பேரை மீட்டெடுத்த 'குணம் தரும் குடை நிழல்' என்னும் குருந்தம் சிகிச்சைப் பிரிவு போன்று புகைபிடிப்பதிலிருந்து மீள முடியாமல் இருப்போரை அந்தப் பழக்கத்திலிருந்து மீட்க விரைவில் விசேட சிகிச்சைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ்வாறு சாவகச்சேரி மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் த.குகதாஸன் தெரிவித்தார்.
மருத்துவமனையில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற 'குருந்தம்' சிகிச்சைப் பிரிவின் ஓராண்டு நிறைவு விழாவில் தலைமையுரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் சிவராணி, உளநல மருத்துவ நிபுணர் சிவயோகன், உளநல வளவாளர் ரவி மற்றும் குருந்தத்தில் சிகிச்சை பெற்றுவருபவர்கள், அவர்களின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-9)

## சக்தியம்மன் வித்தியாலயத்துக்கு 15 லட்சம் செலவில் விசேட அலகு

தென்மராட்சி.ஒக்.31
தென்மராட்சி கல்வி வலயத்தில் விசேட கல்வி அலகு செயற்படுத்தப்பட்டு வரும் சக்தியம்மன் தமிழ் வித்தியாலயத்துக்கு புலம்பெயர் நாடொன்றிலிருந்து வருகை தந்துள்ள குடும்பத்தினர் 15 லட்சம் ரூபா செலவில் விசேட கல்வி அலகு மாணவர்களுக்கான புதிய கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளனர்.
இந்தக் கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வித்தியாலய அதிபர் திருமதி சு.தயாபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்டடத்தை அமைத்து வழங்கிய திருமதி கௌரி பொன்னையா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கட்டடத்தை திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவத்திரை, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ந.சர்வேஸ்வரன், திருமதி க.சிறிதரன், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் மற்றும் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், பெருமளவு பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.
சகல வசதிகளையும் கொண்ட வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்றல் அறிவை வளர்க்கக் கூடிய பெருமளவு கற்றல் உபகரணங்களும் அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (த-9)

## செல்லமுத்து மைதானத்திலுள்ள திறந்தவெளி அரங்கு புனரமைப்பு

*நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நிதியுதவி*

வலி.தென்மேற்கு, ஒக். 31
மானிப்பாய் பட்டினத்தில் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கு புனரமைக்கப்படவுள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இதற்கான நிதி வழங்கியதையடுத்து திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதற்கான தீர்மானம் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள திறந்த வெளியரங்கு பல மாதங்களாகப் பாவிக்க முடியாதவாறு சேதமடைந்த நிலையிலுள்ளது. இந்த அரங்கின் நிலை குறித்து பிரதேச சபைக்குச் சுட்டிக்காட்டிய பொது மக்கள் அரங்கைப் புனரமைக்குமாறு கோரியிருந்தனர்.
கடந்த காலங்களில் கணிசமான வருமானத்தையீட்டிக் கொடுத்த மேற்படி அரங்கு தற்பொழுது கால்நடைகள் படுத்துறங்கும் இடமாக மாறியுள்ளது.
பல நிகழ்வுகள் இடம்பெற்று வந்த மேற்படி அரங்கின் நிலை குறித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அவர் புனரமைப்பதற்காக ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவைச் சபைக்கு வழங்கியுள்ளார். இதையடுத்து அரங்கை புனரமைப்பதற்காக ஒழுங்குகளைப் பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர். (த-115)

## விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு மாகாண சபையின் 10 சைக்கிள்

யாழ்ப்பாணம்.ஒக்.31
யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு வடக்கு மாகாண சபையின் உதவித் திட்டத்தின் கீழ் 10 சைக்கிள்களும் ஒரு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளது.
வறுமைக்கோட்டின் கீழ்வாழும் விழிப்புலனற்றோர் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இந்த சைக்கிள் வழங்கப்பட்டதாகச் சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.
வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் வைத்து முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் இந்த சைக்கிள்களையும், தையல் இயந்திரத்தையும் வழங்கினார்.
வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விழிப்புலனற்ற அங்கத்தவர் ஒருவரின் குடும்பத் தலைவிக்கு அவரின் சுயதொழில் கருதி இந்தத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (த-17)

## பல வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியல் இல்லை

வலி.தென்மேற்கு,ஒக்.31
மானிப்பாய் பட்டினத்திலுள்ள அனேகமானவர்த்தகநிலையங்களில் அங்கு விற்கப்படும் பொருள்களுக்கான விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமையால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். சகல பொருள்களுக்கும் விலையைக் கேட்டுக் வாங்க வேண்டிய நிலைக்கு இவர்கள்தள்ளப்பட்டுள்ளார்கள்.
இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.
வலி.தெற்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் குறிப்பாக மானிப்பாய் சந்தையை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களின் விலைப் பட்டியல் பற்றிய விவரம் காட்சிப்படுத்தாமையால் பொருள்களை வாங்கச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.
பாவனையாளர்களின் நலன் கருதி பொருள்களின் விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பாவனையாளர்கள் கோரியுள்ளனர்.(த-115)

## மழை வெள்ளம் தேங்கியதால் போக்குவரத்து பெரும் பாதிப்பு

வலி. தென்மேற்கு, ஒக்.31
பிரதான வீதியோரத்திலிருக்கும் மண் குவியல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெரிய இயந்திரத்தின் உதவியுடன் வெட்டி அப்புறப்படுத்தியதால் மக்கள் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்துமுள்ள மானிப்பாய் சந்தியில் ஒரு அடி உயரத்துக்கு சுமார் 50 அடி நீளத்துக்கு மழை வெள்ளம் தேங்கி நிற்கிறது.
இதனால் வாகனப்போக்குவரத்துக்கு மட்டுமல்ல பொதுமக்களுக்கும் குறிப்பாக மாணவர்களுக்கும் பாதிப்புஏற்பட்டுள்ளது.
இந்த நிலை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள வர்த்தகர்களும் பொதுமக்களும் போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தை விரைவாக அகற்றுவதற்றும், மழை வெள்ளம் தொடர்ந்தும் தேங்கி நிற்காதவாறு வழிந்தோடும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.
குடாநாட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிராதான வீதிகள் உட்பட பல வீதியோரங்களில் பரவலாகக் குவிந்திருக்கும் மண்ணை அகற்றுவதில் அதிகார சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.
அந்த வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக காரைநகர் செல்லும் பிரதான வீதியோரத்திலுள்ள மண்ணும் அகற்றப்பட்டுள்ளது.
மானிப்பாய் சந்தியில் மக்கள் வங்கிக்கு முன்பாக உள்ள இடத்தில் வீதியோரத்தில் இருந்த மண் அகற்றப்பட்டதினால் ஒரு அடி உயரத்துக்கு 50 அடி நீளத்துக்கு மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது.
பிரதான சந்தியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதினால் வாகனப் போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் குறிப்பாக மாணவர்களின் நடமாட்டத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழை வெள்ளம் தேங்கி நிற்பதினால் அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கோ வங்கிகளுக்கோ மக்கள் செல்ல முடியாதுள்ளது. (த-115)

## மாணவர்களின் முரண்பாடு கைகலப்பில் முடிந்தது

அளவெட்டி, ஒக்.31
சக மாணவரொருவரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் மாணவரொருவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த 27 ஆம் திகதி தெல்லிப்பழையில் இயங்கும் பிரபல பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.
இரு மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கு பின்னர் வகுப்பறையில் கைகலப்பில் முடிந்தது. இதனால் 14 வயதுடைய மாணவரொருவர் தலையில் பேனாவால் குத்தப்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரதுவகுப்பில் கல்வி கற்கும் சக மாணவரொருவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-36)

## சேதமடைந்த நிலையில் உள்ள நூல்களைப் பாதுகாக்க ஏற்பாடு

*வலி.தெற்மேற்குப் பிரதேச சபையால் 16ஆயிரம் ரூபா நிதியும் ஒதுக்கீடு*

வலி.தென்மேற்கு.ஒக்.31
வாசகர்களின் நலன்கருதி வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்களில் பாவிக்க முடியாதவாறு சேதமடைந்த நிலையிலுள்ள நூல்களைப் பாதுகாக்க முன்வந்துள்ள பிரதேச சபை, அவற்றை மீள் கட்டுமானம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்காக 16ஆயிரம் ரூபா நிதியையும் ஒதுக்கியுள்ளது. நிதிக் குழுவின் சிபார்சையடுத்து இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட் டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அந்தப் பகுதிகளில் வசிக்கும் வாசகர்களின், குறிப்பாக மாணவர்களின் நலன்கருதி நான்கு உப அலுவலகங்களில் நான்கு நூல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.
இந்த நூல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள நூல்களில் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான நூல்கள் பாவிக்க முடியாதவாறு சேதமடைந்த நிலையிலுள்ளதால் வாசகர்களுக்குக் குறிப்பாக மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலை குறித்துப் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டமையடுத்து வாசகர்களின் நலன் கருதி அவற்றைப் பாதுகாக்கவேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளதால் நிதிக் குழுவில் இது பற்றி ஆராயப்பட்டபோது நூல்களை மீள்கட்டுமானம் செய்வதற்கு முதற்கட்டமாக 16ஆயிரம் ரூபா சிபார்சு செய்யப்பட்டது.
இதையடுத்துப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலும் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (த-115)

## வீட்டின் ஓட்டை பிரித்து நகை, கைபேசி திருட்டு



வடமராட்சி, ஒக்.31
உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இரவு வேளை வீட்டார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் வீட்டின் ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் வீட்டில் இருந்த நகைகள், கைத்தொலைபேசி பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வீட்டில் இருந்து ஒரு சோடி காப்பு, கைத்தொலைபேசிகள், ஒரு தொகைப் பணம் என்பனவே திருடப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸார் மேலும் கூறினர். (த-109)

## சூரன் போருக்கு சென்றவேளை வீட்டுக் கூரை பிரித்துத் திருட்டு

*8 லட்சம் பெறுமதியான நகை, பணம் பறிபோனது*

கைதடி, ஒக்.31
வீட்டார் சூரன் போருக்குசென்றவேளை வீட்டின் கூரையைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த நகைகள் மற்றும் வெளிநாட்டுப் பணம் என்பவற்றை அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் இரவு கைதடி வடக்கு கந்தசுவாமி கோவிலுக்கு அருகிலுள்ள திருமதி விக்னேஸ்வரன் ஜெயமலர் என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-
அங்குள்ள கயற்றசிட்டி கந்தசுவாமி கோவில் ஆலயத்தில் இடம்பெற்ற சூரன் போரைப் பார்ப்பதற்காக வீட்டார் மாலை வேளை சென்றதை அவதானித்த திருடர்கள் வீட்டின் ஓடுகளைக் கழற்றி உட்புகுந்து அங்கு அலுமாரியில் வைக்கப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், 3 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணம் என்ப வற்றை அபகரித்துக் கொண்டு சென்றுள்ளனர்.
சூரன்போர் முடிந்து வீடு வந்தவேளையே திருட்டுப் போன சம்பவம் தெரிய வந்தது. உடனடியாகச் சாவகச்சேரி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அங்கு வந்த பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டார்கள்.
இந்தச் சம்பவம் கைதடியில் பெரும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. (த-288)

# மன்னார்- யாழ். சேவையில் புதிய பஸ்களை ஈடுபடுத்துக

## பயணிகள் தரப்பில் கோரிக்கை

- 10 புதிய பஸ்கள் மன்னார் டிப்போவுக்கு
- இப்போதுள்ளவை மிகப் பழைய பஸ்கள்
- அவை அடிக்கடி பழுதடைவதால் பாதிப்பு



மன்னார்; ஒக்.31
போக்குவரத்து அமைச்சினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலைக்குப் புதிய பஸ்கள் 10 வழங்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் சிலவற்றை மன்னார் - வவுனியா மற்றும் மன்னார் - யாழ்ப்பாணம் சேவையிலும் ஈடுபடுத்தும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த மார்க்கங்களில் தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்கள் அவ்வப்போது ஆங்காங்கே பழுதுபட்டு நின்று விடுகின்றன என்பதால் இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்துள்ளனர்.
வழங்கப்பட்ட புதிய பஸ்கள் அம்பாறை, கண்டி, திருகோணமலை, அக்கரைப்பற்று, கற்பிட்டி மற்றும் கொழும்பு ஆகிய தூர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று மன்னார் சாலை முகாமையாளர் தெரிவித்தார்.
போக்குவரத்துச் சேவையை இலகுபடுத்தும் முகமாக வடக்கு மாகாணத்துக்கு 70 புதிய பஸ்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பஸ்கள் மன்னார் உட்பட்ட 7 சாலைகளுக்கு 10 பஸ்கள் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டன.
பகிர்ந்தளிக்கப்பட்ட பஸ்கள் அந்தந்த சாலைகளில் இருந்து தூர சேவைகளுக்கும், மேலதிகமாக புதிய சேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
இந்த நிலையில் மன்னார் சாலையில் இருந்து ஏற்கனவே வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் பஸ்கள் பழுதடைந்து சீரான சேவையை வழங்கவில்லை என்று அவற்றில் அடிக்கடி பயணிப்போர் குற்றஞ்சாட்டுகின்றனர்.
இதனால் தமது பயணம் தாமதப்படுகின்றது என்றும் அவர்கள் குறைப்படுகின்றனர்.
தற்போது மன்னார் சாலைக்கு 10 புதிய பஸ்கள் வழங்கப்பட்டதால் அவை வவுனியா, யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் என மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் ஏற்கனவே தூர இடங்களுக்குச் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்குப் பதிலாக புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
அந்த வகையில் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் அனைத்தும் தூர சேவையில் தான் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கொழும்புக்கு 4 பஸ்களும், கற்பிட்டிக்கு 3 பஸ்களும், கண்டிக்கு ஒரு பஸ்ஸும், திருகோணமலைக்கு ஒரு பஸ்ஸும், அக்கரைப்பற்றுக்கு ஒரு பஸ்ஸும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் எம்.அஸ்கர் தெரிவித்தார். (த-14.56)

# மன்னார் சாலையின் புதிய பஸ் சேவைகள்

மன்னார், ஒக்.31
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் புதிய சேவைகளை வழங்கும் பஸ்களின் நேர விபரம் சாலையால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைவாக கற்பிட்டி, அக்கரைப்பற்று, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு கடந்த 27 ஆம் திகதியில் இருந்து குறித்த சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மன்னாரிலிருந்து அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்டு முருங்கன் சிலாபத்துறை, ஊடாக கற்பிட்டி வரை சென்று, அங்கிருந்து நண்பகல் 12 மணிக்கு திரும்பி அதே வழியூடாக மன்னார் சாலை வரை சேவையில் ஈடுபடும்.
மன்னாரிலிருந்து இரவு 8.15 மணிக்கு புறப்பட்டு மதவாச்சி, கல்குளம், மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்று வரை சென்று, அங்கிருந்து இரவு 8.15 மணிக்கு அதே வழியூடாக மன்னார் சாலை வரை சேவையில் ஈடுபடும்.
மன்னாரிலிருந்து அதிகாலை 5.15மணிக்கு புறப்பட்டு வவுனியா, கிளிநொச்சி, பரந்தன் ஊடாக முல்லைத்தீவு வரை சென்று, அங்கிருந்து நண்பகல் 12 மணிக்கு அதே வழியூடாக மன்னார் சாலை வரை சேவையில் ஈடுபடும்.
இந்த சேவைகளுக்காகத் தலை மன்னாரில் இருந்து மன்னாருக்கு இணைப்புச் சேவைகள் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# கைகழுவுதல் தினத்தையொட்டி பாடசாலைகளில் விழிப்புணர்வு



கிளிநொச்சி, ஒக். 31
சர்வதேச கைகழுவுதல் தினம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி இலங்கையிலும் பல நாடுகளிலும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் நேற்று முன் தினம் புதன்கிழமை கணேசபுரம் சண்முகானந்த வித்தியாலயத்திலும், பெரியதம்பனை மகா வித்தியாலயத்திலும் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்குக் கை கழுவுதலின் முக்கியத்துவத்தையும், கை கழுவாமல்விட்டால் ஏற்படும்நோய்கள் பற்றியும், தடுப்புமுறைகள் பற்றியும், இலங்கையில் தற்போது காணப்படும் சுகாதாரம் சார்ந்த சவால்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கபட்டன.
பாடசாலைகளில் சாப்பிடுவதற்கு முன்னரும் பின்னரும் மாணவர்கள் கைகழுவ வேண்டும் என்ற சிந்தனையை வளர்க்கும் முகமாக ஒரு தொகை சவர்க்காரங்கள் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் ரைஸ் அமைப்பின் ஜனார்த்தன், பிரணவன், ரினோத், பிரகஸ் கர், நிக்சன், லியோ பிரெஸ்லி, யதார்த்தன், கேசவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-402)



கிளிநொச்சி நகரத்தில் பல இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்குத் தொற்று ஏற்படக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் கிளிநொச்சி அரச செயலகத்துக்கு முன்பாகவும் வெள்ளம் தேங்கியுள்ளது. (த-18)

# 20 லட்சம் செலவில் கட்டப்பட்டு கைவிடப்பட்டுள்ள பஸ் நிலையம்

## பயணிகள் பயன்படுத்தாததால் இந்த நிலை

புதுக்குடியிருப்பு .ஒக்.31
பயணிகளின் நலன்கருதி சகல வசதிகளுடன் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஏ-35 வீதியில் இரண்டு ஏக்கர் காணியில் 20 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையம் கடந்த ஒரு வருட காலமாகப் பயன்படுத்தப்படாமல் ஒருவித பயனுமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றது. அத்துடன் அங்கு வரும் பயணிகளின் நலன் கருதி ஆரம்பத்தில் பொதுமக்களால் அமைக்கப்பட்ட கடைகளும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து சகல அரச நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.
இந்த நிலையில் நிரந்தர பஸ் நிலையம் இல்லாமையால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.
இதனையடுத்து புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் எடுத்த விடாமுயற்சியின் காரணமாக ஏ-35 வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட இரண்டு ஏக்கர் காணியில் பஸ் நிலையம் அமைக்கப்பட்டிருந்தது.
குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியையும் பிரதேச சபை நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிதியையும் சேர்த்து 20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த பஸ் நிலையம் ஒரு வருடத்துக்கு முன்பு திறந்து வைக்கப்பட்டபோதிலும் பயணிகள் எவரும் பஸ் நிலையத்தைப் பயன்படுத்த முன்வராதமையால் அது வெறிச்சோடிக் காணப்படுகிறது. மேற்படி பஸ் நிலையத்தில் மலசலகூடம், மின்சாரம், குடிதண்ணீர் போன்ற சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-115)

# இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்கம்

மன்னார், ஒக். 31
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், தொழிற் பயிற்சிகள், இளைஞர் கழகங்களை ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இதற்கான ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாவட்டப் பணிப்பாளர் என்.எம். முனவ்பர் தலைமையில் இடம்பெற்றது.
குறித்த மாநாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.
இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரி.பூலோகராசா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கணக்குப் பதிவாளர் ஐ.சி.ஏ. ஜோண் பொஸ்கோ, இளைஞர் சேவை அதிகாரி ஏ.டியூக் குரூஸ் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-56)

# வீடு புகுந்து தாக்குதல்; இளைஞர் ஒருவர் கைது

வவுனியா, ஒக் 31
வவுனியா புதுக்குளம் பகுதியில் இளைஞர் குழு வொன்று வீடு புகுந்து தாக்குதலில் ஈடுபட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்து விசாரணை செய்து வருவ தாக நேற்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா புதுக்குளம் பகுதியில் இந்தச் சம்பவம், இடம் பெற்றது
அப்பகுதியில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த குழுவினருக்கும் வீட்டாருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றிச் சண்டையாக மாறியது.
இந்தச் சம்பவத்தில் மூவர் காய மடைந்தனர் உடனடியாக அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
வீட்டார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து அங்கு வந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதனுடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் விசாரணை நடப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-402)

# சோகத்தில் ஆழ்த்திய பேரழிவு



## கொஸ்லாந்தை மண்சரிவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்

பதுளை மாவட்டத்தின் மீரிய பெத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட மண்சரிவால், பெரிய அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்தும் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 200 ஏக்கர் பிரதேசம் மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வசித்து வந்த 400 பேர் வரையில் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



**இலங்கை அரசின் உதவிகள்**

கொஸ்லாந்தை, மீரிய பெத்தை மண்சரிவினால் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்காக தலா 15 ஆயிரம் ரூபாய் நிதியை உயிரிழந்தவர்களின் உறவினர்களிடம் கையளிக்குமாறும் மாவட்ட செயலகத்துக்கு, அரசு பணித்துள்ளது.

மண்சரிவினால், ஆதரவற்றுள்ளவர்களாக்கப்பட்டுள்ள 75 சிறுவர்களின் பாதுகாப்புக்குமான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுங் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

**ஜனாதிபதி விரைவு**

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மீரியபெத்தை பகுதிக்கு நேற்றுக் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம், மீரியபெத்தைப் பகுதிக்கு ஜனாதிபதி சென்றார். அங்கு பாதிக்கப்பட்ட பகுதிகளை உலங்கு வானூர்தியிலிருந்தவாறே முதலில் பார்வையிட்டார்.

இந்த இடரிலிருந்து தப்பித்து, கொஸ்லாந்தை கணேஷா தமிழ் வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்ததுடன், நிவாரண உதவிகளை உடனடியாக வழங்குமாறும் பணிப்பு விடுத்தார்.

**உதவிகள் வழங்கவுள்ள இந்தியா, அமெரிக்கா, ஐ.நா.**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்குவதற்கு இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன முன்வந்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா, மண்சரிவு தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். இதன்போதே, மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தியா உதவத் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மண்சரிவு அனர்த்தத்தையடுத்து துரித நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கைப் பாதுகாப்பு படையினர் மற்றும் மீட்புப் பணியாளர்களின் நடவடிக்கைகளுக்கு தனது பாராட்டையும் தெரிவித்துள்ள அமெரிக்க தூதரகம், உதவிகள் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளது.

மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளன என்று ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒத்துழைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. இதனை ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் ஸ்டீபன் துஜாரிக் தெரிவித்தார். பாதிப்புக்களில் இருந்து இலங்கை மீள்வதற்கு ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அலுவலகம் உதவுவதற்காக இலங்கை அரசை ஐ.நா தொடர்பு கொண்டுள்ளது.

கொஸ்லாந்தையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கையில் செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் ஈடுபட்டு வருவதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

**துக்க அனுஷ்டிப்பு**

மண்சரிவால் மாண்டு போன மக்களுக்காக நாடாளுமன்றத்தில் நேற்றைய தினமும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று முன்தினமே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தேசிய துக்கதினம் அறிவிப்பது தொடர்பில் இலங்கை அரசு ஆலோசித்து வருவதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.பி.அபயகோன் தெரிவித்துள்ளார்.

மண்சரிவில் உயிரிழந்த மக்களுக்குத் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாக, இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.


ஒரு வார காலத்துக்கு தொடர்ந்து துக்கம் அனுஷ்டிக்குமாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் வர்த்தக நிலையங்களில் கறுப்பு மற்றும் வெள்ளைக் கொடிகளைக் கட்டி துக்க தினத்தை அனுஷ்டிக்குமாறு கோரியுள்ளார். ஹட்டனில் நேற்றைய தினம் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### எச்சரிக்கை விடுக்கப்பட்டதா? என விசாரணைக்கு உத்தரவு

பதுளை, கொஸ்லந்தை, மீரியாபெத்தை பிரதேசத்தில் இயற்கை அனர்த்த அபாயம் இருப்பது தொடர்பில் அங்கிருந்த மக்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்ததா? என்பது குறித்து விசாரணை நடத்தி, தன்னிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவுக்கிணங்க, பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.










CMYK

# ஆண்கள்

## அழகாக இருக்க வேண்டுமா ?



எப்போதும் இளமையாக, அழகாக இருக்க வேண்டும் என்று தான் ஆண்கள் பலரும் விரும்புவார்கள். நல்ல பழக்கவழக்கங்கள், ஆரோக்கியமான உணவு முறை மற்றும் உடற்பயிற்சியின் மூலம் இளமையாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கலாம்.

தினமும் ஷேவிங் செய்வதை முதலில் தவிர்த்து விடுங்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில் முகத்தில் உள்ள தோல் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

முக்கியமாக கண்களுக்கு கீழே கரு வளையம் வராமல் பார்த்துக் கொள்ளவும். வாரத்துக்கு இருமுறையாவது வெள்ளரித் துண்டுகளை கண்களில் வைத்து எடுத்தால் ஆரோக்கியமாக இருக்கும்.

தக்காளிச் சாற்றைத் தினமும் முகத்தில் தடவி மசாஜ் செய்து உலர வைத்து கழுவி வந்தால், அது சருமத்துக்கு தேவையான விட்டமின் சி, ஏ மற்றும் கே சத்துக்களை வழங்கி, சருமத்தை பொலிவோடும் அழகாகவும் வைத்துக் கொள்ளும்.

கற்றாழை சாற்றை வாரத்துக்கு இருமுறை முகத்தில் தடவி வந்தால், கருமை நீங்கி பளபளப்பாக இருக்கும். குறிப்பாக தினமும் குறைந்தது நான்கு முறையாவது முகத்தைக் கழுவுங்கள்.

# குண்டானவர்கள் அதிகம்





இன்னும் 20 வருடங்களில் மூன்றில் இரண்டு பங்கு ஆண்கள், உடல்பருமன் உடையவர்களாக இருப்பர் என்று இங்கிலாந்தின் பொது சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. அதாவது 2034 ஆம் ஆண்டளவில் 50 வயதை எட்டிய 63 சதவீதமான ஆண்களும், 38 சதவீதமான பெண்களும் உடல் பருமன் உடையவர்களாக இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த வயதுடையவர்களில் 37 சதவீதமான ஆண்களும், 31 சதவீதமான பெண்களும் உடல் பருமன் உடையவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு சடுதியாக உடல் பருமன் அதிகரிப்பதற்கு மதுப் பாவனை மற்றும் சிகரெட் பாவனையே பிரதான காரணமாக அமையும் என்று அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# கடல் நடுவே கலங்கரை விளக்கு





ஸ்கொட்லாந்தில் கடலில் நடுவே அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பழமையான கலங்கரை விளக்கு பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. ஸ்கொட்லாந்தின் 'அங்கஸ்' என்ற கடற்பகுதியில் அமைந்துள்ள பெல் ராக் என்ற கலங்கரை விளக்குத் தான் உலகிலேயே மிகவும் பழமையான கலங்கரை விளக்காகக் கருதப்படுகிறது.

ரோபர்ட் ஸ்டீவன்ஸன் என்பவரால் 1807 ஆம் தொடங்கப்பட்ட கட்டுமானப்பணி 1810 ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளது. பின்னர் 1813 ஆம் ஆண்டு செயற்பாட்டுக்கு வந்த இந்தக் கலங்கரை விளக்கு, எந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியும் இல்லாத அந்தக் காலத்திலேயே கடலின் நடுவிலேயே கட்டப்பட்டுள்ளதால் காண்போர் அனைவருக்கும் பெரும் பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகிறது.

இதில் இருந்து வீசும் ஒளியினை, கடலில் இருந்து சுமார் 56 கிலோ மீற்றர் தொலைவில் கூட காண முடியும் என்பது இதன் சிறப்பம்சம் ஆகும்.


தற்போது சுற்றுலாவாசிகள் கண்டுகளிக்க ஏதுவாக அருங்காட்சியமாக மாற்றப்பட்டுள்ளதால் ஆண்டுதோறும் பலர் இங்கு வந்து செல்கின்றனர். மேலும் கடலின் நடுவே கட்டப்பட்டுள்ள இந்த கலங்கரை விளக்கின் உச்சியில் நின்று பார்க்கும்போது, ஆழ்கடலின் பிரம்மாண்டத்தை நம் கண்களால் உணர முடியும்!

## ஞானக்கதிர்

### மக்களை எப்படித் திருத்தியமைக்கலாம்?

வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்கு என்று திட்டம் போட்டு அத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மக்களைத் திருத்தியமைக்க முடியாது. பொறுமையுடன் சோர்வடையாமல் சத்தியத்தையும், தர்மத்தையும் கடைப்பிடித்து அவற்றைச் சிறுகச் சிறுக மக்களிடையே புகுத்துவதன்மூலம் மக்களைத் திருத்தியமைக்கலாம்.




# கத்தியால்

## இப்படியும் அவஸ்தை



கத்தி படத்தில் விஜய் அடிக்கடி கூறிய கையடக்கத் தொலைபேசி இலக்கம், அருமனையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருடையது என்ற சுவாரஸ்யமான தகவல் வெளியாகியுள்ளது.

கத்தி படத்தில் நாயகி சமந்தா தனது காதலன் விஜய்யிடம் ஒரு தொலைபேசி இலக்கத்தைக் கொடுப்பார். விஜய் அந்த இலக்கத்தைப் பலமுறை கூறுவார். ஆனால் அவர் அதற்கு அழைப்பை மேற்கொள்ளும் போது, மறுமுனையில் பேசுபவர் நாங்கள் மாநகராட்சியின் நாய் பிடிக்கும் பிரிவு என்பார்.

இது படத்தில் நகைச்சுவையாக இருந்தது. ஆனால் உண்மையில் இதனால் ஒரு ஆசிரியர் அவதிப்பட்டு வருகிறார்.

விஜய் படத்தில் தெரிவித்த கையடக்கத் தொலைபேசி இலக்கம் குமரி மாவட்டம் அருமனையைச் சேர்ந்த ஆசிரியருடையது. விஜய் இரசிகர்கள் பலரும் அந்த இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டு பேசுகிறார்கள். இரசிகர்கள் மறுமுனையில் இருப்பது யார் என்று கூடத் தெரியாமல் இளைய தளபதி என்று நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள். இதனால் ஆசிரியர் கவலை அடைந்துள்ளார். ஆரியருக்கு அழைப்பு எடுப்பவர்கள் முருகதாஸ், சமந்தாவிடம் பேச வேண்டும் என்று கேட்கிறார்களாம். அவரது தொலைபேசி இடை விடாது ஒலித்துக் கொண்டே இருப்பதால் அவர் அதைப் பாடசாலைக்கு எடுத்துச் செல்வதை நிறுத்திவிட்டார். பாடசாலைக்கு சென்றுவிட்டு வந்து பார்த்தால் 400 இற்க்கும் மேற்பட்ட தவறிய அழைப்புக்கள் இருக்கின்றனவாம்.

அவஸ்தைகளைத் தாண்டி கத்தி படம் வெளிவந்திருந்தது. தற்போது அந்தப் படத்தினால் ஆசிரியர் ஒருவர் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

# சொனி ஸ்மார்ட் வோட்ச் 3 (SONY SMARTWATCH 3)

## விரைவில் அறிமுகம்




சொனி நிறுவனம் தனது புத்தம் புதிய ஸ்மார்ட் கடிகாரமான Sony SmartWatch 3 இனை இந்த மாதம் பிரித்தானியாவில் அறிமுகம் செய்யவுள்ளது. வரிகள் உட்பட 180 பவுண்ட்ஸ் பெறுமதி உடையதாக இருக்கும் இந்த கடிகாரம் 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Quad Core Processor, பிரதான நினைவகமாக 512MB RAM என்பனவற்றுடன் 4GB சேமிப்பு நினைவகத்தை உடையதாகவும் காணப்படுகின்றது. மேலும் அன்ரோயிட் 4.3 இயங்குதளத்தில் செயற்படக் கூடிய இந்த கடிகாரத்தில் Bluetooth 4.0, Micro USB Port, 420 mAh மின்கலம், GPS வசதி என்பனவும் தரப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தக் கடிகாரத்தின் 215 பவுண்ட்ஸ் பெறுமதிவாய்ந்த Stainless Steel பதிப்பையும் விரைவில் அறிமுகம் செய்ய சொனி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# யூடிப் (YOUTUBE) அறிமுகம் செய்யும் புதிய வசதி

வீடியோ கோப்புக்களை ஒன்லைனில் பகிர்ந்து கொள்ளும் வசதியை வழங்கும் YouTube தற்போது பயனர்களுக்காக புதிய வசதி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது வீடியோக்களை பார்வையிடும் போது வீடியோக்களில் விளம்பரங்கள் இடம்பெறச் செய்வது வழமையாகும்.




இந்த விளம்பரங்களால் பயனர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு அவற்றைத் தவிர்த்துக்கொள்ளும் வசதியைப் பயனர்களுக்கு வழங்கவுள்ளது. இது தொடர்பாக மேலதிக தகவல்கள் வெளியிடப்படாத நிலையில் இந்த வசதியை அனுபவிப்பதற்கு பயனர்களிடமிருந்து பணம் அறவிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மைக்ரொசொப்ட் ஒபிஸ் (MICROSOFT OFFICE) 365 பாவனையாளர்களுக்கான அதிரடிச் சலுகை




மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் Office 365 இனை ஒன்லைனில் பயன்படுத்தும் பயனர்களுக்காக புதிய அதிரடிச் சலுகை ஒன்றை அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் படி மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஒன்லைன் சேமிப்பு சேவையான One Drive இல் ஆவணங்கள், புகைப்படங்கள் போன்றவற்றை சேமிப்பதற்காக வரையறை யற்ற சேமிப்பு வசதியினை வழங்கவுள்ளது.

இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக பாவனையாளர்கள் மாதாந்தம் 6.99 டொலர்களை கட்டணமாக செலுத்த வேண்டும். எனினும் இந்த வசதி அடுத்த வருட ஆரம்பத்திலிருந்தே நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது


# G3 ஸ்மார்ட் போன்



பிரபல LG நிறுவனம் தன்னுடைய G3 ஸ்மார்ட் போனை அறிமுகம் செய்துள்ளது. இதில் HD டிஸ்பிளே தரும் 5.5 அங்குல அளவிலான திரை தரப்பட்டுள்ளது. இதன் குவாட் கோர் ப்ராசசர் 1.3 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்குகிறது. ஆண்ட்ராய்ட் 4.4. கிட்கேட் ஆப்பரேட்டிங் சிஸ்டம் தரப்பட்டுள்ளது.

LED Flash 13 எம்.பி. திறன் கொண்ட பின்புறக் கமராவும், 1.3 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட முன்புறக் கமராவும் இதில் இயங்குகின்றன.

# விண்டோஸ் 10 இன் புதிய வசதி



மைக்ரோசொப்ட் நிறுவனம் அண்மையில் Windows 10 இயங்குதளத்துக்கான Technical Preview பதிப்பை வெளியிட்டிருந்தது.

இதில் Action Cente எனும் டெக்ஸ்டாப்பில் தென்படக்கூடிய Notification பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மின்னஞ்சல்கள், பேஸ்புக், வாட்ஸ் அப் போன்ற அப்பிளிக்கேஷன்களுக்கான Notification - களை உடனுக்கு உடன் அறிந்துகொள்ளும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

தேவைக்கு ஏற்றால் மூடும் (Close) வசதியைக் கொண்டுள்ளதுடன், டாக்ஸ் பாரிலிருந்து மீண்டும் செயற்படுத்தும் வசதியும் இந்த Notification பகுதியில் காணப்படுகின்றது.

# ASUS இன் MEMO PAD







இந்த வாரம் Asus நிறுவனம் MeMO Pa- எனும் புதிய அன்ரோயிட் டேப்லட்டினை அறிமுகம் செய்துள்ளது. 10 அங்குல அளவு, 1280 மு 800 Pixel Resolution தொடுதிரையைக் கொண்ட இந்த டேப்லட் ஆனது Quaicomm Snapdragon S4 Pro Processor, 1GB RAM என்பனவற்றுடன் 8 GB மற்றும் 32 GB சேமிப்பு நினைவகத்தைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் Android 4.4 KitKat இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்த டேப்லட்டில் 9.5 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலம், 2 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 0.3 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன. இதன் விலையானது 199 டொலர்கள் ஆகும்.

# ஒன்லைன் சேமிப்பு வசதிக்கு விடை கொடுக்கும் BITCASA



கிளவுட் ஸ்டோரேஜ் எனப்படும் ஒன்லைன் சேமிப்பு வசதியை வழங்கிவரும் நிறுவனங்களில் ஒன்றான Bitcasa தனது வாடிக்கையாளர்களுக்கு வரையறையற்ற சேமிப்பு வசதியை வழங்கிவந்தது. எனினும் தற்போது இதனை நிறுத்தவுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது. இவ்வாறு நிறுத்தப்படுவதற்கு முறைகேடுகளே காரணம் என தெரிவித்துள்ள அந்த நிறுவனம், புதிய சில பக்கேஜ்களை பயனர்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 1வீய தொடக்கம் 10TB வரையான சேமிப்பு வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியும். 1TB சேமிப்பு வசதியினை பெற்றுக்கொள்வதற்கு மாதாந்தம் 9.99 டொலர்களும் அல்லது வருடாந்தம் 99 டொலர்களும் செலுத்த வேண்டும் என்பதுடன், 10TB சேமிப்பு வசதியைப் பெறுவதற்கு வருடாந்தம் 999 டொலர்கள் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக இருப்போம்

மலையகத்தில் பெரும் சோகம் நிகழ்ந்துள்ளமை வேதனையை ஏற்படுத்துகின்றது. நூற்றுக்கணக்கானவர்கள் இன்னமும் காணாமற்போனவர்களாகவே உள்ளனர். 14 வரையானோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்றபோதிலும் அவை மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டு மக்களால் தெரிவிக்கப்படுகிறது. இந்த மண் சரிவால் 14 லட்சத்து 56 ஆயிரத்து 277 பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உதவிகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருக்கும் மலையக மக்கள் ஏற்கனவே எதிர்கொண்டு வரும் சோகத்துக்கு மேலாக இயற்கையும் அவர்களை வாட்டி வதைப்பது ஏற்புடையதன்று. சுமார் 300 ஆண்டுகளாக இந்த மக்கள் கொத்தடிமைகள் போன்றே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது சிறிய லயன் குடியிருப்புகளில் இருந்து அவர்களுக்கு மீட்சி கிடைக்கவில்லை. அவர்களும் தமிழர்களாக இருப்பதனால் வழக்கம் போலவே கொழும்பு அரசு அவர்களையும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்தி வருகிறது. அவர்கள் குந்தியிருக்க ஒரு சொட்டு நிலமும் ஒரு நிரந்தர வீடும் வழங்குவதற்கு கொழும்பு நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தச் சோகம் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடும்.

கொழும்பு நகரை அழகுபடுத்துவதற்கும், வடக்கில் இராணுவக் கட்டுமானங்களை விரிவாக்குவதற்கும் செலவிட்ட நிதியில் ஒரு பகுதியை ஒதுக்கி, இந்த மக்களின் நலனைக் கவனித்திருந்தால்கூட இப்போது பாதிப்பு இந்தளவுக்கு இல்லாமல் போயிருக்கக்கூடும்.

நிலச் சரிவுக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ள 7 லயன்களில் இருந்தவர்களை அங்கே வசிக்க வேண்டாம் என்றும் அது ஆபத்தான பகுதி என்றும் தாங்கள் ஏற்கனவே எச்சரித்திருந்தனர் என்று அதிகாரிகள் இப்போது கூறுகிறார்கள். அப்படி இருந்தாலும் அந்த மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி அவர்களுக்கு வேறு நிரந்தரக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அவர்கள் ஏனோ தீவிர முயற்சி எடுத்திருக்கவில்லை என்று தெரிகிறது. விளைவு, இப்போது பல உயிர்களை இழந்தும், நூற்றுக்கணக்கானவர்களுக்கு நடந்தது என்ன என்று தெரியாமலும் அவலப்பட வேண்டியதாக இருக்கிறது.

மிகப் பெரும் துயரம் நிகழ்ந்த பின்னர் அதிகாரிகளும் அமைச்சர்களும் நிவாரணங்களை அறிவித்து வருகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ அறிவித்திருக்கிறார். இதனையே அவர் முதலில் திட்டமிட்டுச் செயற்படுத்தியிருந்தால் உயிரிழப்புக்களையும், பாதிப்புக்களையும் குறைத்திருக்க முடியும்.

அப்படி முன்கூட்டியே சிந்தித்துச் செயற்படும் அமைச்சர்களையும் அரச தலைவர்களையும் நாம் கொண்டிருக்கவில்லை என்பது எமது துரதிர்ஷ்டம். பாதுகாப்பான இடங்களில் இருக்கும் அமைச்சர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் தலைவர்களுக்கும் அந்த மக்களின் துன்ப, துயரங்கள் புரியாமல் போகலாம். ஆனால், 30 வருடங்களாக இடப்பெயர்வுகளையும் இறப்புகளையும் சொத்தழிவுகளையும் கண்டு கண்டே துயரப்பட்ட வடக்கு மக்களுக்கு அது நன்கு புரியும்.

இந்தச் சமயத்தில் மலையக மக்களுக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருப்புதே நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை.



# சூடு பிடிக்கும் தமிழக அரசியல்

ராஜ்

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில், புதிய மெகா கூட்டணியை உருவாக்கும் திட்டத்தில் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் இருப்பதாக செய்திகள் வெளியாகி வரும் நேரத்தில், சமீபத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் வைகோவும், மு.க.ஸ்டாலினும் சந்தித்து பேசிக்கொண்டமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை எற்படுத்தியுள்ளது.

பா.ம.க. நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ்-சரசுவதி தம்பதியின் பேர்த்திக்குக்கு கடந்த வியாழக்கிழமை திருமணம் நடைபெற்றது.

இதையொட்டி, திருமண வரவேற்பு நிகழ்ச்சி பூஞ்சேரி, கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள 'கான்ப்லூயன்ஸ் பாங்க்குயிட்ஸ் ரிசோர்ட்'டில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு நடந்தது. திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்தவர்களை மருத்துவர் ராமதாஸ், மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் வரவேற்றனர்.

வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துவதற்காக தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் இரவு 7.35 மணிக்கு வந்தார். அவரை, பா.ம.க. நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ், முன்னாள் மத்திய அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் மு.க.ஸ்டாலின் மேடை ஏறிச்சென்று மணமக்களுக்குப் பரிசுப் பொருள் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார். மேடையில் இருந்து இறங்கிய அவர், மருத்துவர் ராமதாஸுடன் சுமார் 5 நிமிடம் பேசிக்கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, அவர் உணவு அருந்துவதற்காக முக்கிய பிரமுகர்களின் அறைக்குச் சென்றார்.

இந்த நேரத்தில், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மணமக்களை வாழ்த்துவதற்காக வந்தார். அவர், மணமக்களை வாழ்த்திவிட்டு மருத்துவர் ராமதாஸுடன் சுமார் 10 நிமிடத்துக்கும் மேலாகப் பேசிக்கொண்டிருந்தார்.

### வைகோ-ஸ்டாலின் சந்திப்பு

பின்னர் ஜி.கே.மணி, வைகோவை அழைத்துக் கொண்டு வி.ஐ.பி. அறைக்குச் சென்றார். அங்கு அறையில் இருந்து வெளியே வந்த மு.க.ஸ்டாலினும், வைகோவும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

**மு.க.ஸ்டாலின், வைகோ சந்தித்துப் பேசிக் கொண்டமை அரசியல் வட்டாரத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2016ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய புதிய கூட் டணி உருவாகக் கூடும் என்ற யூகங்களை இந்தச் சந்திப்பு ஏற்படுத்தியுள்ளது.**

இருவரும் பரஸ்பரம் சிரித்தபடி கைகூப்பி வணக்கத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

மு.க.ஸ்டாலினிடம், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நிலை குறித்து வைகோ விசாரித்தார். கடந்த சில நாள்களுக்கு முன்பு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த மு.க.ஸ்டாலின், வைகோ பொடா வழக்கில் இருந்து விடுதலையானதற்கு வாழ்த்து தெரிவித்து இருந்தார்.

தற்போது, திருமண நிகழ்வில் அவர்கள் சந்தித்துக் கொண்ட நிகழ்வு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அவர்கள் இருவரும் சந்தித்துக்கொண்ட நிகழ்வு வர இருக்கின்ற சட்டமன்ற தேர்தலுக்கான புதிய அரசியல் கூட்டணிக்கு வழி வகுக்கும் என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இது குறித்து வைகோ கூறும்போது, நாங்கள் இருவரும் பரஸ்பரம் உடல்நலம் குறித்து விசாரித்துக்கொண்டோம். கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நலம் குறித்து விசாரித்தேன். ஸ்டாலினைச் சந்தித்துப் பேசியது மகிழ்ச்சி அளிக்கிறது' என்றார்.

இதேபோல், மு.க.ஸ்டாலினிடம், இந்தச் சந்திப்பு கூட்டணிக்கான முதல்கட்ட நடவடிக்கையா? என்று நிருபர்கள் கேட்டனர். அதற்குப் பதில் அளித்த மு.க.ஸ்டாலின், உங்கள் விருப்பம் அதுவென்றால், என்னுடைய விருப்பமும் அதுதான்' என்றார்.

### கருணாநிதி வரவேற்பு

ம.தி.மு.கவுடன் கூட்டணி அமைந்தால் மகிழ்ச்சியே, அதை நான் வரவேற்பேன் என திமுக தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை, சென்னை கோபாலபுரம் இல்லத்தில் கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கருணாநிதி கூறும்போது, ஸ்டாலின் - வைகோ சந்திப்பு புதிய கூட்டணிக்கு தொடக்கமாக இருந்தால் மகிழ்ச்சி.நானும் வைகோவும் பகைவர்கள் அல்ல. நீண்ட கால நண்பர்கள். புதிய கூட்டணி உருவானால் தி.மு.க பொதுக் குழு,செயற்குழு கூடி மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

மு.க.ஸ்டாலின், வைகோ சந்தித்துப் பேசிக் கொண்டமை அரசியல் வட்டாரத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2016ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய புதிய கூட்டணி உருவாகக் கூடும் என்ற யூகங்களை இந்தச் சந்திப்பு ஏற்படுத்தியுள்ளது.

### விஜயகாந்த் மலேசியாவுக்கு

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சில மாதங்களுக்கு முன்பு மலேசியா சென்று திரும்பினார். அப்போது விஜயகாந்த் கோலாலம்பூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதாக கூறப்பட்டது. இதற்கிடையே அவரது மகன் சண்முகபாண்டியன் நடிக்கும் சகாப்தம்' படத்துக்கான படப்பிடிப்பு மலேசியா, சிங்கப்பூரில் நடந்தது. இதையும் விஜயகாந்த் மேற்பார்வையிட்டதாக கூறப்பட்டது. இந்த நிலையில் விஜயகாந்த் நேற்று மீண்டும் மலேசியா சென்றார். திமுக - மதிமுக - பாமக கட்சிகள் புதிய அணி குறித்த பரபரப்பில் இருக்கும்போது, தங்களது கட்சித் தலைவர் மலேசியா சென்றதால் அதிருப்தியில் உள்ளனர் தே.மு.தி.கவினர்.

செவ்வி கண்டவர்
தி.அபராஜிதன்

# வறுமையான சூழ்நிலையிலும் கல்வியில் உயர்நிலை அடைந்தேன்

## கலாநிதி கனகசபை அருணாசலம் மன திறக்கிறார்

தென்மராட்சி மண் பெற்றெடுத்த தேன் மதுரத் தமிழ் ஆசான் பேராசிரியர், சாகித்திய இரத்தினம், கலாநிதி கனகசபை அருணாசலம் அவர்களுடனான நேர்காணலின்போது அவர் கீழ்க்கண்டவாறு கூறினார். 1946 ஆம் ஆண்டு தைத்திங்கள் 14ஆம் நாள் தைப் பொங்கல் தினத்தன்று கனகசபை காசிப்பிள்ளை தம்பதியினருக்கு தென்மராட்சியின் அல்லாரை என்னும் அழகிய கிராமத்தில் பிறந்தேன். கூடவே 7 சகோதரர்களுடன் கூடி வாழ்ந்தேன். வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தோம். அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, பின்னர் சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் இடைநிலை மற்றும் உயர்கல்வியைப் பூர்த்தி செய்து பட்டக் கல்வியை பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழக, கேரள பல்கலைக்கழகங்களில் ஆய்வு முயற்சியில் ஈடுபட்டு கலைமாணி, முதுகலைமாணி, கலாநிதி பட்டங்களைப் பெற்றேன் என்றார். அவரது குடும்ப நிலை மற்றும் கல்விப்பணி, தமிழ்ப்பணி என்பவை பற்றிக் கேட்டபோது:

**வறுமையான சூழலில் வளர்ந்தேன்**

கல்விப் பின்புல அறிவு குறைந்த வறுமைப்பட்ட, தோட்ட வேலையில் ஈடுபடுகின்ற குடும்பச் சூழலில் பிறந்த நான் நாளாந் தம் தோட்ட வேலை செய்து நடைப் பய ணத்தில் தேங்காய் சுமந்து, சந்தையில் விற்று விட்டு வெறுக்காலுடன் வெண் மணல் தரைவழியே நடந்து சென்று பாடசாலைக் கல்வியைக் கற்று வந்தேன். எனது சவால் நிறைந்த வாழ்க்கையை சாதனையாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் கல்வி கற்று வெற்றிகண்டேன்.

**தமிழ் மொழியின் மீது அதீத பற்று**

பாடசாலைக் காலத்தில் தமிழ்மொழிமீது கொண்ட அதீத ஈடுபாடு காரணமாக விடா முயற்சியுடன் ஆசிரியர்களின் அபரிமித ஊக்குவிப்பினால் பெரும்பாலும் வகுப்பில் முதல் மாணவனாக விளங்கினேன். இணை பாடவிதான செயற்பாடுகளான திருக்குறள் மனனம், பேச்சுப் போட்டி, தேவார திருவாசக மனனப் போட்டி, விவேகானந்தா சபை சமயப் பரீட்சைகள் என்பவற்றில் பங்குபற்றி சுமார் 6 தடவைகள் புத்தகப் பரிசில்கள் பெற்றுள்ளேன்.



இன்று வரை அவை என்னிடமுள்ளன.

மேலும் உயர்தர வகுப்பில் தமிழ், வரலாறு, அரசறிவியல், புவியியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து 1966ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றி தமிழிலும் வரலாற்றிலும் ஏ தர சித்தியையும், அரசறிவியலிலும் புவியியலிலும் பி தர சித்தியையும் பெற்றேன். உயர்தரத்திலும் வகுப்பில் முதல் மாணவனாகவே திகழ்ந்தேன்.

**முதல் மாணவர்களில் ஒருவனாக**

பல்கலைக்கழகம் நடத்திய பொதுக்கலை தகுதித் தேர்வின்போது பொருளியல், புவியியல், தமிழ் பாடங்களில் ஏ தர சித்தியைப் பெற்று, அதில் தோற்றிய 780 மாணவர்களுள் முதல் 9 மாணவர்களுள் ஒருவனாக இடம்பிடித்தேன். அப்போது பொரு ளியல் துறை விரிவுரை யாளராக இருந்த தந்தை செல்வாவின் மருமகன் வில்சன் அவர்கள் அழைத்து தமிழ்துறையின் நம்பிக்கை நட்சத்திரமாக வருவீர் என ஆசீர்வதித்தமை என்னை மாற்றமடையச் செய்தது. அத்துடன் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்களது அறிவுரையும் தமிழ் பாடத்தில் எனக்கிருந்த தீவிர ஆர்வ மும் தமிழைச் சிறப்புப் பாடமாகவும், தென்னிந்திய வரலாற்றையும், இலங்கை வரலாற்றையும் துணைப் பாடங்களாகவும் பயிலத் தூண்டியன.

**தற்காலிக விரிவுரையாளராக நியமனம்**

பல்கலைக்கழக இறுதியாண்டு பரீட்சையைத் தொடர்ந்து இரண்டு மாத காலத்தினுள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்னரே தற்காலிக விரிவுரையாளராக இணைந்து கடமையாற்றி 1972 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் நியமனம் பெற்றேன். 1974ஆம் ஆண்டு முதுகலைமாணி பட்டத்தைப் பெற்றேன். 1976ஆம் ஆண்டு நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றேன். தொடர்ந்து கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண்டு 1979 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டம்பெற்று, தொடர்ந்து தமிழ்த் துறைத் தலை வராகக் கடமையாற்றினேன்.

**தமிழ்த்துறைத் தலைவராக**

1995 ஆம் ஆண்டு தொடக்கம் 1998ஆம் ஆண்டுவரை தமிழ்த்துறைத் தலைவராகக் கடமையாற்றினேன். அதே காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் சங்கத்தினதும் சங்கீத நாட்டியச் சங்கத்தினதும், தலைவராகக் கடமையாற்றினேன். மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் தொலைக்கல்வி பாட அலகுகளை தயாரிப்பதிலும், க.பொ.த. சாதாரண, உயர்தர தமிழ் பாடவிதானங்கள் அமைப்பதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளேன். 1972ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பரீட்சகராகவும், 1983ஆம் ஆண்டு தொடக்கம் பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளேன். நீண்ட காலமாக வெளிவாரி மாணவர்களுக்கான தமிழ், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்கான முக்கிய பரீட்சகராகவும், 1985ஆம் ஆண்டு தொடக்கம் முதுகலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களுக்கான ஆய்வை மேற்கொள்வோருக்கு மேற்பார்வையாளராகவும், பேராதனை, யாழ்ப்பாணம், தென்கிழக்கு, சப்ரகமுவ பல்கலைக்கழகங் களில் இளம் விரிவுரையாளர்களின் பட்டப்பின் படிப்புக்காக ஆய்வேடுகளை மதிப்பிடும் பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளேன். மேலும், நீண்ட காலமாக தமிழ்நாட்டின் மது ரைப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், கேரளாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டப்பின் படிப்புக்கான மாணவர்களின் ஆய்வேடுகளை மதிப்பீடு செய்யும் பரீட்சகராக கடமையாற்றியுள் ளேன்.

**நூல்கள் வெளியீடு**

எனது முதலாவது நூலான 'பாரதியார் சிந்தனைகள்' என்ற ஆய்வு நூல் 1984ஆம் ஆண்டு தமிழகத்தில் வெளியிடப்பட்டது. 1992ஆம் ஆண்டு 'சுவாமி விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள்' என்ற நூல் வெளிவந்ததுடன் அதற்கு தேசிய சாகித்திய மண்டல பரிசும் கிடைத்தது.

காலக் கண்ணாடி, இளங்கதிர், இலங்கையின் மலையகத் தமிழ் இலக்கியம், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள், தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையின் மலையகத் தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம், இளந் தலைமுறையினரும் கல்வியும், தமிழகத்தில் இந்து பௌத்த சமண மதங்கள், சாதனையாளர் சாரல் நாடன், இலங்கையில் தமிழ்ச் சிறுகதைகள், 20ஆம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகள், 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், இலக்கியக் கட்டுரைகள், 20ஆம் நூற்றாண்டுத் தமிழகக் கவிதை ஆகிய பதினைந்து ஆய்வு நூல்க[illegible]ம் சுமார் 70 இற்கு மேற்பட்ட ஆய்வுக் க[illegible]ட்டுரைகளையும் எழுதி வெளியீடு செய்துள்[illegible]ன். இவை பல தடவைகள் தேசிய, [illegible]ாண, சாகித்திய விருதுகளைப் பெற்[illegible]ள்ளன.

[illegible] ஓய்வுக்குப் பின்னர் உடல்நலக் [illegible]வுடனான தற்போதைய சூழ்நிலையில் [illegible]தன்மராட்சி கல்வி வலயம், தென்மராட்சி கலாசார பேரவை என்பன எனக்கு வழங் கிய மதிப்பளிப்பு என்னைப் பெரும் புளகாங் கிதமடையச் செய்கின்ற அதே வேளை, காலச்சூழ்நிலையால் எனது பிரதேசத்துக்கு முழுமையான எனது புலமையை வெளிப் படுத்த முடியவில்லை என்கின்ற குற்ற உணர்வு மனதினுள் புதையுண்டுள்ளது. இருப்பினும் உடல் சோர்ந்தாலும் உள்ளம் பூரிப்படைகின்றது என்னை அடையா ளப்படுத்தும் உறவுகளால்....எனத் தெரிவித்தார்.

# ஐஸ்கிறீம் மட்டுமே பிரச்சினையல்ல

ராஜராஜன்

யாழ்.குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் ஐஸ்கிறீம் வகைகளில் மலத்தொற்றுக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டு ஐஸ்கிறீம் உற்பத்திகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். தென்பகுதியைச் சேர்ந்த பெரும் ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்கள் குடாநாட்டில் கால்பதிப்பதற்கு வசதியாகவே அநீதியான வகையில் தமது தொழில் முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே குடாநாட்டில் காணப்படும் நிலத்தடி நீர் மக்கள் பாவனைக்கு ஏற்றதல்ல எனவும், அந்த நீரில் மலத் தொற்றுக் காணப்படுவதே இதற்கான காரணமெனவும் தெரிவிக் கப்பட்ட நிலையில் ஐஸ்கிறீம் வகைகளுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் பலர் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது ஜீவனோபாயமாக இந்தத் தொழிலே விளங்கி வருகின்றது. இந்த நிலையில் இதற்குத் தடை விதிக்கப்பட்டதால் பலர் பாதிக் கப்பட்டுள்ளனர். மலத்தொற்றுள்ள நீரில் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீமை வாங்கி உண்பவர்களுக்கு நோய்கள் ஏற்படலாம் என்ற காரணத்துக்காகவே அதன் உற்பத்திக்குத் தடை விதிக்கப்பட்டதை எவருமே உணர்ந்து கொள்வார்கள். ஆனால், மலத்தொற்றுக் கலந்த நீரையே குடாநாட்டு மக்கள் தொடர்ந்து அருந்தி வருகிறார்கள் என்பதையும் சுகாதார சேவை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். ஐஸ்கிறீமை ஒரு சிலரே தினமும் உண்ணும் நிலையில் நீரை அனைவருமே அருந்துகின்றனர். இதனால் ஏற்படப்போகும் பாதிப்பும் பெரிய அளவிலேயே இருக்கப்போகின்றது. இதற்கான மாற்றுவழியை இதுவரை கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. சில நாள்கள் இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கு குடிதண்ணீரைக் கொண்டுவருவதாகக் கூறப்பட்டு வந்தது. தற்போது அதுவும் அடங்கிப் போய்விட்டது. இந்த நிலையில் இங்கு தயாரிக்கப்படும் ஏனைய உணவுகளும் மலத்தொற்றுடன் காணப்படுகின்றனவா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட பாகை வெப்ப நிலையிலேயே நோய்க்கிருமிகளை அழிக்க முடியும். அதற்குக் குறைவான வெப்பநிலையில் உணவுகள் தயாரிக்கப்படும்போது கிருமிகள் அங்கு காணப்படவே செய்யும். ஆகவே சுகாதாரத் துறையினர் இதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும், உணவகங்களில் வழங்கப்படும் குடிதண்ணீர் தொடர்பாகவும், இங்கு தயாரிக்கப்படும் குளிப்பானங்கள், குடிதண்ணீர் ஆகியன தொடர்பாகவும் ஆய்வுகள் செய்யப்படல்வேண்டும். போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரில் மலத்தொற்றுக் காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த ஆய்வுகள் அவசியமாகின்றன.

தற்போது சுகாதாரமான வகையில் ஐஸ்கிறீம் தயாரிப்பது தொடர்பான செய்திகள் வெளிவந்துள்ளன. இதுவொரு நல்ல முயற்சி என்றாலும் தொடர்ந்தும் ஐஸ்கிறீம் உற்பத்திகளைக் கண்காணிப்பது என்பது கடினமான விடயமாகும்.

ஆகவே, இந்தப் பிரச்சினையின் மூல வேராகக் காணப்படும் அசுத்தமான குடிதண்ணீர் பிரச்சினைக்கு உடனடியாக முடிவு காணப்படவேண்டும். இதுவொரு அவசரமான செயற்பாடாகக் காணப்படுகின்றது. வெறு மனே இரணை மடுவைப் பற்றியே பேசிக் கொண்டிருக்காது இதற்கான மாற்று வழிகள் கண்டுபிடிக் கப்படல் வேண்டும்.

பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்ததாகக் கூறுவார்கள். தொடர்ந்து ஏற்படும் துன்பங்களைக் குறிப்பதற்கே இந்த உதாரணம் கூறப்பட்டது. இது யாழ்.குடா நாட்டுக்கு மிகவும் பொருந்தும். ஏற்கனவே நிலத்தடி நீரில் மலத்தொற்று உள்ளதாகக் கூறப்படும் நிலையில் மின்சார சபையினரும் தமது பங்குக்கு கழிவு ஓயிலை நிலத் தின் கீழ் செலுத்தி நீரை மாசுபடுத்தி விட்டார்கள். இதனால் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எப்போது விடிவு காலம் ஏற்படும் என்பதும் தெரியவரவில்லை. நாட்டின் ஒருபகுதி மக்கள் தமது சகல தேவைகளுக்கும் சுத்தமான நீரைப் பயன்படுத்திவரும் நிலையில் குடாநாட்டு மக்கள் அருந்துவதற்குக் கூடச் சுத்தமான நீர் இன்றித் தவிக்கின்றனர்.

ஆகவே வெறுமனே ஐஸ்கிறீமை மட்டுமே ஆராய்ந்து கொண்டிருக்காது மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீரை வழங்குவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். சுத்தமான நீர் கிடைத்தால் ஐஸ்கிறீம் உற்பத்திகளிலும் சுகாதாரம் தானாகவே வந்து சேர்ந்துவிடும்.



## மாறன் சகோதரர்களுக்கு மார்ச் 2 இல் அழைப்பாணை

### ஏர்செல் மேக்சிஸ் வழக்குத் தொடர்பாக





டில்லி, ஒக். 31

ஏர்செல்- மேக்சிஸ் ஒப்பந்த முறைகேடு வழக்கில் மத்திய தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன், அவரது சகோதரரும் சன் குழுமத் தலைவருமான கலாநிதி மாறன் உள்ளிட்டோரை வரும் மார்ச் 2 ஆம் திகதி நேரில் முன்னிலையாகுமாறு டில்லி சி.பி.ஐ. நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் குற்றத்துக்கான முகாந்திரம் இருப்பதால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்ப சி.பி.ஐ. கோரிக்கை விடுத்திருந்தது. இதனை ஏற்ற நீதிமன்றம், கலாநிதிமாறன், தயாநிதி மாறன், மேக்சிஸ் நிறுவனத்தின் தலைவர் அனந்தகிருஷ்ணன், மேக்சிஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் ரால்ப் மார்ஷல் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

மேலும், சன் டைரக்ட், ஒஸ்ட்ரோ ஓல் ஏஷியா நெட்வேர்க், மேக்சிஸ் கம்யூனிகேஷன், சவுத் ஏஷியா என்டர்டெயின்மென்ட் ஹோல்டிங்ஸ் ஆகிய நான்கு நிறுவனங்களுக்கும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஏர்செல் நிறுவனப் பங்குகளை மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்கச் சொல்லி, ஏர்செல் நிறுவனர் சிவசங்கரனை அப்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த தயாநிதிமாறன், வற்புறுத்தியதாக முறைப்பாடு எழுந்தது.

ஏர்செல்லின் பங்குகளை மேக்சிஸ் நிறுவனத்திற்கு விற்றதற்கு பலனாக மேக்சிஸ் நிறுவனம் சன் டைரக்ட் நிறுவனத்தில் 3 ஆயிரத்து 500 கோடி ரூபா முதலீடு செய்ததாகவும் சி.பி.ஐ. தனது குற்றப்பத்திரிகையில் குற்றம் சாட்டியுள்ளது. (வ)

# காங். ஆதரவை ஏற்கவே கூடாது

### பா.ஜ.க.வுக்கு சிவசேனா எச்சரிக்கை

மகாராஷ்ரா, ஒக். 31

மகாராஷ்ராவில் பாரதிய ஜனதாவின் புதிய அமைச் சரவை இன்று பதவியேற்க உள்ள நிலையில் தேசியவாத காங்கிரஸ் ஆதரவை ஏற்கக் கூடாது என்று சிவசேனா எச்சரிக்கை விடுத்துள்ளமை மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

மகாராஷ்டிராவில் நடைபெற்று முடிந்த சட்டசபைத் தேர்தலில் பாரதிய ஜனதாக அமோக வெற்றி பெற்றாலும், அதற்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற சிவசேனாவுடன் அந்தக்கட்சி பேச்சு நடத்தியது. இந்தநிலையில் அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் தேவிந்திர பட்நாவிஸ் தலைமையில் 6 அமைச்சர்கள் இன்று பதவி ஏற்கயுள்ளனர். பதவி ஏற்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். இதற்காக சுமார் 30ஆயிரம் பேர் பங்கேற்கும் வகையில் மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

புதிய அரசு அமைக்க குறைந்தபட்சம் 145 சட்டசபை உறுப்பினர்கள் தேவை என்பதால் 123உறுப்பினர்களை கொண்ட பா.ஜ.கவுடன், 63 உறுப்பினர்களைக் கொண்ட சிவசேனா கூட்டணியில் சேர்வது உறுதியாகியுள்ளது. இருப்பினும் அமைச்சரவையில் இடம் பெறலாமா என்பது கூறித்து சிவசேனா முடிவு எடுக்கும் என்று கூறப்படுகிறது.



இந்தநிலையில் அக்கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிக்கையான சாம்னாவில் முதலமைச்சராக பதவியேற்க உள்ள தேவிந்திர பட்நாவிஸ்சுக்கு சிவசேனா வாழ்த்துத் தெரிவித்துள்ளது. அதே வேளை புதிய அரசு அமைக்க தேசியவாத காங்கிரஸின் ஆதரவை ஏற்கக் கூடாது என்று பா.ஜ.கவுக்கு சிவசேனா எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)



சென்னையில் கடந்த 24 மணி நேரமாக நீடிக்கும் மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள தாழ் நிலப் பகுதிகள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இலங்கை - கன்னியாகுமரி அருகே மையம் கொண்டிருந்த காற்று மேலடுக்கு சுழற்சி அதே இடத்தில் நீடிப்பதால் எதிர்வரும் நாள்களிலும் மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இந்திய தூதருக்கு பாகிஸ்தானால் அழைப்பாணை

### துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து

டில்லி, ஒக். 31

எல்லைப் பகுதியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக இந்திய தூதருக்கு பாகிஸ்தான் அரசு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக பாகிஸ்தான் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தௌஹீர் என்பவர் நரோவல் பகுதியில் புல் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது தவறுதலாக சர்வதேச எல்லைப் பகுதிக்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது இந்தியப் படைகள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தௌஹீரை சுட்டதாகவும், தகவல் அறிந்து வந்த பாகிஸ்தான் வீரர்கள் காயமடைந்த தௌஹீரை அழைத்துச் சென்றபோது அவர் உயிரிழந்ததாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்தச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அரசு, எல்லைப் பகுதியில் இந்திய ராணுவம் விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

அதற்கு முன்னதாக தவறுதலாக எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் நுழைந்த முகமது தீன் என்பவரையும் இந்தியப் படைகள் சுட்டுக்கொன்றதாகப் பாகிஸ்தான் அரசு குற்றம் சாட்டியுள்ளது. (வ)

## 'ஹூட் ஹூட்' புயலிடம் காதல் சொல்லிய இருவர் கைது

ஆந்திரா, ஒக். 31

கடலோர ஆந்திராவை புரட்டிப் போட்ட ஹூட் ஹூட் புயல் தொடர்பாக மக்களிடையே வன்முறையைத் தூண்டும் வகையில் பேஸ்புக்கில் கருத்துத் தெரிவித்த இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

ஹூட் ஹூட் புயல் கடந்த 12 ஆம் திகதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே கரையை கடந்தது. இதனால் கடலோர ஆந்திரா, ஒடிஸா ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தால் 50 பேர் உயிரிழந்தனர். பல கோடி ரூபா மதிப்புள்ள பயிர்கள், பொருள்கள் நாசமடைந்தன. பலர் காணாமல் போயுள்ளனர்.

இந்தநிலையில் குண்டூரை சேர்ந்த சட்டப்படிப்பு படிக்கும் மாணவர் ஒருவர், சமூக வலைத்தளத்தில் ஐ லவ் ஹூட் ஹூட் என்ற தலைப்பில் புயலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மனம் புண்படும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒருவரும் மக்களிடையே வன்முறையைத் தூண்டும் வகையில் தனது சமூக வலைத் தளத்தில் கருத்து தெரிவித்திருந்தார். இவர்கள் இருவரும் சைபர் கிரைம் சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். (வ)

## முஸ்லிம்களைக் கொலை செய்தாராம் பிரதமர் மோடிக்கு கொலை மிரட்டல்

கேரளா, ஒக். 31

கேரளாவுக்கு வருகை தர உள்ள பிரதமர் மோடிக்கு கொலை மிரட்டல் விடுத்து பா.ஜ. அலுவலகத்துக்கு மர்மக் கடிதமொன்று கிடைத்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயில் மண்டல பூஜையையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி சபரிமலைக்கு வரவுள்ளதாக செய்திகள் வெளியாகின. இந்த நிலையில், திருவனந்தபுரம் தம்பானூரில் உள்ள பா.ஜ. அலுவலகத்துக்கு ஒரு மர்மக் கடிதம் வந்தது. அலுவலகச் செய்தித் தொடர்பாளர் வி.வி.ராஜேசின் பெயருக்கு அந்தக் கடிதம் வந்திருந்தது. அவர் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அதில், ஐ.எஸ். தீவிரவாதிகள் பிரிட்டன் பிணைக்கைதியைக் கொல்வதற்கு முன்பாக எடுத்த படம் ஒட்டப்பட்டிருந்தது. அதில் பிணைக் கைதியின் முகம்மீது மோடியின் முகம் ஒட்டப்பட்டிருந்தது.

படத்தின் கீழே குஜராத்தில் மோடி முஸ்லிம்களை கொலை செய்தார். இப்போது பாகிஸ்தான் முஸ்லிம்களை கொலை செய்து வருகிறார். அவர் கேரளாவுக்கு வந்தால் பிணைக் கைதிக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும் என்று மலையாளத்தில் எழுதப்பட்டிருந்தது. இந்தக் கொலை மிரட்டல் கடிதம் பா.ஜ. வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. உடனடியாக திருவனந்தபுரம் பொலிஸ் ஆணையாளரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து கேரள பொலிஸார் நடத்திய விசாரணையில் மாவேலிக்கரா என்ற இடத்தில் இருந்து குறிப்பிட்ட மர்மக் கடிதம் அனுப்பப்பட்டமை தெரிய வந்துள்ளது. தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இது மோடியைப் பிரபலப்படுத்துவதற்காக பா.ஜ. செய்யும் தந்திரம் என எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டி உள்ளன. (வ)

# ஆகாயத்தில் பறந்த மணமக்கள்

காரைக்குடி, ஒக். 31

ஹெலி மூலம் மாப்பிள்ளை, மணப்பெண் அழைப்பு நடத்தி மேற்கொள்ளப்பட்ட நிச்சயதார்த்தத்தை ஒரு காரைக்குடி மக்களே அதிசயமாகக் கண்டு களித்தனர்.

பிரான்ஸ் நீதிமன்றத்தில் பணியாற்றி வரும் கௌதமனுக்கு திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதேநேரத்தில் தனது தம்பியின் திருமணத்தை வித்தியாசமாக நடத்த அவரது அண்ணா முடிவு செய்தார். அதற்காக அவர் ஹெலியைத் தெரிவு செய்தார். தமிழகத்தில் நடைபெற்ற பல பிரபல திருமணங்களில் கூட ஹெலி பயன்படுத்தியது இல்லை. அதையே தங்கள் வீட்டுத் திருமணத்துக்கு ஹைலைட் ஆக்க முடிவு செய்தார்.

இந்நிலையில், அறந்தாங்கியில் வசித்து வரும் பானுப்பிரியா என்ற பெண்ணுக்கும் கௌதமனுக்கும் திருமணம் செய்ய நிச்சயம் செய்யப்பட்டது. அவர்களது திருமண நிச்சயதார்த்தம் நேற்று முன்தினம் எஸ்.ஆர்.பட்டிணத்தில் நடைபெற்றது. இதற்காக பெங்களூரில் இருக்கும் டெக்கான் ஏர்லைன்ஸ் ஹெலி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, ஹெலி முற்பதிவு செய்யப்பட்டது. பெண் அழைப்பு மற்றும் மாப்பிள்ளை அழைப்பு



அனைத்தும் ஹெலி மூலம் நடத்துவது என முடிவு செய்யபட்டது.

இதற்காக எஸ்.ஆர்.பட்டிணம் அருகே இருக்கும் திருவாசகம் தோட்டத்தில் செட்டிங் போடப்பட்டு, ஹெலி இறங்கும் இடம் அமைக்கப்பட்டது. அதே போல் அறந் தாங்கியில் பெண் வீட்டுக்கு அருகேயும் ஹெலி இறங்கும் இடம் அமைக்கப்பட்டது. அதையடுத்து, நேற்றுக் காலை, மாப்பிள்ளை கௌதமன், தனது பெற்றோருடன் பெண் வீட்டுக்கு ஹெலியில் புறப்பட்டார். அந்தக் காட்சியை கிராம மக்கள் அனைவரும் ஆச்சரியத்தோடு கண்டுகளித்தனர்.

அவர்கள் அறந்தாங்கி சென்று, அங்கு நிச்சயதார்த்தம் முடிந்ததும், மாப்பிள்ளை மற்றும் மணப்பெண் அதே ஹெலியில் எஸ்.ஆர்.பட்டிணம் திரும்பினர். மாப்பிள்ளையும், மணப்பெண்ணும் ஹெலியில் இருந்து இறங்கியபோது, அந்த கிராம மக்கள் ஆர்வத்துடன் வரவேற்றனர். அதேபோல் இன்று நடைபெற உள்ள திருமணத்திலும் ஹெலி மூலம் மலர்தூவ ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் திருமணம் முடிந்த கையோடு மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் ஹெலியில் ஊர் சுற்ற உள்ளனர்.

இதுகுறித்து, மாப்பிள்ளை கௌதமன் "இந்த சிந்தனை உருவானது அண்ணனுக்குத்தான். அவர்தான் வித்தியாசமாகச் செய்ய வேண்டும் என்று ஹெலியில் ஊர்வலம் வைக்க முடிவு செய்தார். பிரான்ஸ் நாட்டில் இது பெரிய விடயம் அல்ல. அங்கு திருமணமே ஹெலியில் நடைபெற்றிருக்கிறது. ஆனால் இங்கு ஹெலியைப் பார்ப்பதே மக்களுக்கு அரிதாக இருக்கும். எங்கள் திருமணம் இதற்கு ஒரு முன்னுதாரணம்" என்றார். (வ)

## போலியான புகைப்படங்கள் மூலம் ஏமாற்றிய ஐ.எஸ்.தீவிரவாதிகள்

### உயிருடன் இருக்கும் பெண் போராளி

குர்திஷ் பெண் போராளியின் தலையைத் துண்டித்துக் கொன்றதாக ஐ.எஸ்.ஐ.எஸ். சில போலியான புகைப் படங்களை வெளியிட்டு அனைவரையும் ஏமாற்றியுள்ளது. சிரியாவின் எல்லைப்பகுதியில் உள்ள கோபேனி நகரைக் கைப்பற்றுவதில் ஐ.எஸ்.ஐ.எஸ் மும்முரமாக உள்ளதால் அவர்களை எதிர்த்து அந்தப்பகுதியைச் சேர்ந்த குர்திஷ் இனப் பெண்கள் நீண்ட நாள்களாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் குர்திஷ் பெண் போராளிகளில் மிக முக்கியமானவராகக் கருதப்படுகின்ற ரெஹேனா என்பவரை ஐ.எஸ். ஐ.எஸ். உயிருடன் சிறைப்பிடித்து, தலையைத் துண்டித்து கொன்றதாக தீவிரவாதிகளின் தரப்பில் சில புகைப் படங்கள் வெளியிடப்பட்டன.

ஆனால் இதை முற்றிலுமாக மறுத்த குர்திஷ் பெண் படையினர் கூறுகையில், ரெஹேனா இன்னமும் உயிருடன் தான் இருக்கிறாள் என்றும் எங்களையும், சமூகத்தையும் திசைதிருப்பி அச்சுறுத்தும் நோக்கிலேயே ஐ.எஸ். ஐ.எஸ். சில அதிர்ச்சியூட்டும் புகைப்படங்களை வெளியிட்டு ஏமாற்றியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் ரெஹேனாவுடன் தான் பேசியதாகவும், 100 தீவிரவாதிகளைக் கொன்ற பெண் ரெஹேனா என்று வெளியிடப்பட்ட செய்தியும் தவறானது என குர்திஷ் போராளி ஒருவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# 70பேரின் தலையை துண்டித்த ஐ.எஸ்.



சிரியாவில் 70 இராணுவ அதிகாரிகளின் தலையைத் துண்டித்து ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கொலை செய்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கின் பல்வேறுநகரங்களைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ், தீவிரவாதிகள் தினமும் பல தலைத் துண்டிப்புகளை அரங்கேற்றி வருகின்றனர்.

தற்போது வடக்கு சிரியாவில் உள்ள இட்லிப் நகரைக் கைப்பற்றுவதில் தீவிரமாக உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ், அதிரடித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். மேலும் அங்கு புதிதாகத் திறக்கப்பட்ட ஆளுநர்மாளிகையைக் கைப்பற்ற முயன்றபோது, அங்கு அவர்களை எதிர்த்துப் போரிட்ட ஏராளமான இராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகளைச் சிறைப்பிடித்தனர். அதனையடுத்து தங்களது முகாம்களுக்கு சுமார் 70 இராணுவ அதிகாரிகளை இட்டுச் சென்ற ஐ.எஸ். ஐ.எஸ், தீவிரவாதிகள் அவர்களின் தலையைத் துண்டித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே இட்லிப் நகரின் பெரும்பாலான பகுதிகள் தீவிரவாதிகளின் பிடியிலுள்ளதாகவும், அங்கு பல அரசுக் கட்டடங்கள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (வ)

## பங்களாதேஷ் இஸ்லாமிய தலைவருக்கு தூக்கு



டாக்கா, ஒக். 31

பங்களாதேஷின் இஸ்லாமியத் தலைவர் மொதியூர் ரஹ்மான் நிஜாமி என்பவருக்கு தூக்குத்தண்டனை அளித்து அந்தநாட்டு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து வங்காள தேசம் பிரிவதற்குக் காரணமான 1971 ஆம் ஆண்டுப் போரின்போது, மனித உரிமைகளை மீறிய வகையில் போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாக வங்காள தேசத்தைச் சேர்ந்த மொதியூர் ரஹ்மான் நிஜாமி என்ற இஸ்லாமிய இயக்கத் தலைவர் மீது கடந்த 40 ஆண்டுகளாக அந்தநாட்டின் சர்வதேச தலைமை தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

ஜமாத் இ இஸ்லாமி என்ற இயக்கத்தின் தலைவரான மொதியூர் ரஹ்மான் நிஜாமி மீது சுமத்தப்பட்ட 16 முக்கிய போர்க் குற்றங்களில் 8 குற்றங்கள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு தூக்குத் தண்டனை வழங்கி 3 பேர் கொண்ட தலைமைத் தீர்ப்பாயம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. (வ)

# பெரிய கண்ணுடன் ஜுபிற்றர் கிரகம்



வொஷிங்டன், ஒக். 31

பெரிய கண்ணுடன் கூடிய ஜுபிற்றர் கிரகத்தை ஹப்பிள் தொலைநோக்கி படம் பிடித்து அனைவரையும் வியப்படைய வைத்துள்ளது. நாசாவின் ஹப்பிள் தொலைநோக்கி அனுப்பியுள்ள இந்தப் படத்தில் பெரிய கண்ணுடன், எமது பூமியைப் பார்ப்பது போன்ற தோற்றத்துடன் ஜுபிற்றர் கிரகம் காணப்பட்டது.

சூரியமண்டலத்திலேயே மிகப் பெரிய கிரகம் ஜுபிடர் தான். இதன் சமீபத்திய படம் ஒன்று பெரும் ஆச்சரியகர மானதாக உள்ளது. ஜுபிற்றர் கிரகத்தில் வீசி வரும் புயலை ஹப்பிள் தொலைநோக்கி தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

இந்த நிலையில், அந்தப் புயல் அடித்து வரும் பகுதியை, ஜுபிற்றரின் நிலவான கானிமேட் கடந்து சென்றபோது, பெரிய கண் போன்ற தோற்றம் ஏற்பட்டது. இதைத்தான் ஹப்பிள் தொலைநோக்கி படம் பிடித்து அனுப்பி வைத்துள்ளது. பார்ப்பதற்கு பெரிய கண் போன்று இது காணப்படுகிறது. இது ஓர் அரிய காட்சியாகும். இந்தக் கண்ணின் விட்டம், சுமார் 10 ஆயிரம் மைல் ஆகும். கானிமேட் நிலவு புயல் அடித்துக் கொண்டிருக்கும் பகுதியைக் கடந்தபோது ஒரு கண் போன்ற தோற்றம் ஏற்பட்டது. இதை ஹப்பிள் தொலைநோக்கி படம் பிடித்து அனுப்பி வைத்துள்ளது.

ஜுபிற்றரின் தெற்குக் கடக ரேகைப் பகுதியில் இந்தப் புயல் பகுதி உள்ளது. இந்தப் புயல் இன்று நேற்று அல்ல, கடந்த 400, 500 ஆண்டுகளாக வீசிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜுபிற்றருக்கு மொத்தம் 67 நிலவுகள் உள்ளன. அவற்றில் நான்கு நிலவுகள் மிகப் பெரியவை. அவற்றுக்கு கலிலியன் நிலவுகள் என்று பெயர். கலிலியோ கலிலி இவற்றை 1610 ஆம் ஆண்டு கண்டு பிடித்தார். இந்த நான்கு நிலவுகளிலும் மிகப் பெரியதுதான் தற்போது கண் போன்ற தோற்றத்தை ஏற்படுத்திய கானிமேட் நிலவு என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள எரிமலை வெடித்து தீக்குழம்பைக் கக்கி வருகிறது. பச்சைப் பசேலென இருக்கும் புல்வெளியை பொசுக்கியபடி வழிந்தோடுகிறது எரிமலைக் குழம்பு.

## அமெரிக்கா வான்வழித் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர பாக். முயற்சி

இஸ்லாமபாத், ஒக். 31

பாகிஸ்தானில் நடத்தப்படும் அமெரிக்க வான்வழித் தாக்குதல்களை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக அந்தநாட்டு உள்துறை அமைச்சர் சவுத்ரி அலி கான் தெரிவித்தார்.

அதன்படி ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளுடன் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுத்ரி அலி கான் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார். இந்தச் சந்திப்பில் ஆப்கான் எல்லை மற்றும் பாகிஸ்தான் பகுதிகளில் பயங்கரவாதிகளைக் குறிவைத்து நடத்தப்படும் வான்வழித் தாக்குதல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பாகிஸ்தானின் இந்த முயற்சியை வரவேற்பதாகவும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பாகிஸ்தான் ஒத்துழைப்பு அளித்தமை பாராட்டத்தக்கது என்றும் இது குறித்து அமெரிக்க பிரதிநிதி ஃபெல்ட்மென் தெரிவித்ததாக பாகிஸ்தானின் டான் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (வ)

# வறுமையால் வாடும் இஸ்ரேல் குழந்தைகள்

### யுனிசெப் தகவல்



டெல்அவிவ், ஒக். 31

ஐ.நா. சபையின் யுனிசெப் நிறுவனம் செல்வச் செழிப்பு மிக்க 41 பணக்கார நாடுகளில் வறுமையால் வாடும் குழந்தைகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தியது. அதில், இஸ்ரேல் 4 ஆவது இடம்பிடித்துள்ளது. அங்கு 35.1 தொடக்கம் 35.6 சதவீத குழந்தைகள் பசியால் வாடுகின்றனர். அதே நேரத்தில் கிரீஸ் (40.5 சதவீதம்), முதல் இடத்திலும், லாத்வியா (38.2 சதவீதம்) 2வது இடத்திலும், ஸ்பெயின் (36.3 சதவீதம்) 3வது இடத்திலும் உள்ளன.

பணக்கார நாடுகளில் தற்போது வறுமையால் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை 26 லட்சமாக அதிகரித்துள்ளது. இஸ்ரேலில் வறுமை அதிகரிக்க வேலையில்லா திண்டாட்டமே முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. அங்கு இளைஞர்களுக்கு நிலையான வேலைகள் கிடைக்காததால் அவர்களால் அதிகளவு பணம் சம்பாதிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் வறுமையில் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்த நாடுகள் பட்டியலில் நோர்வே முதலிடம் வகிக்கிறது. இங்கு 5.3 சதவீதம் குழந்தைகளே வறுமையால் வாடுகின்றனர். (வ)

# தூக்குத் தண்டனையிலிருந்து 9 குற்றங்களுக்கு விலக்களிப்பு

### சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு

பீஜிங், ஒக். 31

சீனாவில் தூக்குத் தண்டனையில் இருந்து 9 குற்றங்களுக்கு விதிவிலக்கு அளிப்பது தொடர்பாக அந்தநாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சீனாவில் உலக சட்ட திட்டங்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுவருவதாக மனித உரிமைகள் அமைப்பினர் முறைப்பாடு கூறி வருகின்றனர். அங்கு கடந்த ஆண்டில் மட்டும் 2,400 பேருக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, அது குறித்து சீன கம்யூனிஸ்டு கட்சி கூடி ஆலோசனை நடத்தியது. பொதுவாக இங்கு 55 குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

அதில் 9 குற்றங்களுக்கு தூக்குத் தண்டனையில் இருந்து விதிவிலக்கு அளிக்க ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக நிதி சேகரித்தல், ஆயுதம் கடத்தல், அணு மூலப்பொருள் கடத்தல், கள்ள நோட்டு தயாரித்தல் உட்பட குற்றங்கள் விதி விலக்கு பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பரிந்துரையை சீன அரசு ஏற்றுக் கொண்டால் அங்கு 46 குற்றங்களுக்கு மட்டுமே தூக்குத் தண்டனை விதிக்கப்படும்.

அதன் மூலம் ஓரளவு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு குறையும் வாய்ப்பு உருவாகும் என்று கூறப்படுகிறது. (வ)

# ஒரு வருடமாக பட்டினி கிடக்கும் விசித்திரச் சிறுவன்

**அமெரிக்காவைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கடந்த ஒரு வருடமாக சாப்பிடாமல் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.**

லான்டன் ஜோன்ஸ் எனும் (வயது-12) சிறுவன் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 14 ஆம் திகதி முதல் ஒழுங்காகச் சாப்பிடாமலும், தண்ணீர் குடிக்காமலும் உள்ளார்.

தொடர்ந்து பல நாள்கள் சாப்பிடாமல் இருந்ததால் உடல்நிலை பாதிக்கப்பட்ட லான்டனின் நிலை குறித்து கவலையடைந்த அவரது பெற்றோர் பல மருத்துவமனைக்குச் சென் றும் பயனில்லாமல் போனது.

அமெரிக்காவில் உள்ள ஐந்து நகர மருத்துவமனைகளில் லான்ட னைப் பரிசோதித்த மருத்துவர்களால் சிறுவனின் உடலில் எந்தவித பாதிப்பையும் கண்டறிய இயலவில்லை.

கடந்த ஆண்டு சுறுசுறுப்பான மாணவனாக விளையாடிக்கொண்டி ருந்த லான்டனால் இப்போது பாடசாலைக்குக் கூட ஒழுங்காக செல்ல முடியாமல் நாள் முழுவதும் சோபாவில் சோர்வாக படுத்திருக்கும் நிலை உள்ளது.

லான்டனைப் பரிசோதித்த குழந்தை நரம்பியல் நிபுணர் மார்க் பாட்டர்சன், உலகிலேயே லான்டனுக்கு மட்டும் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 1 | | 7 | | | |
| 8 | 1 | 9 | | | 3 | | | 6 |
| | | 4 | 6 | | | 9 | | |
| | | 7 | | 3 | 2 | 1 | | 5 |
| 5 | | | | | | | | 3 |
| 1 | | 8 | 9 | 6 | | 4 | | |
| | | 3 | | | 4 | 5 | | |
| 2 | | | 5 | | | 3 | 6 | 8 |
| | | | 3 | | 6 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது ,நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 2 | 9 | 6 | 1 | 5 | 8 | 3 |
| 5 | 6 | 3 | 2 | 4 | 8 | 7 | 1 | 9 |
| 8 | 1 | 9 | 5 | 7 | 3 | 6 | 4 | 2 |
| 9 | 8 | 7 | 4 | 5 | 2 | 3 | 6 | 1 |
| 2 | 5 | 6 | 3 | 1 | 9 | 4 | 7 | 8 |
| 1 | 3 | 4 | 6 | 8 | 7 | 2 | 9 | 5 |
| 6 | 4 | 8 | 1 | 3 | 5 | 9 | 2 | 7 |
| 7 | 9 | 5 | 8 | 2 | 4 | 1 | 3 | 6 |
| 3 | 2 | 1 | 7 | 9 | 6 | 8 | 5 | 4 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## செயலில் காட்டுங்கள்

ஒவ்வொருவரும் திட்டங்களைப் பற்றி பேசுவதை விட, அவற்றை செயற்படுத்தியே காட்ட வேண்டும். இதில் வெற்றி பெறுவோமோ பெறமாட்டோமோ என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அத்தகைய மகத்தான லட்சியத்தை ஒருவன் மேற்கொள்வதும் அதற்காக தனது வாழ்நாளையே அர்ப்பணிப்பதும் மகோன்னதமான காரியமாகும்.

ஏனென்றால் அத்தகைய மகோன்னதமான காரியங்களைச் செய்யாமல் சின் னஞ்சிறு செடி கொடிகளைப் போல் பிறந்து சாகும் மிகக் கீழ்த்தரமான வாழ்க்கையை நடத்துவதில் என்ன பெருமை இருக்கிறது. நமது வாழ்க்கையை மகோன்னதமான லட்சியத்துக்கு துணையாக்கி கொண்டால் தான் அந்த வாழ்க்கைக்கே மதிப்பு உண்டு. இந்த மகத்தான காரியம் செய்யப்பட வேண்டும். அந்தப்பொழுதிலே நம் உதடுகளிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு வார்த்தையின் பின்னாலும் அளவற்ற பாதுகாப்பு நிறைந்திருக்கும். இன்றைய உலகம் இந்த மகத்தான உயிரைத் தருகின்ற கொள்கையைத் தான் நம்மிடம் வேண்டி நிற்கிறது. தங்கள் உரிமைக்காகக் குரல் எழுப்ப முடியாத சாதாரண மக்கள் தங்களின் மேன் மைக்காக இந்தக் கொள்கையைத்தான் எதிர்பார்த்து நிற்கிறார்கள். எல்லாம் ஒன்றே என்ற இந்த உயர்ந்த கொள்கையை நடை முறையிலும் அன்றாட வாழ்க்கையிலும் பின்பற்றாமல் போனால் யாராலும் இந்த நாட்டில் முன்னேற்றத்தைக் கொண்டு வர முடியாது. உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்.

அந்த நம்பிக்கையின் மீது எழுந்து நில்லுங்கள். வலிமையுடையவரகளாக இருங்கள். நமக்கு தேவைப்படுவது நம்பிக்கையே. முழுமையான சுயநலமின்மையே லட்சியம் என்றுதான் மிகச் சிறந்த நன்னெறிக் கோட்பாடுகள் எல்லாமே போதிக்கின்றன. இந்த முழுமையான சுயநலமின்மையை ஒருவன் அடைந்தால் அவன் என்ன ஆவான்? அவன் அதன்பிறகு ஒரு சிறியவனாக, திரு. இன்னார் ஆக இருக்க மாட்டான் எல்லையற்ற விரிவைப் பெற்று விடுவான். முன்பு அவனுக்கிருந்த சிறியதான தனி மனிதத்துவம் என்றென்றைக்குமாக அவனிடமிருந்து போய் விடும். அவன் எல்லையற்றவனாகி விடுவான். இதுவே வாழ்க்கை தத்துவமாகும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பதவி உயர்வு நிலுவை தொகை வருவதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை தலை தூக்கும்



**இடபம்**: வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்மைதரும். எடுத்த காரியங்களைச் செய்து முடிப்பது பற்றிய மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். செயற்றிறன் மூலம் பாராட்டு கிடைக்கும். வாழ்க்கையில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.



**மிதுனம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலான லாபம் கிடைக்கப் பாடுபடுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அரச அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் கவனமாக நடந்து கொள்வது நன்மை தரும்.



**கடகம்**: குடும்பத்தில் கூடுதல் செலவு உண்டாகும். பிள்ளைகளின் நலனுக்காக பாடுபட வேண்டியிருக்கும். குடும்பத்தில் கோபமான வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது. செயற்றிறன் வெளிப்படும். புதிய முயற்சிகள் அலைச்சலைத் தரும்.



**சிங்கம்**: காரியத் தடை தாமதம் ஏற்படலாம். கவனமாகச் செயற்படுவது நல்லது. மனகுழப்பம் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். மற்றவர்களிடம் கெட்ட பெயர் வாங்க நேரலாம். பொருள்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது.



**கன்னி**: தொழில் வியாபாரத்தில் லாபம் குறையும் நிலை உண்டாகலாம். திட்டமிட்டுச் செயற்படுவது நன்மைதரும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் அலைச்சலைத் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது அவசியம்.



**துலாம்**: குடும்பத்தில் திடீர் பிரச்சினை ஏற்பட்டு பின்னர் சரியாகும். எந்தவொரு சிக்கலான பிரச்சினைகளிலும் தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும்போது கவனம் தேவை.



**விருச்சிகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் எதையும் செய்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். அடுத்தவர் செயல்களுக்கு பொறுப்பேற் காமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு குறையும்.



**தனுசு**: குடும்பத்தில் இருப்பவர்களின் நலனில் அக்கறைகாட்ட வேண்டி இருக்கும். ஏதாவது ஒரு காரணமாக வாக்குவாதம் ஏற்படலாம். அயலிலுள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. காரியங்களை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும்.



**மகரம்**: எதிர்ப்புகள் விலகும். பயணத்தின் மூலம் லாபம் உண்டாகும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். விரும்பி பொருள்களை வாங்க எடுக்கும் முயற்சிகளுக்குச் சாதகமான பயன் கிடைக்கும்.



**கும்பம்**: தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவை-தொகை வந்து சேரலாம். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.



**மீனம்**: குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி சகஜமான நிலை காணப்படும். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீண்டதூர தகவல்கள் சாதகமானதாக இருக்கும்.

## நாளை

**ஐப்பசி-15 சனிக்கிழமை | 01.11.2014**

திதி: நவமி பி.ப.04.02 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.10.55 வரை

சுபநேரம்:03.03-04.33 வரை
இராகுகாலம்:09.03-10.33 வரை

# இராமநாதனை வீழ்த்தி சாதித்தது இந்து மகளிர்

யாழ்ப்பாணம் ஒக் 31

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலனந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 19 வயது பெண்கள் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்றுசம்பியன் ஆனாது. யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

பலம் பொருந்திய அணிகள் மோதிக்கொண்டதால் முதல் கால்பாதி ஆட்டம் மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டது. இதன்போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான புள்ளிகளைப் பெறுவதற்காக எதிர் அணி வீராங்கனைகளுடன் முட்டி மோதிக் கொண்டதால் ஆட்டம் விறுவிறுப்பாகியது. இரு அணியினரும் புள்ளிகள் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை தவறவிட்டனர். முதல் கால்பாதி ஆட்ட முடிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 5 புள்ளிகளையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 13 புள்ளிகளையும் பெற்றன. இதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி சார்பில் நிருபினி 2 புள்ளிகளையும், சுபோசனா 2 புள்ளிகளையும், கேதீஷா ஒரு புள்ளியையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சார்பில் சர்மிளா 5 புள்ளிகளையும், சானுஷா 4 புள்ளிகளையும், கசானா, சுவர்ணமலர் ஆகியோர் தலா 2 புள்ளிகளையும் பெற்றனர்.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்தின்போதும் புள்ளிகள் பெறுவதில் இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தனர். இரண்டாம் கால் பாதி ஆட்ட முடிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 5 புள்ளிகளையும், இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 9 புள்ளிகளையும் பெற்றனர்.



இதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி சார்பில் லதீனா 3 புள்ளிகளையும், சுபோசனா 4 புள்ளிகளையும், ஐஸ்வர்யா 2 புள்ளிகளையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சார்பில் சானுஷா 4 புள்ளிகளையும் சானனி ஒரு புள்ளியையும் பெற்றனர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 18 புள்ளிகளையும், இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 14 பள்ளிகளையும் பெற்றனர்.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தின் போது இராமநாதன் மகளிர் கல்லூரி அணியின் வீராங்கனையான ஐஸ்வர்யா தனி நபருக்குரிய 5 குற்றங்களைப் புரிந்தமையால் ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதனைப் பயன்படுத்திக் கொண்ட யாழ். இந்து மகளிர் அணியினர் தமது அணிக்கான புள்ளிகளை வேகமாகப் பெற்றனர். மூன்றாம் கால்பாதி ஆட்ட முடிவில் யாழ். இந்துமகளிர் கல்லூரி அணியினர் 4 புள்ளிகளையும், இராமநாதன் மகளிர் கல்லூரி அணியினர் 6 புள்ளிகளையும் பெற்றனர். இதில் இராமநாதன் கல்லூரி அணி சார்பில் சுவிஸ்ஷா 4 புள்ளிகளையும், நிரூபினி 2 புள்ளிகளையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சார்பில் சானுஷா 4 புள்ளிகளையும் பெற்றனர்.

நான்காம் கால் பாதி ஆட்டத்தின்போதும் இராமநாதன் கல்லூரியின் முன்னணி வீராங்கனையான சுவிஸ்னா தனி நபருக்குரிய 5 குற்றங்களைப் புரிந்தமையால் ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அனுபவம் வாய்ந்த இரண்டு வீராங்கனைகள் இல்லாதபோதும் தமது அணிக்கான புள்ளிகளைப் பெறுவதற்காக இரமாநாதன் மகளிர் கல்லூரி அணி கடுமையாகப் போராடியது. நான்காம் கால்பாதி ஆட்ட முடிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியினர் 6 புள்ளிகளையும், இராமநாதன் கல்லூரி அணியினர் 4 புள்ளிகளையும் பெற்றனர். ஆட்ட முடிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 28:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. ஆட்டத் தொடர் நாயகியாக சிறந்த சூட்டராக இராமநாதன் மகளிர் கல்லூரி அணி வீராங்கனை சுவிஸ்சனா தெரிவானார். ஆட்ட நாயகியாக யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி வீராங்கனை சானுஜா தெரிவானார். (த-23)

# ஆனந்தா, றிட்சமன் நேற்று வெற்றி

யாழ்ப்பாணம்.ஒக். 31

முரளி நல்லுறவு வெற்றிக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரில் நேற்று வியாழக் கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அணியும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் காலி றிட்சமன் கல்லூரி அணியும் வெற்றி பெற்றன.

இதில் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இம் பெற்ற ஆட்டத்தில் கொழும்பு ஆனந்தக்கல்லூரி அணியை எதிர்த்து மெறட்டுவை பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப் பெடுத்தாடிய கொழும்பு ஆனந்தா 20 பந்துப் பிரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சண்முக அசான் அசேலசிகேர 71 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி அணி 17.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டும் பெற்றுத் தோற்றது.

ஆனந்தா வீரர்கள் அசேலசிகேர 4 இலக்குகளையும். சண்முக அசான் அசேலசிகேர 2 இலக்குகளையும். வீழ்த்தினர். கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி வீரன் சண்முக அசான் தெரிவானார்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் காலி றிஸ்மன் கல்லூரி அணியை எதிர்த்து கரந்தெனிய மத்திய கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரந்தெனிய மத்திய கல்லூரி அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. றிஸ்மன் கல்லூரி வீரர் தனஞ்சேய லக்ஸ்சன் 17 ஓட்டங்களுக்கு 5 இலக்கை வீழ்த்தினார்.

121 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றிஸ்மன் கல்லூரி அணியினர் 13.5 பந்துப்பிரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்[illegible]க அடைந்தனர். சரித்லங்[illegible] [illegible]63 ஓட்டங்களை விளாசி[illegible]ர். ஆட்ட நாயகனாக றிஸ்[illegible]ன் கல்லூரி அணி வீரன் [illegible]னஞ்சேய லக்ஸ்சன்தெரிவ[illegible] (உ-23)





# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்.ஒக். 31

முரளி நல்லுறவு வெற்றிக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் காலை 9.50 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து சர்வதேச பாடசாலை இணைந்த அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்யாழ்ப்பாணம்இணைந்த அணியை எதிர்த்து மொறட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.50 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் காலி றிஸ்மோன் கல்லூரி அணியை எதிர்த்து பண்டாரவளை சென்தோமஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு இணைந்த அணியை எதிர்த்து கரன்தெனிய மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.50 மணிக்கு ஆரம்பிக்கும் ஆட்டத்தில் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மொனறாகலை, பதுளை இணைந்த பாடசாலை அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்தபாடசாலை அணியை எதிர்த்து சினிகம இணைந்தஅணிமோதவுள்ளது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் ரத்கம்தேவ பதிராஜா கல்லூரி அணியை எதிர்த்து பொலன்னறுவை மகளிர் அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் வவுனியா இணைந்த பாடசாலை அணியை எதிர்த்து நீர்கொழும்பு மாரியஸ்ரெலா கல்லூரி அணி மோதவுள்ளது.

மாங்குளம் மகா வித்தியலாய மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் சீனிகம மகளிர் அணியை எதிர்த்து பொலன்னறுவை மகளிர் அணி மோதவுள்ளது. 11.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நித்தம்புவ மகளிர் அணியை எதிர்த்து வடக்கு கிழக்கு இணைந்த மகளிர் அணி மோதவுள்ளது. மதியம் 2.40 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநாகலை வை.சி. சிமகளிர் அணியை எதிர்த்து பதுளை மகளிர் அணி மோதவுள்ளது. (உ-23)

# கலைமதி கிண்ண இறுதியில் நவஜீவன்ஸ் - பொம்மர்ஸ்

## அரையிறுதியில் மஞ்சள், சிவப்பு அட்டைகள் தாராளம்

கரணவாய், ஒக்.30

கலைமதிகிண்ண அரையிறுதி ஆட்டங்களில் எதிரணியை சமனிலை தவிர்ப்பு உதைகள் மூலம் பந்தாடி இறுதியாட்டத்துக்குள்நுழைந்தன உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம். ஒரு அரையிறுதி ஆட்டத்தில் மஞ்சள், சிவப்பு அட்டைகள் தாராளமாகப் புளங்கின.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகமும் மோதின.

போட்டியின் விலகல்முறை ஆட்டங்களில் பலம் வாய்ந்த அணிகளை தோற்கடித்து லீக் சுற்றுக்கு முன்னேறிய இவ்விரு அணிகளும் லீக் ஆட்டத்தில் பெற்ற புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியிருந்தன. இதனால் ஆட்டம் ஆரம்பமானதில் இருந்து இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாகவே இடம்பெற்றது. முதல்பாதி ஆட்டத்திலும் பிற்பாதி ஆட்டத்திலும் இரு அணியினரும் மாறிமாறி கோல் பிரதேசங்களை ஆக்கிரமித்து கோல் அடிக்க முயன்றபோதும் கோல் காப்பாளர்கள் மற்றும் பின்கள தடுப்பாட்டக் காரர்களின் உச்சத்திறன்களால் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப் பட்டன. இதனால் கோல் எதுவும் பெறப்படாது ஆட்டம் சமனிலையில் நிறைவடைந்தது.

சமனிலை தவிர்ப்பு உதையில் நவஜீவன்ஸ் அணிகாப்பாளர் சிறிசங்கர், உசானந்த, பிரியந்தன் ஆகியோரும் மகாத்மா லோகீஸ்வரன், செந்தூரன் ஆகியோரும் கோல் போட 3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இரு அணியும் அயல் கிராமங்களைச் சேர்ந்த அணிகள் என்பதனால் மைதானத்தில் பார்வையாளர்கள் திரண்டிருந்தனர். ரசிகர்களின் பலத்த ஆதரவுக்கு இடையில் ஆட்டம் ஆரம்பமாகியது. 2ஆவது நிமிடத்திலேயே பொம்மர்ஸ் அணி வீரர் வைகுந்தன் கோல் போட்டு அதிர்ச்சி வைத்தியம்கொடுக்க டயமன்ஸ் அணி தடுமாறியது.

ஆட்டம் சூடுபிடித்தது. இரு அணியினரும் இடையிடையே விதிகளை மீறினர். மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டன. இடைவேளை வரை மேலதிக கோல்கள் எவையும் போடப்படவில்லை. இடைவேளையில் பின் ஆட்டம் ஆரம்பமாகிய மறுகணமே டயமன்ஸ் அணி வீரர் துசிகரன் அற்புதமான கோல் ஒன்றைப் போட ஆட்டம் சமநிலைக்கு வந்தது. போட்டி இறுகியது. 29 ஆவது நிமிடத்தில் துசிகரனுக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. ஆட்டம் மேலும் சூடுபிடிக்க வீரர்கள் விதிமீறுவதும் அதிகரித்தது. 38ஆவது நிமிடத்தில் வைகுந்தன் மீண்டும் தவறு செய்ய சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். பொம்மர்ஸ் அணி 6 பேருடன் விளையாடும் சூழ்நிலை ஏற்பட்டது. டயமன்ஸ் அணியின் கை ஓங்கியது. ஆனால் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை. இரண்டாவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் துசிகரன் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட இரு அணியினரும் 6 வீரர்களுடன் ஆடவேண்டியேற்பட்டது. மேலதிக கோல் எதனையும் இரு அணியினராலும் போட முடியவில்லை. ஆட்டம் 1:1 என்ற சமநிலையில் முடிவடைந்தது.

சமனிலை தவிர்ப்பு உதையில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (உ-108)



# தயங்கவில்லை நாங்கள்

இந்திய தொடரில் ஆடுவதில் எந்தவித தயக்கமுமில்லை என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறியுள்ளார். இது குறித்து மத்தியூஸ் கூறியதாவது:

இந்திய ஒரு நாள் தொடரில் விளையாடுவதற்கு நாங்கள்தயக்கம்காட்டவில்லை. ஆனால்இந்தியாபோன்ற நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கு ஏற்ப நாங்கள் மிகச் சிறப்பான முறையில் தயார் ஆகவில்லை.

இந்திய மண்ணில் கிரிக்கெட் ஆடுவது எவ்வளவு கடினமானது என்பது எங்களுக்குத் தெரியும். அதுவும் இந்தியாவை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வதற்கு, மிக உயரிய நிலையில் ஆயத்தமாக வேண்டியது அவசியம்.

கடந்த ஒரு மாதமாக நாங்கள் எங்களது உடல் தகுதியில் மட்டும் கவனம் செலுத்தி வந்தோம். எதிர் வரும் இங்கிலாந்து தொடரின்போது உச்சகட்ட நிலைக்கு வரவேண்டும் என்று திட்டமிட்டோம்.

ஆனால் திடீரென இந்தத் தொடர் வந்து விட்டதால், அதை கவனத்தில் கொள்ள வேண்டியதாகிவிட்டது. எது எப்படி என்றாலும் அதற்கு ஏற்ப நம்மைச் சீக்கிரம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

டோனி, இந்திய அணியின் தூண் ஆவார். அவர் அபாயகரமான வீரர் என்பதை அறிவோம். இந்திய அணியில் அவர் இல்லாவிட்டால் அதை எதிரணி தங்களுக்குக் கூடுதல் வாய்ப்பாக நினைக்கக்கூடும்.

கடந்த காலங்களில் இந்திய மண்ணில் எங்களுக்கு கிடைத்த அனுபவங்கள் நல்லதாக இல்லை. ஆனால் இந்தத் தடவை அவற்றை மாற்றிக்காட்ட முயற்சிப்போம் என்று கூறியுள்ளார். (த)

# ரொனால்டோவா? மெஸ்ஸியா?

பிபா சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருதுக்கான பட்டியலில் ரொனால்டோ, மெஸ்ஸி உள்ளிட்டோர் இடம்பிடித்துள்ளனர்.

சர்வதேச உதைபந்தாட்டக் கூட்டமைப்பு (பிபா) சார்பில் சிறந்த வீரருக்கான விருதுப் பட்டியலில், இந்த ஆண்டு 23 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.




இதில் கடந்த ஆண்டு இந்த விருதை வென்ற போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ இடம்பிடித்துள்ளார்.

உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனி அணி தரப்பில் மரியா கோட்சே, தோமஸ் முல்லர் உள்ளிட்ட 6 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.


இந்த விருதை ஏற்கனவே 4 முறை வென்றுள்ள ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி, பிரான்ஸின் கரீம் பென்சிமா, பிரேஸிலின் நட்சத்திர வீரர் நெய்மர், நெதர்லாந்தின் ராபென் உள்ளிட்டோரும் இடம் பெற்றுள்ளனர். இங்கிலாந்து வீரர்கள் யாரும் இடம்பெறவில்லை.

ரொனால்டோ மூன்றாவது முறையாக விருது வெல்லும் முனைப்பில் உள்ளார். அதேநேரம், மெஸ்ஸி ஐந்தாவது முறையாகத் தட்டிச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களில் சிறந்த வீரரை, தேசிய உதைபந்து அணித் தலைவர்கள், பயிற்சியாளர்கள், பத்திரிகையாளர்கள் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுப்பர்.

வெற்றியாளர் பெயர் அடுத்த ஆண்டு ஜனவரி 12 இல் சூரிச்சில் நடக்கவுள்ள விருது வழங்கும் விழாவில் வெளியிடப்படும். (த)

# யுவராஜ் விரக்தி




இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடுவது குறித்து விரக்தியாக பேசியுள்ளார் அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ்சிங்.

கடந்த 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி மகுடம் சூட முக்கிய காரணமாக விளங்கிய அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ்சிங், அந்தப் போட்டியில் தொடர்நாயகன் விருதும் பெற்றார்.

பின்னர் புற்று நோய் தாக்கத்துக்கு ஆளாகி சிகிச்சை பெற்று களம் திரும்பிய யுவராஜ் சிங்கின் ஆட்டத்தில் பழைய சிறந்த நிலையைக் காண முடியவில்லை.

இதனால் இந்திய அணியில் இடம் பிடிக்க முடியாமல் தவித்து வரும் யுவராஜ் சிங், கடைசியாக ஒருநாள் போட்டியில் கடந்த ஆண்டில் நடந்த தென்னாபிரிக்க தொடரில் விளையாடினார்.

20/20 போட்டியில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த உலக போட்டியில் இடம் பெற்றார். அதன் பிறகு அவர் இந்திய அணிக்கு தெரிவு செய்யப்படவில்லை. தொடர்ந்து ஓரம் கட்டப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் யுவராஜ் சிங் அளித்த பேட்டியில், இந்திய அணிக்காக இனிமேல் நான் ஒருபோதும் விளையாட முடியாத நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

அதனை நான் கவனத்தில் கொண்டு தான் இருக்கிறேன். இருப்பினும் இந்திய அணிக்காக மீண்டும் விளையாடவும் வாய்ப்பு இருக்கிறது. அணிக்குத் திரும்ப முடியும் என்று நான் எவ்வளவு தூரம் நம்புகிறேனோ, அந்த நம்பிக்கையை எந்த அளவுக்கு மனதில் வைத்து இருக்கிறேனோ அது என்னை இலக்கை எட்ட உந்தி தள்ளிக் கொண்டே இருக்கும்.

கடந்த 2 ஆண்டுகளாக ஆட்டத்தில் நான் ஏற்ற, இறக்கங்களை சந்தித்து வருகிறேன். எனவே, என்னை அணிக்குத் தெரிவு செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

ஆனால் இந்த நிலைமைகள் மாறும், அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் என்ற நம்பிக்கையை நான் இழக்க வில்லை. தேர்வு பற்றி நான் எதுவும் சொல்ல முடியாது. ஆனால் என்னால் முயற்சி செய்ய மட்டுமே முடியும். அதனைத் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறேன். இந்திய அணியில் இடம் பிடித்து உலகக் கிண்ணப் போட்டியில் மீண்டும் நான் விளையாடினால் அது மிகப்பெரிய விடயமாக இருக்கும்.

ஆனால் அது நடக்காமல் போனாலும் வாழ்க்கை கடந்து கொண்டு தான் இருக்கும். இந்திய அணியில் இடம் பிடிக்காமல் போனால் அது மனதுக்கு கஷ்டமாக தான் இருக்கும் என்றும் ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் எனவும் கூறியுள்ளார். (த)




# டோனி தலைசிறந்த வீரர்

இந்திய அணித் தலைவர் டோனி, உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் என ஐ.சி.சி. தலைவர் என் சீனிவாசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அளித்த பேட்டி ஒன்றில், டோனி ஒரு அதிசயமானவர். நான் பார்த்த வகையில் அவர் உலகின் சிறந்த வீரர்களில் ஒருவர் ஆவார்.

மிகவும் முக்கியமான 20/20 உலகக்கிண்ண மற்றும் ஐ.சி.சி. சம்பியன் ஆகியவற்றை டோனி கைப்பற்றியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட்டில் அவர் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளார். இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் கிரிக்கெட்டுக்காக ஏராளமாகச் செய்துள்ளது. பல்வேறு கிரிக்கெட் வீரர்கள் இங்கு பணி புரிகிறார்கள் என்று கூறியுள்ளார். (த)

# இந்தியச் சுற்றுப் பயணத்தை முழுமையாக்க விரும்பினேன்



இந்திய சுற்றுப் பயணத்தை முழுமையுடன் முடிக்கவே விரும்பினேன். தொடரில் இருந்து வெளியேறுவது தொடர்பான கூட்டத்தில் நான் பங்கேற்கவில்லை என, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர் மார்லன் சாமுவேல்ஸ் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட சம்பளப் பிரச்சினை காரணமாக, தொடரில் இருந்து பாதியிலேயே விலகியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி நாடு திரும்பிய சில தினங்களில் சாமுவேல்ஸ் அளித்த பேட்டியில், இந்தியத் தொடரை முழுமையாக நிறைவு செய்யவே விரும்பினேன். தொடரில் இருந்து விலகுவது தொடர்பான கூட்டங்களில் நான் பங்கேற்கவே இல்லை எனத் தெரிவித்தார்.

இதை மறுத்த அணித் தலைவர் டுவைன் பிராவோ, அணி எடுக்கும் எந்த முடிவுக்கும் துணை நிற்பதாக சாமுவேல்ஸ் தெரிவித்தார். தொடரில் இருந்து வெளியேறுவது என்பது நான் மட்டும் எடுத்த முடிவல்ல. ஒட்டுமொத்த வீரர்களும் எடுத்த முடிவு என்றார். டுவைன் பிராவோ தெரிவித்ததை தற்போது சாமுவேல்ஸ் மீண்டும் மறுத்துள்ளார்.

சாமுவேல்ஸ் கூறியதாவது:

அணி எடுக்கும் எந்த முடிவுக்கும் துணை நிற்பதாக நான் தெரிவிக்கவில்லை. நான் வெளிப்படையாகப் பேசுபவன். அதனால், அணியினரிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டேன். அதற்கு முறையான பதில் இல்லை.

என்ன நடக்கின்றது என்பது மக்களுக்குத் தெரியாது. அவர்கள் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள். இந்தத் தொடரில் இருந்து வெளியேறுவதற்கான உண்மையான காரணத்தை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தக் காரணத்தை தெரிவிக்கத் தயாரா எனக் கேட்டேன். பதில் இல்லை. எனவேதான், நியாயமான என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை எனில், நான் ஆதரவு தரமாட்டேன் என்றேன். வெளிப்படையாகப் பேசவில்லை என்னும்போது, போராட்டத்துக்கு என்னை அழைக்க முடியாது.

நான் மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் சங்கத்தில் உறுப்பினராக இல்லை. இருந்தாலும், ஒட்டுமொத்த இந்த விவகாரத்தை உன்னிப்பாக கவனித்தால், இவை அனைத்துக்கும் மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் சங்க தலைவர் வாவெல் ஹிண்ட்ஸ்தான் காரணம் என்பது தெரியும். அவர் செய்த தவறுக்கு கிரிக்கெட் சபையைக் குறை கூற முடியாது. அதே நேரத்தில் இந்தியாவுடன் எந்த பிரச்சினையும் இல்லை. முழுக்க முழுக்க அது எங்கள் பிரச்சினை. தொடரை வெற்றிகரமாக முடித்து, நாடு திரும்பிய பின் இந்தச் சம்பள விவகாரத்தை தீர்க்க வேண்டும் என்பதே என் விருப்பம்-என்றார்.

# தொடர்ச்சிகள்

## மலையக

ராசா விடுத்துள்ள அறிக்கையி லேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் பாரிய மனிதப் பேரவலம் ஏற்பட்டுள்ளது. அந்த மக்களின் சொத்துக்கள் யாவும் அழிக்கப்பட்டு நிர்க்கதியான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றமையினால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பேரவலத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அது மட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு - உடை - மருந்து வகைகள் உள்ளிட்ட வழங்க வேண்டிய உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாம் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கவுள்ளோம். மனித நேயம் கொண்டவர்களை உதவிகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுகின்றோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக சமூகம் விடுத்துள்ள கோரிக்கையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடுபுடவைகள், உலர் உணவு, நிதியுதவி என்பனவற்றை வழங்க வேண்டியுள்ளது. அவற்றை வழங்குமாறு பொதுமக்கள், நலன்விரும்பிகள், கொடையாளிகளுக்கு அவசர கோரிக்கை விடுகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுகள், நல்ல நிலையிலுள்ள உடுபுடவைகள் என்பனவற்றைச் சேகரித்தல், நிதியுதவி சேகரித்தல், மருத்துவ உதவிகளை வழங்கக்கூடிய வழிவகைகளை தொடர்பில் ஆராய்ந்துள்ளோம்.

எனவே அவற்றை வழங்கவுள்ளவர்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பணிமனை, விஞ்ஞான சங்கப் பணிமனை, ஊழியர் சங்கப் பணிமனை, மாணவர் ஒன்றியப் பணிமனை ஆகியவற்றில் பொருள்களைஒப்படைத்து அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ளுமாறு பல்கலைக் கழக சமூகம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை சைவ மகா சபை விடுத்துள்ள கோரிக்கையில், பதுளை மாவட்டத்தின் கொஸ்லாந்த தோட்டப்பகுதியில் இடம் பெற்ற மண்சரிவில் பல நூற்றுக் கணக்கானோர் மண்ணில் புதையுண்டும், இறந்தும், காணாமலும் போயுள்ளனர். அதேநேரம் மேலும் பல நூற்றுக்கணக்கான குழந்தைகள் பாடசாலை சென்றிருந்த நிலையில் தாய் தந்தையரை மண்சரிவிற்கு காவுகொடுத்துவிட்டு அகதிமுகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள இந்த உறவுகளுக்கு தங்களாலான உடுபுடவைகள் பால்மா மற்றும் உலர் உணவு போன்ற பொருள் உதவிகளையோ அல்லது நிதியுதவிகளையோ வழங்கி உதவுமாறு வேண்டுகின்றோம்.

சைவமகா சபையின் சிவதொண்டர் அடங்கிய உதவிக்குழு பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாக சென்று உதவிகளை சேர்ப்பிக்க உள்ளது. இம்மனிதாபிமானப் பணியில் தங்களை இணைந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கிறோம். தொடர்புகள் 077774-0958, 0770711152. வங்கிக்கணக்கு, கொமர்ஷல் வங்கியின் 8060069999 என்ற இலக்கத்துக்கு வைப்பிலிட முடியும்.

(ந-5,4)

## மீட்புப் பணிகள்

பிரதேச வாசிகளும் இராணுவத்தினர்மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். "காலை ஏழு மணியளவில் சம்பவம் நடைபெற்றாலும் முற்பகல் 11 மணியளவிலேயே இராணுவத்தினர் வந்தனர் " என்று கண்ணீர் மல்கிய படி கருத்து வெளியிட்டார் மீரியபெத்த தோட்டத்தில் வாழும் பெண்மணி ஒருவர்.

இதேபோன்று உயிர்தப்பியோரில் பலரும் எம்மிடம் மனக் குமுறல்களை வெளியிட்டனர். ஆனால், இந்தக் குற்றச்சாட்டை இராணுவத்தினர் மறுக்கின்றனர். தம்மால் முடிந்தளவு வேகமாக செயற்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், பொலிஸார் சிலர் மீட்புப்பணி இடம்பெறுவதை காணொலியாகப் பதிவு செய்து செய்துகொண்டிருந்ததையும் பார்க்க முடிந்தது. எனினும், பிரதேசவாசிகள் தமது உறவுகளை மீட்டெடுப் பதற்காக முழு வீச்சுடன் செயற்பட்டனர். சீரற்ற காலநிலையால் நேற்று முன்தினம் மாலை முதல் நிறுத்தப்பட்டிருந்த மீட்புப் பணிகள் நேற்று காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ வசதிகள், நீர், உணவு போன்ற மனிதாபிமான உதவிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிடுகின்றார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "கொஸ்லாந்தை, மீரியபெத்த மண்சரிவால் 63 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது . மண் சரிவால் 148 பேர் வரை மண் ணில் புதையுண்டிருக்க லாம்.

மீரியபெத்த மண்சரிவில் சிக்கி உயிரிழந்த மூவரது சடலங்கள் இன்று (நேற்று) மீட்கப்பட்டுள்ளன. இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட சுமார் 808 பேர் பாதுகாப்பான இரண்டு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இடர் முகாமைத்துவ அமைச்சால் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்புடன் நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மீரியபெத்த பகுதியில் மண்சரிவில் பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களை சேர்ந்த சுமார் 330 பேர் வாழ்ந்தமை தொடர்பில் எமக்குப் பதிவாகியுள்ளன"- என்று தெரிவித்தார்.

பிரதேச வாசிகளின் கருத்துப்படி 192 பேர் வரையில் மண்ணுக்குள் புதையுண்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

## மண்சரிவில்

துக் கொள்கின்றோம்" - என்றுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர், மாட்டீன் டயஸ் விடுத்துள்ள இரங்கற் செய்தியில், "கொஸ்லந்தையில் இயற்கை இடரால் அகால மரண மடைந்து விட்ட எமது உறவுக ளுக்காக நாம், உங்களோடு சேர்ந்து துயருகின்றோம். உங் கள் உணர்வுகளோடு கலந்து கண் கலங்குகின்றோம். இவ் இழப்பு தாங்கொணாதது. மௌ னித்து விட்ட ஜீவன்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துகின் றோம்."- என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், "பெரும் மண்சரிவில், சிக்கி புதையுண்ட மக்களின் சோகச்சம்பவம் எம்மை ஆழ்ந்த கவலைக்குட்படுத்தியுள்ளது. மக்கள் கண்மூடித் திறப்பதற்குள் மண்ணுள் புதையுண்டு போயினர்.

மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக விடுக்கப்பட்ட முன்னறிவித்தல், பலரை வேறுபகுதிகட்கு செல்லவைத்துள்ளது. காலையில் மாணவர்கள் பாடசாலைகட்கு சென்றதனால் உயிர்பிழைத்தனர். சிறுவர் பாடசாலையிலிருந்து திரும்பி வந்து தமது பெற்றோரை வீடுகளை காணாது தவித்த சம்பவம் வரலாற்றின் இழப்புக்களோடு இணைந்து விட்டது.

இடர் முகாமைத்துவ அமைச்சு, முன்னெச்சரிக்கை விடுப்பதோடு நின்று விடாது, மக்களை வேறு பகுதிகட்கு நகர்த்தி தற்காலிக இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவசியமாகும்.

அத் துயர சம்பவத்தில் உயிரிழந்த, காணாமற் போன, சொத்துக்களை இழந்த மக்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது - என்றுள்ளது.

இதேவேளை, சைவ மகாசபை மற்றும், யாழ்.பல்கலைக்கழகம் என்பனவும் தமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துள்ளதுடன், உதவிகளுக்கான கோரிக்கைகளையும் விடுத்துள்ளது.

(ந-5)

## மக்கள்

களைக் கேட்பாரானால் மக்களுக்கு பெரும் மனஆறுதலாக இருக்கும். அதுவே மக்களுக்குத் தேவையாகவுள்ளது - என்று உளமருத்துவ நிபுணர் சி.சிவதாஸ் தெரிவித்தார்.

யாழ்.மருத்துவ பீடத்தில் நேற்று இடம்பெற்ற உளநாளையொட்டிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அவர் குறைகளைக் கேட்கும் போது மற்றவர்களின் மனப் பாரம் குறையும். அவர் அவ்வாறான இடங்களுக்குச் சென்று மக்களுடன் கதைக்க வே[illegible] ஆ[illegible] [illegible]ண்டும். [illegible]யலுக்கு அப்பால் அவர் அவ்வாறு சென்று கதைப்பதனால் மக்கள் ஆறுதலடைகிறார்கள். அதுவே தேவையாகவுள் ளது"- என்று தெரிவித்துள் ளார்.

(ந-4)

## கை கொடுக்க

வைச் செயலகத்தில் இன்று மாலை 3.30 மணிக்கு கூட்டம் இடம்பெறவுள்ளது. எனவே வடக்கு மாகாணசபையின் சகல உறுப்பினர்களும் இன்று இடம் பெறும் விசேட கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்"- என்று கேட்கப்பட்டுள்ளது.

நிலச்சரிவில் புதையுண்ட பகுதியில் மீட்புப் பணிகள் மந்த கதியில் நடைபெற்று வருகின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சீரற்ற காலநிலையும் அங்கு நிலவி வருவதால் மக்கள் உதவிகள் இன்றிப் பெரிதும் அந்தரித்து வருகின்றனர்.

(ந-5)

## குட்டு வெளிப்பட்டு விடும்

தியலிங்கம்.

உளநல தின நிகழ்வு 'சித்தம் அழகியார்' எனும் தொனிப் பொருளில் யாழ்.பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவர் அங்கும் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"போர் முடிந்த பின்னரும், வடக்கில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமாகவே இது காணப்படுகிறது. அதனால் இங்குள்ளவர்களுக்கு உளசேவையை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

உளநல நாளின் இந்த வருட தொனிப்பொருளாக உளப்பிளவையுடன் வாழ்தல் அமைந்துள்ளது. இந்த நோயால் பீடிக்கப்பட்டு உலகில் 26 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 90 வீதமானவர்கள் வளர்ந்து வரும் நாடுகளிலேயே வாழ்கிறார்கள். 26 மில்லியனில் 50 வீதமானவர்கள் மருத்துவ உதவி எதுவும் இன்றி வாழ்கிறார்கள்.

இலங்கையில் ஐந்தில் ஒருவர் ஏதோ ஒரு வகையில் மனநோயாளியாக வாழ்கிறார். அவ்வாறு வாழ்பவர்களில் 50 வீதமானவர்கள் மருத்துவ உதவி இன்றியே வாழ்கிறார்கள். மக்கள் மத்தியில் உளநல விழிப்புணர்வு குறைந்துள்ளமையே இதற்குப் பிரதான காரணம். வேறு காரணங்களும் உள்ளன.

30 வருட காலப் போர் காரணமாக மக்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளனர். சொத்துக்களை இழந்தமை, காணமல்போகச் செய்யப்பட்டமை, ராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டமை போன்ற காரணங்களால் வன்முறை, மது, புகை போதைக்கு அடிமை[illegible] எனப் பலவித பாதிப்புக்களையும் எதிர்கொண் டுள் ளனர். ராணுவப் பிரசன்னத்தால் இங்கு உளவளப் பிரச்சினைகளை வழங்குவதில் பல தடைகளைத் தாண்டிச் செல்லவேண்டியுள்ளது"- என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உளநல மருத்துவ நிபுணர்களான, வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் சி.சிவதாஸ், யாழ்.போதனா வைத்தியசாலையின் எஸ்.சிவயோகன், மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையின் [illegible] [illegible].கடம்பநாதன் ஆகியோரது கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்றன.

உளநல மேம்பாட்டுக்கு அரும் பணியாற்றிய சண்டிலிப்பாயைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்த அருட்தந்தை வின்சன் பற்றிக் ஆகியோர் இந்தநிகழ்வில் முதலமைச்சராலும் சுகாதார அமைச்சராலும் கௌரவிக்கப்பட்டனர்.

(ந-4)

## போரால்

கூடிய துர்ப்பாக்கிய சூழலுக்குள் தள்ளப்பட்டார்கள். இப்போது மக்கள் மேலெழுந்த வாரியாக இயல்பு நிலைக்குத் திரும்புகின்றனர் என்று தெரிந்தாலும், எமது உண்மையான ஆரம்ப அழகிய சித்த நிலைக்கு நாம் திரும்பவில்லை என்று பதிலிறுக்க வேண்டிய அவசியம் எம்மைச் சார்ந்துள்ளது - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உளநல நாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உளநலப் பாதுகாப்பு என்று கூறும் போது நாம் மற்றவர்களின் மனதில் ஏற்படுத்தும் வடுக்களை நாம் உணர வேண்டும். பல நடவடிக்கைகள் ஒருவகை உடல் ஊறினை ஏற்படுத்தினாலும் உடல் ஊனத்தை ஏற்பட வைத்தாலும், உடற் பாதிப்புடன், சூழற் பாதிப்பையும் இவை ஏற்படுத்துவதால் மக்கள் மனநலம் குன்றி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தினுள் அமுக்கப்படுகின்றார்கள்.

பல சிறைச்சாலைகளில் எமது சகோதர சகோதரிகள் இப்பேர்ப்பட்ட ஒரு பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள். ஆனால் சில சமயங்களில் அந்தப் பாதிப்புக்களையே ஒரு கவச ஆயுதமாக்கி மனப்பாதிப்பை வெளியே நிறுத்தக் கூடியவர்களும் உள்ளார்கள். சூழலும் சுடு சொல்லும் எம்மை வடுக்களைச் சுமக்க வைப்பன என்பது உண்மையாகிலும் அவற்றின் பாதிப்புக்களில் இருந்து தப்பி வாழ வழிவகுக்கின்றன."- என்றும் அவர் மேலும் அங்கு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

"இன்று அபிவிருத்திக்கு வித்திடுவதும் உள நலமே என்ற கருத்து இங்கு முன்வைக்கப்பட்டது. சமூக உளநலனை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒரு சூழலில் வாழ்ந்து வருகின்றோம் என்றும், எந்த அளவுக்கு எமக்குள் ஒருங்கிணைந்த ஒரு செயற்றிட்டம் தீட்டப்பட்டு உளநலத்துக்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதும் ஆராயப்பட்டது. பாதிக்கப்பட்டோருக்கு பொறுப்புணர்வோடு பலரும் என்ன செய்ய முடியும் என்பவையும் ஆராயப்பட்டன.

இவையாவற்றிலும் ஒரு முக்கிய தொடர் விடயம் நி[illegible]ந்துள்ளது. அதுதான் இதுவரை பூட்டி வைத்துப் பேசி வந்த மனநிலைப் பாதிப்புக்களை நாம் வெளிக் கொண்டு வந்து வெளிப்படையாகப் பேசுவதால் ஏற்படும் நன்மைகள், நவீன உலகில் பலவிதமான மனப் பாதிப்புக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அன்பு என்பது எம் எல்லோரது மனதிலும் அடியில் அமிழ்ந்து கிடக்கின்றது. அறிவுதான் அதனை வெளிக் கொண்டு வர உ[illegible] அதற்[illegible] [illegible]வும். [illegible] நாம பாதிப்புற்றோரை மேலும் பாதிக்கக் கூடிய விதத்தில் நடந்து கொள்ளாது, மனித நேய முறைப்படி அன்பைக் காட்டி, அரவணைப்பைக் கூட்டி, அனுசரணைகளை வழங்கி அவர்கள் வாழ்வை ஒளி மிகுந்ததாகச் செய்ய எல்லோரும் முன்வர வேண்டும்"- என்று தெரிவித்தார்.

(ந-4)

# மரண அறிவித்தல்

## திருமதி றெஜிவதனி ஜெயசிங்கம்



யாழ்ப்பாணம், 46/11, ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும் 140, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜிவதனி ஜெயசிங்கம் 29.10.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-றெஜினாறீற்றா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற செந்தில்வேல் மற்றும் ஜெயமணி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயசிங்கத்தின் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், தினேஸ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிருஷாந்தி மற்றும் பானுப்பிரியங்கா (ஆசிரியர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், இந்திரபிரியதர்சினி (பிரான்ஸ்), நி[illegible]ந்தன் (UN-Habitat) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற கிறிஸ்[illegible] வசந்தராசா (பிரான்ஸ்) மற்றும் அன்ரனற் காமினி, யூலியற் மாலி[illegible]னி (கனடா), அனிஸ்ரி வதனராஜா (பிரான்ஸ்), விறிஜிற் நளாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) லெஸ்லி வண்ணராஜா (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்) ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், வக்சலாதேவி (பிரான்ஸ்), ஞானப்பிரகாசம் (அதி பர், யாழ். கோப்பாய் மகா வித்தியாலயம்), சந்திரலிங்கம் (கனடா), மஞ்சுளா (பிரான்ஸ்), உதயகுமார் (மாவட்ட இணைப்பாளர், உளவளத்துறை, மாவட்ட செயலகம்), தாரணி (ஆசிரியர், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), நாகேஸ்வரி (கனடா), பூவிலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரிய சோபிக்கா, பிரியதீபிக்கா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை), ஆரோன் செல்வா (கனடா), ஏற்றியன்செல்வா (கனடா), தர்சிகன் (யாழ். இந்துக் கல்லூரி), அபிதாப் டிசாணன் (யாழ். ஜோன்பொஸ்கோ வித்தி யாலயம்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், தர்சன் (பிரான்ஸ்), அவோந்தா (பிரான்ஸ்), அவோந்திக்கா (பிரான்ஸ்), அவினியா (பிரான்ஸ்), அவியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (31.10.2014) வெள்[illegible] கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித ஆசீர்வாதப்பர் [illegible] ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடு[illegible]பட்ட பின் கொஞ்சேஞ்சி மாதா [illegible]வாக சேமக்காலையில் நல்லடக்க[illegible] செய்யப்படும்.

இந்த அறி[illegible] [illegible]த்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

140, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(53523) (10)

தகவல்:
குடும்பத்தினர்.


தேசிய பிரபல பயண ஒழுங்கமைப்பு நிறுவனம்

Nation Popular Travels & Tours

0773083820
கொழும்பு
0114378117
வவுனியா
0244930830
யாழ்ப்பாணம்
0214920920
www.nationtravels.com


கொழும்பு சென்னை 23900/= Return
கொழும்பு திருச்சி 22400/= Return
கொழும்பு டோகா 26000/= One way
கொழும்பு சிங்கபூர் 30500/= Return
கொழும்பு பிரான்ஸ் 45500/= One way
கொழும்பு சுவிஸ் 42000/= One way
கொழும்பு ஜேர்மனி 93500/= Return
கொழும்பு லண்டன் 39500/= One way
கொழும்பு கனடா 105700/= One way

# கையளிக்கபட்டது லேக் ஹவுஸ் வீதி

வந்தாறுமூலை, ஒக். 31
கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 1.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்பட்ட வந்தாறு மூலை லேக் ஹவுஸ் வீதி, கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய கே. துரைராஜசிங்கம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீதியை திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வை வந்தாறுமூலை மேற்கு பொதுமக்கள் சார்பில் ஊர் பிரதிநிதிகள் ஏற்பாடு செய்திருந்தனர். பல காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த இவ்வீதியை மாகாணசபை உறுப்பினர் கவனம் எடுத்து புனரமைத்துக் கொடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டமைக்கு நன்றி செலுத்தும் முகமாக இந்த நிகழ்வினை மேற்கொண்டதாகவிழாவை ஏற்பாடு செய்தோர் தெரிவித்தனர். மாகாணசபை உறுப்பினர் கே. துரைராஜசிங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே இவ்வீதிக்கான நிதி ஒதுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை எட்வேட்



யாழ். நாவாந்துறை வடக்கைப் பிறப்பிடமாகவும், நோர்வே Bergen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை எட்வேட் 28.10.2014 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனுவேல்பிள்ளை மற்றும் றெஜினா தம்பதியரின் அன்பு மருமகனும், திரேஸ் அஞ்சலினா (கௌரி - நோர்வே) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்றெனா, கார்த்திகா, டிவைனா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எட்வேட் செசிலியம்மா (மலர் - இலங்கை), அமிர்தநாதர் (பிரான்ஸ்), அருட்தந்தை A.M. ஸ்ரிபன் (செ.தா.அதிபர், அருள் ஆச்சிரமம் - யாழ்ப்பாணம்), ஸ்ரனிஸ்லோஸ் அமுதா (பிரான்ஸ்), காலஞ்சென்ற எமிலியானுஸ்பிள்ளை குணம் மற்றும் அருட்சகோதரி A.M. பத்திமா (நல்லாயன் சபை - இலங்கை), யூலியஸ் (நிமல் - நோர்வே), விக்ரர் றகுணா (நோர்வே), பிறேமன் றெக்ஸி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பியோ ரிலோஜன் கமல்றாஜ் அவர்களின் அன்பு மாமனும், எட்வேட் (காந்தி), பத்மாவதி, ஸ்ரனிஸ்லோஸ், சசிலா, விக்ரர், பிறேமன், பீற்றர் (அருணா), அன்ரன் றெஜிறாஜ் (றெஜி), சகாயறாஜா பிரகாஷ் (சுகிர்), அருட்சகோதரி கௌசலா (நல்லாயன்சபை), டயானா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பியோ மிலன் எட்வேட் அவர்களின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் (04.11.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் St.Paul`s Church, Nygardsgaten 3, 5015 Bergen, Norway ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, Fyllingsdalen gravplass Benshaugen 1, Norway என்னும் முகவரியில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி (04.11.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இல.7, 3 ஆம் குறுக்குத்தெரு,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம். (53306)

தகவல்:
எட்வேட் செசிலியம்மா (மலர்)
021 222 8671

### கதிரிப்பிள்ளை துரைராசா
(RETIRED COURT SECRETARY)



யாழ்ப்பாணம் தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை துரைராசா 29.10.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை-பார்வதி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற சுப்பையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினாம்பாளின் அன்புக் கணவரும் துரைரெத்தனவதி, சுகிர்தவதி, லலிதவதி, மானவதி, ரூபவதி, சண்முகபாலன், சண்முகவரதன், கிருபாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரவீந்திரன், வீராசாமி காலஞ்சென்ற குணசிங்கம், தங்கவடிவேல், சிவலிங்கம், ஈஸ்வரி, சுசீலா, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆனந்தி-ரகுபதி, விஜித்தன்-உஷா, தர்ஷன்-பிரமினா, பிரதீபா-பிரதீபன், சுஜித்தா-ஆனந்தராஜா, வேணி-திருநவன், லோகரூபன், கஜேந்தினி, புருஷோத்மன், கார்த்திகா, ஹரிராம், சதீஷ்-நறீரா, ரோகினி, ... லோகபிரியன் கிருத்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் விக்... ...தீசன், யனுசன், கேஷிகன், நவதாரணி, யாதவ், திஷாந்த், வாஷ..., ... ...னும் ஆவார்.
அபிஷ்ணன் ஆகியோரின் பாசமுள்ள பூட்ட... ... வீதி,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29ஸ்ரீ சிவானந்த... கொட்டாஞ்சேனையில் இன்று (31.10.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று, மாலை 4.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(சி/17180)(7.6.3)

## பதுளை இடருக்கு ஹக்கீம் அனுதாபம்

மட்டக்களப்பு, ஒக். 31
இலங்கையில் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்துக்கு பின்னர் ஏற்பட்ட பாரிய மனிதஅவலம்பதுளையில் இடம் பெற்றுள்ள அனர்த்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி யமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பதுளை மாவட்டத்தில் மீரியாபெத்த, கொஸ்லந்த பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தில் ஏராளமானோர் புதையுண்டும் காணாமலும் போயுள்ளதை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். தோட்டப்புற மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிகின்றேன்.
இலங்கையில் 2004 ஆம் ஆண்டில்நிகழ்ந்த கோரச்சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்ட பாரிய மனித அவலமாக இந்தச் சம்பவத்தைக் கருதலாம். இந்த மண்சரிவில் சிக்கி காயமடைந்தோர் சுகமடைய பிரார்த்திப்பதோடு, இந்தச் சம்பவத்தில் ...ந்தோரின் உயிரிழ... குடும்பத்தினருக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்...

## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
12.04.2006

பிதாவின் மடியில்
31.10.2011

### பிறெய்சி கரோலின் யூட் செல்வக்குமார்

பாசக்கயிற்றால் கட்டி வைத்து மழலை மொழியால் கவர வைத்து
குறும்புத்தனத்தால் சிரிக்க வைத்து காலனவனால் அழைப்பு வைத்து
இன்னுயிர் துறந்ததேனோ! நாழிகைகள் தொடர்ந்து சென்றாலும்
ஆறாது எம் காயங்கள் நெஞ்சினிலே...

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
அப்பா, அம்மா, பெரியம்மா,
அக்கா, குட்டியம்மா.

54/2, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.
(53507)(12)(6)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா விஜயகுமார் (விஜயன்)




மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த செல்லையா விஜயகுமார் 29.10.2014 சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மல்லிகா தேவி மற்றும் கமலாதேவி, சிவராசா (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னப்பு மற்றும் தனபாலசிங்கம், மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2014) வெள்ளிக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு, மீசாலை. (47324) (14.3)

தகவல்:
குடும்பத்தினர்.



### சபாரட்ணம் கிருபாமூர்த்தி
(கட்டட ஒப்பந்தகாரர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் கிருபாமூர்த்தி 28.10.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம்- கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா-அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், தர்ஷினி, க...யினி, கிஷாந், திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி மற்றும் சத்தியேஸ்வரி, சத்தியபகவதி, சத்தியராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தர்மசீலன், சங்கர், கிஷானி, செல்வசுயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயலக்ஷ்மி, காலஞ்சென்ற கந்தவேள், பரமானந்தம், யுகலட்சுமி, இலட்சுமிகாந்தன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நருஷன், டிஷான், ஷணஞ்ஜெய், டனிஷா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சசிகலா, சசிதரன், ஜெயகலா, ஜெயதரன் ஆகி யோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 01.11.2014 சனிக்கிழமை மு.ப. 10 மணி முதல் மாலை 7.00 மணி வரை அஞ்சலிக்காக வைக் கப்பட்டு, 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டு, மதியம் ஒரு மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.32 C,
Inner Fair Line Road,
Dehiwala.
T.P: 077 650 6438/077 979 4224

தகவல்:
குடும்பத்தினர்.
(சி/17181)(4.3.6)

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



- London
- Perth
- New York
- Auckland
- Doha
- Thiruchi
- Delhi
- Bangkok
- Honk Kong
- Guangzhou
- Narita
- Melbourne
- Toronto
- Sydney
- Madurai
- Bombay
- Singapore
- Malaysia
- Rome
- Dubai

உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
*Conditions apply

| | |
|---|---|
| Chennai | Rs. 24,100/- upwards |
| London | Rs. 82,500/- upwards |
| Paris | Rs. 61,200/- upwards |
| Frankfurt | Rs. 65,800/- upwards |
| Zurich | Rs. 62,800/- upwards |

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
(c.17188) Skyline

## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர் அனுமதி

2015ஆம் ஆண்டில் தரம் 6-12 வரையான மாணவர்களிடம் இருந்து அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுப் பூரணப் படுத்தி 2014.11.12 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

(53320)(10.6) **அதிபர்.**

## தொடர்ச்சி...

### சுன்னாகம்

கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கில் இராணுவம் குறைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு தெரிவிக்கின்றது. அது உண்மையா? என்றுதான் அவர் என்னிடம் முதலில் கேட்டார். ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இராணுவத்தை இடமாற்றுவது இராணுவக் குறைப்பு அல்ல என்பதை தெரிவித்தேன். அத்துடன் இராணுவக் குறைப்புச் செய்யப்படுவதாக இருந்தால், இங்கு ஏன் மக்களின் காணிகளை தொடர்ந்தும் சுவீகரித்துக் கொண்டிருக்க வேண்டும். மக்களின் காணிகளை, காணி சுவீகரிப்புச் சட்டங்களின் கீழ் அவர்கள் சுவீகரிப்பதைச் சுட்டிக்காட்டினேன்.

எமது மக்களுக்கு எவ்வாறான நிவாரணங்கள் வேண்டும் என்று அவர் என்னிடம் கேட்டார். வீதிகள் போட்டுவிட்டார்கள், ரயில் பாதை அமைத்து விட்டார்கள். ஆனால் எங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை அவர்கள் இன்னமும் மேம்படுத்தவில்லை. மக்கள் தமது வாழ்வாதாரமான விவசாயத்தையோ, மீன்பிடியையோ மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். அந்தளவு தூரம் மக்களின் காணிகளை இராணுவத்தினர் கைப்பற்றி வைத்திருக்கின்றனர்.

மேலும் சுன்னாகம் பிரதேசத்திலுள்ள கிணற்று, குடிதண்ணீரில் கழிவு ஓயில் கலந்துள்ளமை தொடர்பில் அவரிடம் எடுத்துக் கூறினேன். உடனடியாக அவர் அதனை தடுக்க வேண்டும் என்றார். அதற்கு தமது தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்தார்" - என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

(ற-5)

## திருக்கல்யாண உற்சவம் இன்று நீர்வேலியில்

யாழ்ப்பாணம், ஒக். 31

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருதல் இடம்பெறும்.

(த-17)

### உடன் விற்பனைக்கு

TATA 1615 Full body லொறி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு -0778186460

### தேவை

விநியோக முகவர் நிலையம் ஒன்றிற்கு பெண் கணனி இயக்குனர் தேவை. அத்துடன் துவிச்சக்கரவண்டி ஊடான லொத்தர் விற்பனையாளர் தேவை.
தொடர்பு -021 222 9222

## கண்ணீர் அஞ்சலி

திருமதி சிரோமினி நந்தகுமார் (சங்கீத ஆசிரியை)
அவர்களின் அன்புக் கணவர்
**க.நந்தகுமார்** (ஊடகச் செயலர் வடமாகாண ஆளுநர் அலுவலகம், கல்வி இணைப்பாளர் வடமாகாண கல்வி அமைச்சு)
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**இசையாசிரியர் கழகம்-யாழ். வலயம்.** (53509)(10)

## மரண அறிவித்தல்



### திருமதி ராஜகுமாரி(குமாரி) பொன்னன்

கைதடி தெற்கு கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி ராஜகுமாரி (குமாரி) பொன்னன் நேற்று (30.10.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்ணன்-செல்லி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகன்-சின்னம்மா தம்பதியரின் மருமக ளும், பொன்னையாவின் பாசமிகு மனைவியும், புஸ்பராணி, புஸ்ப வதி (அரசினர் வைத்தியசாலை-சாவகச்சேரி) யோகராசா, யோகேஸ்வரன் (சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயும், மோகனராஜ், அருள்விந்தன், சாந்தி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி. (C/17283) (10) தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சிவகுருநாதன்

[ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபர்]



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மெசஞ்சர் வீதி, கொழும்பு-12 ஐ வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவகுரு நாதன் (29.10.2014) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணி யின் அன்புக் கணவரும், தவரஞ்சினி (இத்தாலி), சாந்தினி (கனடா), ரஜனி (சுவிஸ்), சிவகுமார் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானச்சந்திரன், உருத்திரானந்தசிவம், ஆனந்தராதாகிருஷ்ணன், சிவானந்தினி ஆகியோரின் மாமனா ரும் மஞ்சுகி, நிரோசன், விலோர்ச்சனா, சர்மிலா, சிவானி, சயன், சத்தியா, லக்ஷியா, ஆரணி, வேணுகோபாலன் ஆகியோரின் அன்புப் பேரனும், அஜே இன் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தங்கலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சண்முக நாதன் மற்றும் சுவாமிநாதன், கண்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 8.00 மணி முதல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மு.ப. 11.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

174/5/11, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12. (53312)(7.6.3)
தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி குணமணிதேவி தியாகராஜா


நல்லூர் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணிதேவி தியாகராஜா 30.10.2014 சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் -மீனாட்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாக ராஜாவின் அன்பு மனைவியும், பாமாவின் (கனடா) பிரியமான தாயும், வரதராஜாவின் (கனடா), அன்பு மாமியும், ஆரணி, கரிஷ் ஆகியோரது பாசமிகு பேர்த்தியும், நவமணி, காலஞ் சென்ற குணரத்தினம், யோகமணிதேவி, இராஜகுலேந்திரன், மனோன்மணி, இரவீந்திரன், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2014) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் பருத்தித்துறை வீதி, இல.18, நாலாம் ஒழுங்கையில் (ஆனைப்பந்திச் சந்திக்கருகில்) அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, 4 ஆம் ஒழுங்கை,
ஆனைப்பந்தி. (53511)(4.3.6)
தகவல்: **பாமா வரதராஜா** (மகள்)



## மணிவிழா காணும் மாசற்ற பண்பாளன் ......
## திரு.சொக்கலிங்கம் ஜெயவீரசிங்கம்



| | |
|---|---|
| தந்தை | : சதாசிவம் சொக்கலிங்கம் |
| தாய் | : நாகம்மா சொக்கலிங்கம் |
| பிறப்பு | : யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு 25.10.1954 |
| மனைவி | : திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) |
| ஆரம்ப கல்வி | : யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை |
| இடைநிலை | : யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் |
| உயர்கல்வி | : NCBS (Accounting) யா/தொழிநுட்பக் கல்லூரி (1976-1977)<br>B.Com யா/பல்கலைக்கழகம்-1982<br>Dip. in Edu. யா/பல்கலைக்கழகம்-1993 |
| ஆசிரியராக | : குருணாகல் /கல்கமுவ றோ.க.த.க.பாடசாலை (1984-1989)<br>யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (1989-இன்றுவரை) |
| உப அதிபராக | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (2005-இன்றுவரை) |

நேர்த்தியுடை நின்தன் சேவை
பூர்த்தி இருபத்தைந்தகவை
ஆர்த்திபடைத்த அருங்கடமை
கீர்த்தியடைந் தேதிறமை
காட்டி நிதம் மனநிறைவை
ஊட்டி மகிழ்ந் தேபெருமை
நாட்டிவைத்த உம்முயர்வை
வாழ்த்தி யதேம்கவிதை

அன்புடன்.........

**மெமோறியன்ஸ், பாடசாலை சமூகம்**

## தொடர்ச்சிகள்

### உரிய

யங்களைப் பார்வையிட்டு அனுமதி வழங்குதற்கான ஏற்பாடுகளைச் சுகாதார சேவைகள் பணிமனை மேற்கொள்ளும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 59 ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்கள் மற்றும் யூஸ் உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது. கிணற்றடியில் இருந்து 50 அடி தூரத்தில் மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் நிலத்துக்கு கீழ் சுண்ணாம்புப் பாறைகளில் வெடிப்பு ஏற்பட்டதன் காரணமாகக் கிணற்றில் மலக் கிருமிகள் கலந்துள்ளன. தற்போதுள்ள கிணற்று நீர் நுகர்வுக்கு ஏற்றதாக இல்லை. இந்தப் பிரச்சினை நீண்ட காலத்துக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலேயே நீரினால் ஏற்படும் நோய்கள் யாழ்.மாவட்டத்தில் தான் அதிகம். இரண்டாம் இடத்தில் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. 2013 ஆம் ஆண்டு நெருப்புக் காய்ச்சல் நோயினால் 350 பேரும், வயிற்றோட்டத்தினால் 459 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் இந்த வருடத்தில் 9 மாத காலப் பகுதியில் வயிற்றோட்டத்தால் 272 பேரும், நெருப்புக் காய்ச்சலால் 293 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் இது பெரிய பிரச்சினையாக இருப்பதால் தீர்வு காணப்படவேண்டியுள்ளது.

நீரைச் சுத்திகரித்தோ அல்லது கொதிக்க வைத்தோ தான் மக்கள் நுகரவேண்டும். தனியாக பச்சைத் தண்ணீரை நேரடியாக எடுத்தக் கொண்டால் தொற்று நோய் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

2009 ஆம் ஆண்டு 'நிஸா' புயல் ஏற்பட்ட காலத்தில் நீர் மாசடைந்திருந்தமையால் அக்காலத்தில் யூஸ் உற்பத்தி யாழ்.மாவட்டத்தில் சடுதியாகத் தடைசெய்யப்பட்டது. அதன் விளைவாகக் குறித்த காலப்பகுதியில் தொற்று நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்திருந்தது.

இதனடிப்படையில் 9 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களில் இருந்து உணவுமாதிரிகள் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது மனித பாவனைக்கு அவை உகந்ததல்ல என அறிக்கை கிடைக்கப்பெற்றது. பத்திரிகைகளில் செய்தி வந்த பின்னர் பொதுமக்களிடம் இருந்தும் அதிகாரிகள் மட்டத்தில் இருந்தும் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டதன் அடிப்படையில் 59 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களைச் சோதனையிட்டபோது 14 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் தாங்களாகவே உற்பத்தியை கைவிட்டன. 9 நிலையங்கள் சுகாதாரமான முறையில் இருந்தன. 8 நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டபோது கால அவகாசத்தின் அடிப்படையில் 6 நிலையங்கள் மீள செயற்படத் தொடங்கியுள்ளன.

எனவே ஐஸ்கிறீம் உற்பத்திக்கு ஏதோ ஒரு வகையில் நீரைச் சுத்திகரிப்பு செய்யவேண்டும். அத்துடன் கூறப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சுகாதாரமற்ற முறையில் எந்த உணவுப் பொருள்களையும் விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்றார். (த-14)

### இந்திய

மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், நேற்றுத் தமிழக மீனவர்கள் 5 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதே போல் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக இலங்கையைச் சேர்ந்த மூன்று பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு 5 இந்திய மீனவர்கள் உட்பட 8 பேரும் சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்குக் கடத்தியதாகக் குற்றஞ்சாட்டி நெடுந்தீவில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அவர்கள் மீதான வழக்கு கொழும்பு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்து அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து அவர்கள் 8 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது மேல் நீதிமன்று.

#### ஆட்சேபனை

வழக்கு விசாரணையின்போது ஆட்சேபனையொன்றைச் சமர்ப்பித்த சந்தேக நபர்கள், கைதுசெய்யப்படும்போது தாங்கள் இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில் இருக்கவில்லை என்று தெரிவித்தனர். எனவே தங்களுக்கு எதிராக இலங்கை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்குச் சட்டமா அதிபருக்கு அதிகாரம் இல்லை என்று இந்திய மீனவர்கள் சார்பில் வாதங்கள் முன்வைத்து தாங்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர்.

#### ஜி.பி.எஸ் மூலம் சாட்சியம்

ஆனால் ஜி.பி.எஸ். தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திச் சாட்சியங்களைச் சமர்ப்பித்த அரச தரப்பு வழக்கறிஞர், சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படும் போது அவர்கள் இலங்கையின் கடற்பரப்புக்குள் இருந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். சந்தேக நபர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இனங்கண்ட நீதிமன்று அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்தது.

இலங்கை வரலாற்றில் இதுபோன்ற வழக்கில் குற்றச்சாட்டொன்றை நிரூபிக்க ஜி.பி.எஸ். தொழில் நுட்பம் பயன்படுத்தியமை இந்த வழக்குக்கே ஏன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

#### மேன்முறையீடு .

இருப்பினும், இவர்கள் 8 பேரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 14 ஆம் திகதிக்குள் அவர்கள் உயர் நீதிமன்றில் மேல்முறையீடு செய்யலாம்.

மீனவர் தரப்பில் சட்டத்தரணிகளான அனில் சில்வா, ஷராபி மொஹிதீன், ஸ்ரீகாந்தா ஆகியோர் முன்னிலையானார்கள். கொழும்பு உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்போவதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

இந்த வழக்குத் தீர்ப்புத் தொடர்பில் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்யவுள்ளதாக இந்திய வெளியுறவுச் செயலர் சையது அக்பருதீன் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் இந்தியா இலங்கை வெளி விவகார அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

#### தமிழகம் கொந்தளிப்பு

இந்தத் தீர்ப்புக்கு அ.தி.முக., தி.மு.க., பா.ஜ., உள்ளிட்ட தமிழக அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதே வேளை, இந்த தகவல் தங்கச்சி மடம் மீனவப் பகுதியில் காட்டுத் தீபோல் பரவியது. உடனடியாக அவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மாலை 3 மணியளவில் ராமேஸ்வரம் - மதுரைச் சாலைக்கு வந்தனர். அவர்கள் சாலையின் நடுவில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மதுரையில் இருந்து ராமேஸ்வரம் சென்ற வாகனங்களும், ராமேஸ்வரத்தில் இருந்து மதுரை வரவேண்டிய வாகனங்களும் நடு வழியில் நின்றன. போராட்டக் காரர்களில் சிலர் வீதியின் ஓரத்தில் இருந்த டிரான்ஸ்போமர்களுக்கு தீ வைத்தனர். திடீரென சிலர் வீதியின் ஓரத்தில் இருந்த ராட்சதக் குழாய்களை உருட்டி வீதியின் நடுவில் போட்டுச் சாலையை மறித்தனர். இதனால் அங்கு போக்குவரத்து முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டது. நேரம் ஆக ஆக அந்தப் பகுதியில் மக்களின் கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

#### தண்டவாளம் தகர்ப்பு

இந்தப் போராட்டத்தின்போது அந்த வழியாக வந்த ஒரு அரசு பஸ் கண்ணாடி உடைக்கப்பட்டது. ஒரு தரப்பினர் ரயில் தண்டவாளத்தை நோக்கி வந்தனர். ரயில் தண்டவாளத்தில் ரயர்களை போட்டு எரித்தனர். ராமேஸ்வரம்-பாம்பன் இடையே 900 மீற்றர் அளவுக்கு ரயில் தண்டவாளம் தகர்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ராமேஸ்வரத்திலிருந்து சென்னை செல்லும் ரயில்கள், மதுரை ரயில் மற்றும் கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயில் உட்பட அந்த வழியாகச் செல்லும் அனைத்து ரயில்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. தண்டவாளம் தகர்ப்பால் நேற்று மாலை 5 மணிக்குப் பிறகு ராமேஸ்வரத்திலிருந்து புறப்படும் ரயில்கள் இன்று புறப்படும் என்று ரயில்வே கோட்ட அதிகாரி ரஸ்தோகி தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை முதல் தமிழகத்தின் பல இடங்களிலும் கொந்தளிப்பான நிலை காணப்பட்டது. (த-4)

### வருமானத்தை

பத்திகளை மக்களுக்கு வழங்குமாறு யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் வேண்டுகோள் விடுத்தள்ளார்.

ஐஸ்கிறீம் உற்பத்தியாளர் களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது உற்பத்தியாளர்களின் கோரிக்கைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எடுத்துக் கூறப்பட்டன. இதன்போது பணிப்பாளரால் பூரண விளக்கம் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் உரையாற்றிய ஜெயசேகரம் மேலும் தெரிவித்தாவது:-

யாழ்ப்பாண ஐஸ்கிறீம் உற்பத்தியால் வர்த்தகர்கள் அதிக இலாபம் பெற்று வந்துள்ள நிலையில் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கையால் ஐஸ் கிறீம் நிலையங்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு மூடப்பட்டன. இதனால் ஐஸ் கிறீம் உற்பத்திளார்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

உற்பத்திகளுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளூராட்சிச் சபைகளால் அனுமதி வழங்கப்படுவதால் உற்பத்தியாளர்கள் அனு மதிப்பத்திரம் இருக்கும் துணிவில் உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். எனினும் உள்ளூராட்சிச் சபைகள் சரியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அனு மதியை வழங்கவேண்டும். இவர்களால் வருமானத்துக்காக வழங்கப்பட்ட அனுமதியால் பாதிக்கப்பட்டிருப்பது வர்த்தகர்களே. எனவே எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வகையில் நேரடியாகச் சுகாதார சேவைகள் பணிமனையுடனோ அல்லது வட மாகாண சுகாதார அமைச்சுடனோ தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளைப் பெற்று உற்பத்தி நடவடிக்கை களை மேற்கொள்ளும் போது எதிர்காலப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும் கைகொடுக்க வேண்டும்.

பிரலமாகப் பேசப்பட்ட ஐஸ்கிறீம் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. 90 வீதமான உற்பத்தி நிலையங்கள் மீள உற்பத்திகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன. நுகர்வோர் அச்சமின்றி பாவனைகளை மேற்கொள்ள முடியும்-என்றார்.

(த-14)

### நீரினாலும்

அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ள யாழ்.மாவட்டத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எல்லோருடமும் உள்ளது. இலங்கையில் நீண்ட காலமாக நீரினாலும் உணவினாலும் பாதிக்கப்படுவர்களின் தொகை யாழ். மாவட்டத்தில் தான் அதிகமாகவுள்ளது.

மக்களைச் சுகதேகிகளாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு சுகாதார திணைக்களத்திடம் உள்ளது. பொது நோக்கத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. மலத்தில் இருக்கும் நுண்ணுயிர் கிருமிகள் ஐஸ் கிறீமில் இருப்பதால் மலத்தொற்று உள்ளதாக ஊடகங்களில் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எனவே உற்பத்திக்குச் சுகாதார ரீதியாகக் கூறப்படும் விதி முறைகளை அல்லது மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. இல்லாவிடில் மாற்றுத் தொழில்களைத் தான் உற்பத்தியாளர்கள் மேற்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியில் போகும் உணவுப் பொருள்கள் தரமானதாகவும் சுகாதாரமாகவும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு உள்ளது.

அரச அதிகாரிகள் மக்களின் நலனுக்காகச் சேவகர்களாக இருந்து பணியாற்ற வேண்டியுள்ளது. சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது அடாவடியாகச் செயற்பட்டால் அதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளது. எனவே உற்பத்தியாளர்கள் ஒத்துழைப்புத் தந்து சுகாதாரமான யாழ்ப்பாணத்தை உருவாக்க வேண்டும் - என்றார்.

(த-14)

### தமிழக

கையும் மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது மிகவும்வேதனைக்குரியது என்று தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் கூறுகையில், ஐந்து மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கை தேவை என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறுகையில், தமிழக மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது ஒருவகையான அச்சுறுத்தல் என்று தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் கூறுகையில், தமிழக மீனவர்கள் நீதி கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மத்திய அரசு சார்பில் வழக்கறிஞர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தூக்குத் தண்டனை ஒட்டுமொத்த மீனவ சமுதாயத்துக்கும் விழுந்த பேரிடி என்று மீனவர்களின் உறவினர் பற்றிக் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேச விடுதலை இயக்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் தியாகு கூறுகையில், தமிழக மீனவர்களை விடுவிக்க இந்திய அரசு கோரிக்கை வைக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஐந்து தமிழக மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ள தேசிய மீனவர் பேரவையை சேர்ந்த இளங்கோ, இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியல் விளையாட்டு என்று கூறியுள்ளார்.

(த)

### மீனவர்

இவ்வாறானதொரு நிலையில், இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்காக மாத்தறையைச் சேர்ந்த 15 மீனவர்கள் இரண்டு மாதத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்ற நடவடிக்கையினூடாக விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்ட 15 பேரும் இந்தியக் கடற்படையினரால் அவர்களது படகில் அழைத்து வரப்பட்டனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில், காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையினரிடம் மீனவர்களைக் கையளித்தனர். இவர்களை யாழ். மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதி காரிகள் பொறுப்பெடுத்தனர். பின்னர் அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

இருப்பினும் இந்த மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை இந்திய அரசு விடுதலை செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

### வடக்கு

ஞர் விவகார அமைச்சு நடத் தும் வடக்கு. மாகாண பண் பாட்டுப் பெருவிழா நாளை சனிக்கிழமை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஆகிய நாள்களில் வவுனியா இறம் பைக்குளம் மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கின்றது

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதரக பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணா மூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வு கள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இருநாள் நிகழ்வுகளிலும் நடனம், நாடகம், இசை நாடகம் என்பவனவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.(த-288)

### மினி பஸ்

என்பவரே இவ்வாறு உயிரிழுந்தவராவார்

இந்தச் சம்பவம் நேற்று ஒட்டுமடம் கோம்பயன் மயானச் சந்தியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை மாதகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ்ஸும் இளவாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ்ஸும் கோம்பயன் மயானச் சந்தியில் ஒன்றை ஒன்று முந்த முற்பட்டவேளை எதிரே சைக்கிளில் வந்த குடும்பஸ் தரை மாதகலில் இருந்து வந்த மினி பஸ் மோதியதாகத் தெரி விக்கப்பட்டது.

காயமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுச் சிறிது நேரத்தி லேயே உயிரிழந்தார்.

விபத்தை அடுத்து பஸ்ஸின் சாரதி தலைமறைவாகியுள்ளார். விபத்து நடந்த சிறிது நேரத்தில் அவ்விடத்தில் கூடிய இளைஞர்கள் பஸ் நடத்துநரைச் சரமாரியாகத் தாக்கி சாரதி வரும் வரை தடுத்து வைத்திருந்தனர். ஆனால் சாரதியோ அவ்விடத்துக்கு வரவில்லை. பதிலாக பஸ் உரிமையாளர் அங்கு வருகை தந்து பொலிஸாருக்கு அழைப்பு விடுத்த பின்னரே யாழ்ப்பாணம் பொலிஸார் அங்கு வந்தனர். அங்கு வந்த பொலிஸார் சாட்சியங்களைப் பதிவுசெய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். விபத்து நடந்து அரை மணி நேரத்தின் பின்பே குறித்த இடத்துக்குப் பொலிஸார் வந்தனர் என்று கூறப்பட்டது.

(த-21)

### வடக்கில்

விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பிரதி நிதியாக மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் திரு அன்ரனி விக்டர் சோசை, வடமாகாண சபை உறுப்பி னர் ஏ.அஸ்மின் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு முஸ்ஸிம்கள் கடந்து வந்த பாதையும் முன்னோக்கியுள்ள பாதையும் எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெற்றது.

(த-56)

### கிளிநொச்சி

இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி அரச அதிபர், கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் நிர்வாக நடைமுறைகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றதா? எனவும் மீள்குடியேற்ற நிலைவரங்கள் தொடர்பிலும் ஐ.நா. அதிகாரி கேட்டறிந்ததாகத் தெரிவித் தார்.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சி அரச செயலகத்தின் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், உதவித்திட் டமிடல் பணிப்பாளர் ந.கௌரி தாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-18)

# நிலச்சரிவில் சிக்கிய தமிழர்களுக்கு உதவுக

## இந்திய அரசுக்கு வைகோ வலியுறுத்து

சென்னை, ஒக்.31
இலங்கையில் நிலச்சரிவில் சிக்கியுள்ள மலையகத் தமிழர்களை மீட்டு, அவர்களின் மறுவாழ்வுக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அந்த நாட்டு அரசுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று இந்திய அரசை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பதுளை மாவட்டத்தில் உள்ள மீரியபெத்தை என்ற இடத்தில் மழை காரணமாக ஒக்ரோபர் 29 ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 200 தமிழர்கள் புதையுண்டு உயிர் இழந்தனர்; மேலும், 500 தமிழர்களைக் காண வில்லை என்ற அதிர்ச்சிகரமான தகவல்கள் வருகின்றன. கொஸ்லந்தை பகுதி யில் பெருமளவு வீடுகள் இடிந்து போயிருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.
மேலும் அந்த அறிக்கையில் மலையகத் தமிழர்கள் வாழும் தேயிலைத் தோட்டக் குடியிருப்புக்கள், மண்சரிவு அபாயம் உள்ளவை என்று பல ஆண்டுகளுக்கு முன்பே சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிலையம் எச்சரித்து இருந்தது. ஆயினும், தேயிலைத் தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.
இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தங்கள் இரத்தத்தைச் சிந்தி தேயிலை, கோப்பித் தோட்டங்களை உருவாக்கியவர்கள். கடும் உழைப்பைக் கொடுத்து இன்றும் இலங்கையின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள்.
அவர்கள் பல தலைமுறைகளாக மலையகத்தில் பெருந் தோட்டத் தொழிலாளர்களாக வாழ்ந்து வந்தபோதிலும், 1948 ஆம் ஆண்டு இலங்கை அரசு கொண்டு வந்த குடி உரிமைச் சட்டத்தாலும், 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியப் பிரதமர் சாஸ்திரி- இலங்கைப்பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தத்தாலும் பத்து இலட்சம் பேரின் குடி உரிமை பறிக்கப்பட்டு, நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர் என்றும் 'உலகிலேயே வேறு எங்கும் இத்தகைய கொடுமை நடந்ததில்லை என்றும் தெரிவித்துள்ள வைகோ, இலங்கை அரசின் வஞ்சகத்தாலும், பாரபட்சமான அணுமுறையாலும் வாழ்வுரிமைகளை இழந்த மலையகத் தமிழர்களை இயற்கையும் வஞ்சிக்கின்றது.
நிலச்சரிவில் சிக்கியுள்ள மலையகத் தமிழர்களை மீட்கவும், உடைமைகளை இழந்து தவிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கவும், நிவாரண உதவிகள் வழங்கவும் இலங்கை அரசை இந்திய அரசு அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என்று தெரிவித்துள்ளார். (வ)



'சூழலுக்கு ஒவ்வாத பொருள்களுக்கு பிரதியீடாகக் கைத்தறித் துணியினாலான பொருள்களை அறிமுகம் செய்வோம்' என்ற கருப்பொருளில் கைத்தறி நெசவுத்துணியின் பண்பாட்டைக் கொண்டாடுவோம் கண்காட்சியும் விற்பனையும் கிழக்குப் பல்லைக்கழக வந்தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார். (வ)

## திண்மக் கழிவைத் தரம் பிரித்துக் கொடுங்கள்

### இல்லாவிடில் சட்ட நடவடிக்கை

காத்தான்குடி, ஒக். 31
காத்தான்குடி நகரசபைப் பிரிவில் திண்மக்கழிவை தரம் பிரித்துக் கொடுக்காவிட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச். அஸ்பர் தெரிவித்துள்ளார்.
காத்தான்குடி நகரசபையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
காத்தான்குடி நகரசபைப்பிரிவில் திண்மக்கழிவுகளைக் (குப்பைகளை) கொட்டுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கி வந்தோம். குப்பைகளைச் சேகரித்துக் கொட்டுவதற்கு இடமில்லாமல் சிரமங்களை எதிர்நோக்கிவந்தோம்.
இந்தநிலையில், இதற்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக அரச காணியொன்றைப் பெற்றுத்தருமாறு அரச அதிபரிடம் கேட்டோம். கிழக்கு மாகாண சபையிடமும் கோரினோம். இந்த இரு முயற்சியும் கைகூடவில்லை.
பின்னர், காத்தான்குடி மக்கள் வழங்கிய உதவியுடன் காத்தான்குடி நகரசபை எல்லைக்குள் ஐந்து ஏக்கர் காணியை ஐந்து கோடி ரூபா செலவில் வாங்கினோம். தற்போது இக் காணியில் திண்மக்கழிவு முகாமைத்துவம், மீள்சுழற்சி, பசளை தயாரிப்பு என்பவற்றை மேற்கொள்வதற்கான வேலைகள் இடம் பெற்று வருகின்றன. என்றார். (த-10)

## இரண்டாம் உலகப் போரின்போது மூழ்கிய விமானம் கண்டுபிடிப்பு

### 71 ஆண்டுகளின் பின்னர்

கொழும்பு, ஒக்.31
இரண்டாம் உலகப் போரின் போது கடலில் மூழ்கிய கெட்டலினா விமானம் ஒன்று இலங்கையின் வட கடற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த விமானம் 71 ஆண்டுகளின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானிய விமானங்களிகளின் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் காரணமாக இலங்கையின் கடற்பிரதேசத்தில் ஒன்பது கப்பல்கள் மூழ்குண்டிருந்தன. அவற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த கொழும்பைச் சேர்ந்த கணினிப் பொறியிலாளரான ஒருவரான ஆழ்கடல் ஆய்வாளர் தர்ஸன ஜயவர்தன என்பவராலேயே, இலங்கையின் வடபகுதியில் உள்ள காயங்கேணி கடற் பிரதேசத்தில் மூழ்கியிருந்த நேச நாடுகளின் படைக்குச் சொந்தமான கெட்டலினா வகையைச் சேர்ந்த விமான மொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
காயங்கேணி கடற்பகுதியில் ஆழ்கடல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள ஜகத்லால் கொழும்பகேயினால் வழங்கப்பட்டிருந்த உளவுத் தகவலொன்றுக்கு அமைய அந்தக் கடற் பிரதேசத்தில் விசேட ஆய்வொன்றை மேற்கொண்டிருந்த தர்ஸன, திருகோணமலைக்குத் தென்புறமாக 80 கிலோமீற்றர்கள் தொலைவில் அந்த விமானத்தைக் கண்டுபிடித்துள்ளார்.
இரண்டாம் உலகப்போர் இடம்பெற்ற காலகட்டத்தில் இலங்கையில் கெட்டலினா வகையைச் சேர்ந்த சில விமானங்களே பயன்பாட்டில் இருந்துள்ளன. அவற்றுள் ஒரு விமானம் உளவு பார்ப்பதில் ஈடுபட்டிருந்த போது 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி ஜப்பானின் தாக்குதலொன்றுக்கு உள்ளாகி காலியிலிருந்து கிழக்குப் புறமாக 300 கிலோ மீற்றர் தொலைவில் கடலில் மூழ்கியது.
இந்த விமானங்கள் அனைத்துமே நேசநாடுகளின் படைப்பிரிவுகளால் உளவு பார்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவைகளே. கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த விமானமும் 1943ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி உளவு பார்ப்பதில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோது ஜப்பானியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று கண்டறியப்பட்டுள்ளது.
இந்த விமானம் சூட்டு வீழ்த்தப்பட்டபோது விமானத்தில் விமானப்படைச் சிப்பாய்கள் 11பேர் இருந்துள்ளனர். அவர்கள் விமானத்தில் இருந்த இரு டிங்கிப் படகுகளைப் பயன்படுத்தி உயிர் பிழைப்பதற்கு முயற்சித்துள்ளனர். அப்போது அவற்றுள் ஒரு டிங்கிப்படகு செயலிழந்து போயுள்ளது. பின்னர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் எஞ்சியிருந்த ஒரேயொரு டங்கிப் படகின்மூலம் அந்தப் 11பேரும் உயிர்பிழைத்திருந்தனர் என்று தர்ஸன ஜயவர்தன தெரிவித்துள்ளார். (ந-22)

## குற்றங்களும் கைதுகளும்

கொழும்பு

### சிறுவன் கடத்தல் பிக்குவுக்கு மறியல்

ஹொரண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசமொன்றில் வைத்து கடந்த 23 ஆம் திகதி, நான்கு வயது சிறுவனைக் கடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிக்கு ஒருவரை, எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹொரண நீதிமன்ற நீதிவான் உத்தரவிட் டுள்ளார். சிறுவனைக் கடத்திச் செல்ல முற்பட்ட, ஸ்ரீ ராஜாங்கனை சோமரந்த நாவலங்கார என்ற பிக்குவே, அநுராதபுரத்தில் வைத்து பொலிஸாரால் மறுநாள் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதனையடுத்து அவரை நீதிமன்றத்தில் இன்று மீண்டும் முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (வ)

கொழும்பு

### தெமட்டக்கொடவில் நபர் ஒருவர் குத்திக் கொலை

கொழும்பு தெமட்டக்கொட பிரதேசத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். தெமட்டகொடை 65 இலக்க தோட்டத்தில் வசித்து வந்த 39 வயதான நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கார் ஒன்றில் சென்ற இனந்தெரியாத நபர்கள் நேற்றுக் காலை குறித்த நபரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த அந்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.(வ)

### அனுமதியின்றி மணல் ஏற்றிய டிராக்டரை பறிமுதல் செய்ய உத்தரவு

தென்மராட்சி

தென்மராட்சி,ஒக்.31
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய டிராக்டரையும் பெட்டியையும் பறிமுதல் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அனுமதிபத்திரமின்றி மணல் ஏற்றியமைக்காக அதன் சாரதி உட்பட மூவருக்கு தலா 50ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் வாகனமும் பிணையில் விடப்பட்டது. வாகனம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது வாகனத்தை பறிமுதல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் உழவு இயந்திரமும் பெட்டியுமே இவ்விதம் பறிமுதல் செய்யப்படவுள்ளது. (வ-9)

# 2015 ஜனாதிபதித் தேர்தலா? பொதுத் தேர்தலா முதலில்?

## இன்னும் முடிவில்லை என்கிறது அரசு

கொழும்பு,ஒக்.31

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என அனைவராலும் பரவலாக எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், "முதலில் ஜனாதிபதித் தேர்தலையா அல்லது பொதுத் தேர்தலையா நடத்துவது என்பது குறித்து அரசு இன்னும் முடிவு செய்யவில்லை" என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று தெரிவித்தது.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாலும் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவது உறுதி என்றும் அக்கட்சி நம்பிக்கை வெளியிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளார் மாநாட்டின் போதே அக்கட்சியின் செயலாளரும், சுகாதார அமைச்சருமான மைத்திரி பால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளை, கொஸ்லந்தை, மீரியபெத்தை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரிய மண்சரிவினால் பலியான உயிர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்த அமைச்சர், மேலும் அங்கு குறிப்பிடுகையில்,

2015 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் குறித்து எதிர்கட்சிகள் அரசு மீது குற்றம் சுமத்தி வருகின்றன.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த 10 ஆவது வரவு- செலவு திட்டத்தில் விவசாயிகளுக்கு அதிகளவான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமை எமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இந்த வரவு- செலவு திட்டத்தில் அபிவிருத்தி செயற்பாடுகள் மட்டுமன்றி மக்களின் வாழ்வாதார முன்னெற்றத்திற்கும் வழியமைத்துள்ளது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் இதுகுறித்து கடுமையாக விமர்சனம் செய்து கொண்டு மட்டுமேஇருக்கின்றன.

எது எப்படியிருப்பினும், அரசின் வளர்ச்சிப் பாதையும் அபிவிருத்திச் 'செயற்பாடுகளும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்" என்றார்.

அதேநேரத்தில், ஜனாதிபதி தேர்தல் குறித்து ஊடகவியலாளர் வினவிய போது, "ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இன்னமும் உறுதியாக்கப்படவில்லை.

அத்துடன், ஜனாதிப்தித் தேர்தலையா அல்லது பொதுத் தேர்தலையா முதலில் நடத்துவது என்பது குறித்தும் அரசு இன்னும்தீர்மானிக்கவில்லை.

ஆனால், எமது செயற்பாடுகள் குறித்து மக்கள் நன்கு அறிந்துள்ளனர். யுத்தம் முடிவடைந்த காலம் தொடக்கம் இப்போது வரை நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களையும், அபிவிருத்திகளையும் எமது அரசு ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாலும் மஹிந்த ராஜபக்ஷவே அதிக பெரும்பான்மையுடன் வெல்வார்." என்றார்.

மேலும்,தனக்கு பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் மைத்திரி, இது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் தனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டால் ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# மலையகத்தில் ஒரு வாரகால துக்க தினம்

கொழும்பு,ஒக்.31

பதுளை, கொஸ்லந்தை - மீரியபெத்த தோட்டத்தில்இடம் பெற்ற மண்சரிவு இடரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மலையகமெங்கும் ஒரு வார காலம்துக்க தினம் அனுஷ்டிக்க வேண்டும்என மலையக சிவில் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மலையக சிவில் அமைப்புக்களான மலையக சமூக ஆய்வு மையம், அடையாளம் மற்றும் மலையக பாட்டாளிகள் கழகம்என்பனஇணைந்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பதுளை - கொஸ்லாந்தை - மீரியபெத்த தோட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தம் முழு நாட்டையும் குறிப்பாக மலையக மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது, இயற்கையோடு போராடி மலையக தேசத்தை உருவாக்கியவர்களின் வழித் தோன்றல்களை இயற்கையே பலி கொண்டுள்ளது.

மரணித்த அனைவரது ஆத்மாக்களும் சாந்தியடைய பிரார்த்திப்பதோடு மரணத்தால் சோகத்தில் ஆழ்ந்துள்ள அனைவருக்கும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு மரணித்த மலையக சொந்தங்களை நினைவுகூர்ந்து உணர்வுபூர்வமாக ஒருவார காலம் துக்க தினம் அனுஸ்டிக்குமாறும் ஒவ்வொரு வீடுகளிலும் வாகனங்களிலும் வேலைத்தளங்களிலும் வெள்ளைக் கொடிகளை பறக்கவிடுமாறும் வேலை மற்றும் அலுவலகங்கள் செல்வோர் கறுப்பு பட்டி அணிந்து துக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் மலையக மண் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

# அச்சுவேலி-கொழும்பு பஸ்சேவை ஆரம்பம்

அச்சுவேலியிலிருந்துகொழும்புக்கான புதிய பஸ் சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் ஆரம்பமாகிறது.

அச்சுவேலியிலிருந்து காலை 7.00மணிக்கு புறப்பட்டு 751 பாதை வழியாக தம்பாலை தொண்டமனாறு உடுப்பிட்டி வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறை வந்து பருத்தித்துறையிலிருந்து காலை 8.00மணிக்குப் புறப்பட்டு நெல்லியடிகொடிகாமம் ஊடாக புத்தளம் பாதை, கொழும்பு வெள்ளவத்தை, தெஹிவளை ஊடாக ரத்மலானை வரை சேவையாற்றும்.

இதே போன்று ரத்மலானையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கடற்கரை வீதியுடாக வெள்ளவத்தை புகையிரத நிலையம் வந்து அங்கிருந்து காலை 7.30 மணிக்கு புறப்பட்டு புத்தளம் பாதை வழியாக கொடிகாமம் நெல்லியடி ஊடாக பருத்தித்துறை பஸ் நிலையத்தை அடைந்து 751 பாதை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி,தொண்டமனாறு ஊடாக அச்சுவேலி வரை பஸ் சேவை நடைபெறும் என்பதை இலங்கை போக்குவரத்துச் சபை பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (த-ரி)

# கிணற்றில் தவறிவிழுந்த பெண் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 31

கிணற்றினுள் தவறி விழுந்த பெண் ஒருவர் நீரில்மூழ்கிநேற்றுப் பிற்பகல் உயிரிழந்தார்.

சங்கரத்தை வட்டுக்கோட்டையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சூரியகுமார் தயாகனி (வயது - 50) என்பவரே உயிரிழந்தார். அது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (த-4)

# இந்திய மீனவருக்கு தூக்கு; மோடிக்குப் பன்னீர் கடிதம்

சென்னை, ஒக். 31

போதைப்பொருள் கடத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் தமிழகத்தைச் சேர்ந்த 5 மீன்வர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் வெளியுறவுத் துறை அமைச்சகத்திடம் அறிவுறுத்தி, இந்திய தூதர் மூலம் மீனவர்களை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தமிழக மீனவர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட வழக்கில் மேல்முறையீடு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளது. (த)

பொருளியற் கல்லூரி
அளவையியல்
A/L 2015
நவீன அளவையியல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
ஆசிரியர் :
N.ஜெயசுரேஷ்
(B.Com.Dip.In.Edu)
சனி, ஞாயிறு - யாழ் நகரில்
07-08 am.
இணுவிலில்
12-01 pm.

கணக்கீடு
AP.பகீரதன்
B.B.A(Fin.Spl)
A/L 2015
கிரயக் கணக்கீடு
Sat, Sun 8 - 9
A/L 2016
சீராக்கல் பதிவுகள்
Sat, Sun 1 - 2
ஆரம்பம் - 01.11.2014
சனிக்கிழமை
DCM யாழ் நகர்

விசேட வகுப்பு
முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்பு
பிரிவு- I சனி மாலை 2.00 pm - 5.30 pm
பிரிவு- II ஞாயி காலை 10.00 am - 12.30 pm
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
077 469 6695

தொடர் பரீட்சையும் கருத்தரங்கும்
VMEU
இரண்டாம் பரீட்சை M.C.Q
கணக்கீடு
AP.பகீரதன்
நவம்பர் 6இல் 8-10
அனுமதிகள் DCM யாழ் நகர்

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்
SLAS
ஞாயிறு 9.00 மணி
முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு I ஞாயிறு 1.30மணி
பிரிவு II புதன் 3.00 மணி
சனி 1.00மணி
ஞாயிறு 9.00மணி
ஆரம்பம் சனி(1/11) பி.ப 2.00 மணி
T.P : 0754164564
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

அறை வாடகைக்கு தேவை
தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கும் ஆண் ஒருவருக்கு யாழ் நகரில் அறை வாடகைக்கு தேவை
தொடர்பு-0779592628

Group Classes
English,கணிதம்,
விஞ்ஞானம் Gr-3-O/L
T.P - 0773314608

A/Lபொருளியல்
MCQ
Book-1 Book-2 Book-3 } தரம் 12
Book-4 Book-5 Book-6 } தரம் 13
ஏனைய நூல்கள்
வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை

ஞாயிற்றுக்கிழமைகளில்
திசைகாட்டிக்கு விடுமுறை



எதிர்வரும் நவம்பர் மாதம் முதல்
ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும்
திசைகாட்டி ஓய்வாக இருக்கும் என்பதை அனைத்து அன்புள்ளங்களுக்கும் அறியத்தருகின்றோம்.
ஏனைய 6 நாள்களும் (அரச, பொது விடுமுறை தினங்கள் உட்பட) காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை உங்கள் வருகைக்காக திறந்திருக்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
செல்வி. V. இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
இல. 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
பதிவு இலக்கம் : Pv 82703 தொலைபேசி: 021 221 9016

பொருளியல்
S.ஜெயகுமார்.
B.A(Hons) Eco spl. M.A in Eco(Pera) P.G.D.E
A/L 2015
பேரினப் பொருளாதாரச் சமநிலை
A/L 2016
பொருளாதார அறிமுகம் (மீட்டல்)
ஆரம்பம் 01.11.2014 சனி 11.00 a.m
DCM யாழ்நகர்

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் யாழ்ப்பாணம்
கே.கே.எஸ் றோட், இணுவில்
(இரு இடத்திலும்)
A/L 2015, 2016
வணிகக்கல்வி
ஆசிரியர் -
S.பிரதீபன்
M.com.PGDE, HNDA
சனி, ஞாயிறு இரு இடத்திலும் நடைபெறுகின்றன.
★புதிய அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஊடகவியல்
A/L 2015
Paper Class
சனி, ஞாயிறு
பிரிவு-I 7.00 a.m
பிரிவு-II 9.00 a.m
ஆரம்பம்:
01.11.2014
என்.கஜிதரன்
B.A (Hons) Spl.in
Mediastudies
பொருளியற்கல்லூரி
இணுவில்.

அமெரிக்க அதிஸ்ட விசா- V2 Travels
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
இன்னும் 3 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

சிங்கள வகுப்பு
எழுத, பேச, வாசிக்க
அடிப்படையில் இருந்து
பிரிவு II
ஆரம்பம் 01.11.2014 1pm
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.